بسم الله الرحمن الرحيم

"

மார்க்கத்திலிருந்து
நூஹுக்கு எதனை
அவன் உபதேசித்தானோ
அதனையே
உங்களுக்கும் அவன்
மார்க்கமாக்கியுள்ளான்.
(நபியே!) உமக்கு நாம்
வஹீ அறிவித்தோமே
அதுவும், இன்னும்
எதனை இப்ராஹிமுக்கும்,
மூஸாவுக்கும், ஈஸாவுக்கும்
நாம் உபதேசித்தோமோ
அதுவும் என்னவெனில்
"இம்மார்க்கத்தை
நிலை நாட்டுங்கள் ;
இதில் நீங்கள் பிரிந்து
விடாதீர்கள்" என்பதாகும்.
(அல்குர்ஆன் - 42:13)

"


பெருமானார் (ஸல்) அவர்களின் உரை... - 4

உங்களுடைய நோன்பு எந்த வகை..? - 6

சிரியாவில் மீண்டும் குண்டு மழை!
அமெரிக்காவின் ரவுடித்தனம் - 8

சுதந்திர இந்தியாவில் நீதித்துறையின்
இருண்ட காலம் - 14

சிலுவை யுத்தம் 2.0 - 23

ஒரு இஸ்லாமிய பிரச்சாரகரின்
வாழ்க்கை வரலாறு..! - 26

இஸ்லாமிய வங்கி முறை - சலம் - 34

இஸ்லாம், அரசியல், அதிகாரம்
அரபுலக எழுச்சி - 35

தீண்டாமைக்குள்ளே தீண்டாமை..! - 37

எது முதலில் ? - 40

38-ஆம் ஆண்டில் தாஃவா - 43



மே-2018

# வைகறை வெளிச்சம்

ரமலான்-1439

ஆசிரியர்
**மு. குலாம் முஹம்மது,** M.A.,
Journalism & Mass Communication

துணை ஆசிரியர்
**கே.எம். இலியாஸ் ரியாஜி,** M.A.,

தனி இதழ் : ரூ. 20 /-
ஆண்டுச் சந்தா
உள் நாடு : ரூ. 240 /-
வெளி நாடு : ரூ. 3000 /-
பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
**DARUL ISLAM FOUNDATION TRUST**
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு 81481 29887



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdiction of Chennai courts.



**VAIGARAI VELICHAM**
52/1, Mannady Street, Room No. 7, Mannady,
Chennai - 600 001. Tel : 81481 29887
Email : darultrust@yahoo.com
Web : www.darulislam.in

http:/www.facebook.com/vaigarivelicham

# பெருமானார் (ஸல்) அவர்களின் உரை...

## பெருமானார் (ஸல்) அவர்கள் ரமழான் மாதத்திற்கு முந்தைய ஷாபான் மாதத்தின் கடைசி வெள்ளிக்கிழமையில், ரமழானை வரவேற்று ஆற்றிய உரை.

மக்களே! உங்களுக்கு எதிரே அருளை அள்ளி வழங்கிடும் ஒரு மாதம் வருகின்றது. அது அருளின் மாதம், கருணையின் மாதம், பாவமன்னிப்பை வழங்கிடும் மாதம். எல்லா மாதங்களின்றும் (அல்லாஹ்விடம்) சிறந்த மாதம். அதன் நாட்கள் ஏனைய எல்லா நாட்களையும் விட சிறந்த நாட்கள். அதன் இரவுகள் இரவுகளிலெல்லாம் சிறந்த இரவுகள். அதன் மணித்துளிகள். மணித் துளிகளிளெல்லாம் சிறந்த மணித் துளிகள்.

அது அல்லாஹ்வின் விருந்தினராக ஆகிட உங்களை அழைக்கும் மாதம். அது அல்லாஹ்வுடன் நெருங்கி இருப்பவர்களோடு நீங்களும் இருக்க உங்களை அழைக்கும் மாதம். நீங்கள் விடும் ஒவ்வொரு மூச்சும் அல்லாஹ்வின் புகழைப்பாடுகின்றது. உங்களுடைய தூக்கம் ஒரு வணக்கம். உங்களுடைய செயல்கள் அனைத்தும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

உங்களுடைய வேண்டுதல் களுக்கு துஆக்களுக்குப் பதில் அளிக்கப்படுகின்றது. ஆகவே உங்கள் அல்லாஹ்விடம் ஆரோக்கியமான உடலைத் தந்திடும்படி கேளுங்கள். உங்கள் இதயத்தை விசாலாமாக்கித் தரும்படி கேளுங்கள், இதன் வழி நீங்கள் நோன்பு நோற்கும் தினத்தில் ஆரோக்கியத்தையும் அவனுடைய அருள்மறையை ஓதும் ஆரோக்கியத்தையும் கேளுங்கள், பெறுங்கள். இந்த மாண்புமிகு மாதத்தில் பாவமன்னிப்பைப் பெற முடியாதவர்களே, சோகத்திற்குச் சொந்தக்காரர்கள். அந்த நியாயத் தீர்ப்பு நாளின் பசியையும், தாகத்தையும், நோன்பு காலத்தின் பசியோடும், தாகத்தோடும் ஒப்பிட்டுப் பாருங்கள்.

ஏழைகளுக்கு வாரி வழங்குங்கள், முதியவர்களை கண்ணியப் படுத்துங்கள், இளையவர்களிடம் இரக்கம் காட்டுங்கள். உங்களுடைய இரத்தப் பந்தங்களிடம் நல்ல உறவை வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் நாவைப் பேணுங்கள், பார்த்திட அனுமதிக்காத வற்றிலிருந்து உங்கள் பார்வையைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

கேட்கக் கூடாது என விலக்கப்பட்டவற்றிலிருந்து காதுகளைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். அநாதைகள் மீது அன்பு காட்டுங்கள், அதனால் உங்களின் மீது அல்லாஹ்வின் அன்பு காட்டப்படும்.



அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கேளுங்கள். துஆவிற்காக அல்லாஹ்விடம் உங்கள் கைகளை இந்த நேரங்களில் உயர்த் துங்கள். ஏனெனில் இவைதாம் நேரங்களிலெல் லாம் சிறந்தது. அல்லாஹ் தன் படைப்பினங் களை இந்த மாதத்தில் கருணையோடு பார்க் கின்றான். அவர்கள் கேட்பவற்றிற்குப் பதில் சொல்லுகின்றான். அவர்கள் அவனிடம் கேட்பவற்றையெல்லாம் கொடுக் கின்றான்.

மக்களே! உங்கள் ஆத்மாக்கள் உங்கள் செயல்களைச் சார்ந்தே இருக்கின்றன. ஆத்மாக் களை பாவமன்னிப்புக் கொண்டு விடுதலை செய்யுங்கள். அவற்றின் அழுத்தங்களை, பாரங்களை நீண்ட நேரம் “சஜ்தா” செய்வதன் மூலம் எளிதாக்குங்கள். இதை உங்கள் நினைவில் நிறுத்துங்கள். அல்லாஹ் தன் ஆளுமையைக் கொண்டு உறுதியளிக்கின்றான்.

“தொழுபவர், நீண்டநேரம் சஜ்தா செய்பவர் இவர்களுக்கு இந்த பிரபஞ்சத்தின் அதிபதியின் முன் அவர்கள் நின்றிடும்போது எந்தத் தண்டனையுமில்லை, எந்த பயமுமில்லை.

மக்களே! இந்த மாதத்தில் நோன்பு நோற்கும் ஒரு மனிதனுக்கு, நோன்பு துறக்க விருந்து தரும் ஒருவர், ஒருவரை விடுதலை செய்தவராவார். அவருடைய கடந்த கால பாவங்கள் மன்னிக்கப்பட்டு விடும். இதைக் கேட்டுக் கொண்டிருந்த சிலர் பெருமானார் (ஸல்) அவர்களிடம் சொன்னார்கள்.

எங்களில் எல்லோருக்கும் நோன்பாளிகளை அழைத்து விருந்து வைக்கும் அளவுக்கு வசதி இல்லையே?

இதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள்

“நீங்கள் நோன்பு துறக்க வைக்கும் விருந்து ஒரு மொனறு தண்ணீராக இருந்தாலும் அல்லாஹ் இந்தப் பெருங்கூலியைத் தருகின்றான்.”

இந்த மாதத்தில் சிறந்த ஒழுக்கங்களைப் பேணும் ஒருவர் ‘சிராத்’ பாலத்தை எளிதாகக் கடந்து விடுவார். அடுத்தவர்களின் குறை களுக்கு ஈடு செய்பவர் பலன் பல அடைவார்.

அல்லாஹ் நியாயத் தீர்ப்பு நாளில் அவர் மீது கொள்ளும் கோபத்தையும் குறைத்துக் கொள்வான்.

ஓர் அநாதையைக் கண்ணியப்படுத்து பவரை அல்லாஹ் நியாயத் தீர்ப்பு நாளில், கண்ணியப்படுத்துவான். தனது இரக்கத்தை விசாலப்படுத்துபவர் மீது நியாயத் தீர்ப்பு நாளில் அல்லாஹ் தன் இரக்கத்தை விசாலப் படுத்துவான்.

“தன் உறவினர்களின் உறவைத் துண்டிப் பவரிடமிருந்து அல்லாஹ் தன் இரக்கத்தை துண்டித்துவிடுவான். இந்த மாதத்தில் (ரமழான் மாதத்தில்) சிறப்பான தொழுகையை தொழு பவருக்கு அல்லாஹ் நரகத்தை தூரமாக்குவான். இந்த மாதத்தில் கூடுதலான நஃபிலான, பரிந்துரைக்கப்பட்ட ஒரு தொழுகையை நிறை வேற்றுபவருக்கு அல்லாஹ் 70 நபிலான பரிந்துரைக்கப்பட்ட தொழுகைகளின் நன்மையைக் கொடுப்பான்.

இந்த மாதத்தில் கடமையாக்கப்பட்ட தொழுகையை நிறை வேற்றுபவனுக்கு அல்லாஹ் 70 தொழுகைகளின் நன்மையைக் கொடுப்பான். இந்த மாதத்தில், அதிகமான தொழுகைகளை தொழுபவரின் சுமை நியாயத் தீர்ப்பு நாளில் எளிதாக்கப்படும்.

இந்த மாதத்தில் திருக்குர்ஆனின் ஒரு வசன த்தை ஓதுபவருக்கு இதர மாதங்களில் மொத்த திருக்குர்ஆனையும் ஓதிய நன்மை கிடைக்கும்.

மக்களே! இந்த மாதத்தில் சொர்க்கத்தின் வாசல்கள் திறந்திருக் கும். ஆகவே அல்லாஹ் விடம் உங்களுக்கு அதை ஒருபோதும் உங்களுக்கு மூடிவிட வேண்டாம் என துஆச் செய்யுங்கள்.

இந்த மாதத்தில் நரகத்தின் வாசல்கள் மூடியே இருக்கும். உங்கள் விஷயத்தில் அது எப்போதும் மூடியே இருக்கட்டும் என துஆச் செய்யுங்கள்.

இந்த மாதத்தில் ஷைத்தானை கட்டிப் போட்டிருப்பான் அல்லாஹ். அந்த ஷைத்தான் ஒருபோதும் உங்கள் மீது ஆதிக்கம் செலுத்திட அனுமதிக்க வேண்டாம் என துஆச் செய்யுங்கள்.

ஆதாரம் – “பைஹக்கி”
– MGM.
– நன்றி Islamic Voice 24th May 2017



# உங்களுடைய நோன்பு எந்த வகை?

**முஸ்லிம்களாகிய நாம் நோற்கும் நோன்பை இப்படி வகைப்படுத்துகின்றார்கள்.**

1) உணவு – முதல் உடலுறவு வரை துறத்தல்

2) உணவு முதல் உடலுறவு வரை அனைத்தையும் துறப்பதுடன், காது, கண், நாக்கு, கைகள், கால்கள் அனைத்தையும், பாவங்களிலிருந்து – பாவங்களில் ஈடுபடுவதிலிருந்து தவிர்த்துக் கொள்ளுதல்.

3) உணவு முதல் உடலுறவு வரை அனைத்தும் துறத்தல், காது, நாக்கு, கைகள், கால்கள் அனைத்தையும் பாவங்களிலிருந்து பாதுகாத்தல், அத்தோடு அல்லாஹ்வின் நினைவைத் தவிர எதையும் இதயத்தில் ஏந்திடாமல் இருப்பது. அதாவது எண்ணங்கள் நினைப்புகளில் இதயத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்வது, அல்லாஹ் அவன் மறுமையில் தரும் கூலி இவை அல்லாதவற்றைப் பற்றிய எண்ணங்கள்,

குறிப்பாக கீழான எண்ணங்கள் உள்ளத்தில் புகுந்திடுமேயானால் அவற்றால் நோன்பு முறிந்துவிடும் என அஞ்சுவது.

இஸ்லாத்தைப் பற்றியும் அதை எப்படி நாம் வாழும் பகுதியில் மேலோங்கச் செய்வது? எப்படி ஜாஹிலிய்யாவில் இருப் பவர்களை மீட்டு அவர்களையும் அல்லாஹ்வின் அடியார்களாக ஆக்கிடுவது என உள்ளுவது, இதனால் மரணத்திற்குப் பின்னால் வரும் வாழ்க்கையில் கிடைக்கும் நற்கூலிகளையே நினைவில் நிறுத்துவது,

இந்த உலகில், பற்றையும் பிடிப்பையும், ஏற்படுத்தும் எண்ணங்களை நினைப்புகளை தவிர்த்துக் கொள்வது, அதில் அல்லாஹ்வுக்காக நம்மை முழுமையாக அர்ப்பணிக்கும் மன நிலையைப் பெறுவது. உலகம் நரகம், மரணம், சொர்க்கத்தின் நுழைவுச்சீட்டு என்பதை நினைவில் நிறுத்துவது. இதன் வழி இந்த உலகில் அல்லாஹ் வழங்குபவற்றைக் கொண்டு மன நிறைவைப் பெறுவது. மனதை பேராசைகளிலிருந்து காத்துக் கொள்வது.

வீணான விவாதங்கள், பொய், அவதூறு, அரட்டைகள், புறம்பேசுவது இவற்றிலிருந்து தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

நோன்பின் காலத்தில் உணவு முதல் உடலுறவு வரை தவிர்த்துக் கொள்வது எந்த அளவு முக்கியமோ அதே அளவுக்கு மேலே

நாம் கூறியவற்றிலிருந்தும் தவிர்த்துக் கொள்வது முக்கியம்.

**வேண்டாம் - 1**

இறைவன் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் சொன்னதாக ஜாபீர் (ரழி) அவர் கூறுகின்றார்கள்.

ஐந்து செயல்கள் ஒரு மனிதரின் நோன்பை முறித்துவிடும். 'பொய் பேசுதல், புறங்கூறல், அவதூறாகப் பழி சுமத்துதல், ஆணையிட்டுப் பொய் சாட்சியம் சொல்லுதல், காமம் நிறைந்த பார்வை''

இதுபோன்ற வேண்டாதவற்றில் நாவை ஈடுபடுத்துவற்குப் பதிலாக நாவை அல்லாஹ்வை 'திக்ரு' செய்வதில் பலன் படுத்துங்கள் 'அல் ஹாக்கிம்'.

காமம் நிறைந்த பார்வைகள் ஷைத் தானின் அம்புகளுள் ஒன்றாகும். அவன் அதில் விஷத்தைத் தடவி இருக்கின்றான்.

**பெருமானார் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்...**

நோன்பு ஒரு கேடயம். அதனால், உங்களில் நோன்பு நோற்பவர்கள், அசிங்க மான சொற்களைப் பயன்படுத்திடக் கூடாது. முட்டாள்தனமாகப் பேசிடக்கூடாது. அவரை யாரேனும் தாக்கினால், அவமானப்படுத்தினால், அவர் "நான் நோன்பிருக்கின் றேன், நோன்பிருக்கின்றேன்" எனக் கூறிவிடவும். – (நூல் புகாரி, முஸ்லிம்)



**வேண்டாம் - 2**

பொய், அவதூறு, பழிசுமத்துவது இவற்றை யெல்லாம் பேசுவது என்பதை யெல்லாம் தவிர்ப்பது என்பது எவ்வளவு முக்கியமோ, பொய்யை அவதூறு, பழியை செவிமடுப்பதும் தவறானதே! அநியாயமாக ஈட்டியப் பொருள் களைஉண்பவனும், அதாவது தடுக்கப்பட்ட பொருள்களை உண்பவனும், பொய்யையும், புனைந்துரைகளையும் செவி மடுப்பவனும் சரி சமமானவனே! எனக் கூறுகின்றது அல்லாஹ்வின் அருள்மறை.

"அன்றியும், அவர்கள் பொய்யையே அதிகமாகக் கேட் போராகவும், விலக்கப்பட்ட பொருள்களையே விழுங்குவோராகவும் இருக் கின்றனர்" (5:42) அவதூறுகளை, பொய்களை, புனைந்துரைகளை கேட்ட வரும், சொல் பவரும், பாவத்தில் சரிசமமான பங்காளியே! நீங்களும் அவர்களைப் போன்றவர்களே (4:140)

**பெருமானார் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்...**

"புறங்கூறுபவனும், அதைக் கேட்பவனும் பாவத்தின் பங்காளிகளே" (அல், தபராணீ)

**வேண்டாம் - 3**

நமது கைகளையும், கால்களையும் உறுப்புக் களையும், வேண்டாத, விரும்பத் தகாத செயல் களில் ஈடுபடுத்தாதீர்கள். பாவங்களின் பக்கம் செல்ல விட்டு விடாதீர்கள். – விட்டால் நோன்பின் நற்கூலி களை இழந்து விடுவோம்.

**பெருமானார் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்...**

"எத்தனை பேருடைய நோன்பு வெறும் பசியாகவும், தாகமாகவும் மட்டுமே இருந்துவிடுகின்றது...? இந்த கவலையைப் பெருமானார் (ஸல்) வெளிப்படுத்தியதற்குக் காரணம் நோன்பு நோற்பவர் கள், நோன்பின் நுணுக்கமான விதிகளைப் பின்னுக்குத் தள்ளி விடுகின்றார் கள் என்பதுதான். அதில் ஹலாலான வருமான த்தில் ஈட்டிய உணவைக் கொண்டே எப்போதும் உண்ண வேண்டும். நோன்பு நிச்சியமாக ஹலாலான உணவைக் கொண்டே துறக்கப்பட வேண்டும் என்பதும் அடங்கும், என்பது அறிஞர்களின் கருத்து.

அதேபோல் இரவுப் பொழுதில் விழித் திருந்து இறைவனை வணங்கும் வணக்கங்களிலி ருந்து நம்மைப் பிறழச் செய்து அதிகமாகத் தூங்க வைக்கும் அளவிலான உணவுகளை உண்ண வேண்டாம். ●



# சிரியாவில் மீண்டும் குண்டு மழை!

# அமெரிக்காவின் ரவுடித்தனம்

## களமிறங்கிய அமெரிக்கக் கூட்டுப்படைகள்

சிரியாவில் தொடர்ந்து கொண்டிருக்கும் படுகொலையின் பின்னணியிலிருக்கும் சதிகளை நாம் தொடர்ந்து நமது வைகறை வெளிச்சம் மாதஇதழின் வழியாக அம்பலப் படுத்தி வருகின்றோம். 2011-ல் சிரியாவில் பிரச்னைகள் தொடங்கியது முதல் அது ஷியா சுன்னி மோதல்கள்தான் என்று தனது ஊடகங் களின் வழி இடைவிடாமல் பரப்புரை செய்து வருகின்றது யூதர்களும் கிறிஸ்தவ அமெரிக்க கூட்டாளிகளான மேற்கத்திய நாடுகள்.

ஆனால் உண்மையில் முஸ்லிம்களை முழுவதுமாக அழித்துவிடுவதற்கும் அகண்ட இஸ்ரேலை உருவாக்குவதற்கும் அதற்காக தற்போது அமெரிக்காவின் பொம்மை ஆட்சியை சிரியாவில் நிறுவுவதற்கும்தான் இத்தனை கொடூரங்களையும் நிகழ்த்தி வருகிறார்கள் என்பதை நாம் தொடர் பிரச் சாரத்தின் மூலமாகவும் எழுத்துக்களின் வாயிலாகவும் மக்கள் மன்றத்திற்கு எடுத்துச் சென்றோம். மக்கள் தெளிவடைந்திருக்கின் றார்கள் (அல்ஹம்துலில்லாஹ்)

அதுவும் கடந்த மாதம் அமெரிக்க, பிரிட்டன் மற்றும் பிரான்சின் கூட்டுப்படைகள் நடத்திய தாக்குதல்கள் நாம் உரக்க முழங்கி வந்த உண்மையை உறுதி செய்தன.

அதனை இங்கே விரிவாகப் பார்ப்போம்

இந்த வருடத்தின் தொடக்கத்திலிருந்தே அமெரிக்கா ஒரு தொடர் பிரச்சாரத்தில் ஈடு பட்டு வருகிறது. அது சிரியாவில் இருக்கின்ற பஷார் அரசு கிழக்கு கௌடாவில் தனது சொந்த மக்களுக்கு எதிராகவே ரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தி வருகிறது என்பதுதான்.

அதாவது சர்வதேச சட்டத்தின் அடிப்படை யில் ரசாயன ஆயுதங்கள் தடை செய்யப் பட்டவை. அவற்றை சிரியாவின் அரசு பயன் படுத்தி வருகிறது என்றும் இதில் 40க்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளார்கள் என்றும்

கூறுகிறது அமெரிக்காவும் மேலை நாடுகளும்.

அமெரிக்காவின் வெள்ளை மாளிகை அதை இப்படிக் குறிப்பிடுகின்றது "These are not the actions of man they are the crimes of a monsters instead"

இவை மனித இனத்தைச் சார்ந்தவர்கள் செய்கின்ற செயலே அல்ல. மாறாக அவை அரக்கர்களின் குற்றச் செயல்கள் என்றது.

ஆம், உலகத்தில் மனிதாபிமானத்தின் உச்சக் கட்டமாகவும் மனித உரிமைகளையெல்லாம் தவறாமல் தன்னாட்டிலும் பிற நாட்டிலும் பேணி வருவதுபோல் நடிக்கும் அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் நீலிக்கண்ணீர் வடிக்கின்றார்கள். முஸ்லிம்கள் உயிர் இழப்பிற்கு.

ஆம், இதை நாம் நம்பியே ஆக வேண்டும் என்கிறார்கள். ஈராக்கிலும் ஆப்கானிஸ்தாலும் 3.5 லட்சம் முஸ்லிம் குழந்தைகளை மட்டும் பிணங்களாக்கி மகிழ்ந்தவர்கள். மனித உரிமைகள் என்ற வார்த்தையின் குத்தகைக்காரர்கள்.

ஆதாரம் - நியூஆர்க் டைம்ஸ் 23 ஜனவரி 2018

## ரசாயன ஆயுதங்கள் - அமெரிக்காவின் கூப்பாடு

2013-லிருந்தே சிரியாவில் பஷார் அரசு ரசாயன ஆயுதங்களை பயன்படுத்தி வருகிறது என்று குற்றம் சாட்டி வருகின்றது அமெரிக்கா. ஆனால் இதுவரையில் அவர்களால் எந்த ஆதாரத்தையும் தந்திட முடியவில்லை. இதை அமெரிக்காவின் பாதுகாப்புத் துறை செயலர் கேம்ஸ் மேட்டீஸ் கூறிடும்போது "That there is no evidence that the Syrian government used sarin gas on its own people"

சிரியா அரசு தனது சொந்த மக்களின் மீது (ரசாயன வாயுவான) சாரின் வாயுவை பயன் படுத்தியது என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்றார்.

மேலும் அவர் குறிப்பிடும்போது

"We have other reports from the battlefield from people who claims it is this being used but we don't have evidence on it"

ரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதாக போர்க்களத்திலிருந்து வேறு சில தகவல்களும் எங்களுக்குக் கிடைத்துள்ளது. ஆனால் அதற்கு எங்களிடம் எந்த ஆதாரமுமில்லை.

ஐக்கிய நாடுகள் சபை ஏற்படுத்திய விசாரணைக் குழுவாலும் கூட சிரியாவின் அரசாங்கம் ரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தியுள்ளதற்கு எந்த ஆதாரமும் தந்திடவில்லை. ஆனால் இந்தக் குற்றச்சாட்டை அமெரிக்கா அரபு நாட்டு ஆட்சியாளர்கள் மீது சுமத்துவது ஒன்றும் புதிதல்ல. அதற்கான காரணத்தை அரிய வேண்டுமென்





றால் ஈராக் யுத்தத்தை நாம் திரும்பிப் பார்க்க வேண்டும்.

ஆதாரம் - https://www.globalresearch.ca/video-no-chemical-weapons-used-by-assad-in-syria-reality-check/5630573

## அமெரிக்காவின் ஈராக் படுகொலைகள்

ஈராக்கின் அப்போதைய ஆட்சியாளர் சதாம் உசேன் குருதுகள் வசிக்கும் பகுதியான ஹலப் ஜாவில் 1990-இல் தொடர்ச்சியான ரசாயன தாக்குதலை நடத்தியதாகக் குற்றம் சுமத்தி ஈராக்கை கபளீகரப்படுத்தினார்கள் வெள்ளைக் கிறிஸ்தவ அமெரிக்கா பிரிட்டன் படைகள். இவர்கள் முஸ்லிம்களை கொலை செய்வதற்கும், முஸ்லிம் நாடுகளை ஆக்கிரமிப்பதற்கும் தவறாமல் ஒரு காரணத்தை சொல்வார்கள்.

2003-இல் சதாம் உசேனிடம் "WMD" Weapons of Mass Destruction பேரழிவுகளை ஏற்படுத்திடும் ஆயுதங்கள் இருப்பதாகச் சொன்னார்கள். அதனால் உலகத்திற்கே ஆபத்து என்றார்கள். ஆனால் அதை ஆய்வு செய்த ஐக்கிய நாடுகள் சபையின் குழு தந்த அறிக்கையில் பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்கள் பயன்படுத்தியதற்கான எந்தத் தடையங்களும் அங்கே இல்லை.

அமெரிக்காவும் பிரிட்டனும் அங்கே கைப்பற்றிய இடங்களிலிருந்தும் எந்த பேரழிவு ஆயுதங்களும் கைப்பற்றப்படவில்லை என்றது. ஆனாலும் சதாம் உசேனை தூக்கிலிட்டார்கள்.

பிறகு எந்த நிலைக்கு ஈராக்கை தள்ளி னார்கள் என்பதை உலகம் அறியும். இப்போது அதே உத்தியைத்தான் சிரியாவிலும் பயன் படுத்துகிறது யூதர்களுக்கு சேவை செய்யும் வெள்ளை கிறிஸ்தவ அமெரிக்காவும் பிரிட்டனும் பிரான்சும்.

ஆதாரம் - The Guardian 14, November 2005

## ரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தியது யார்?

தன் சொந்த மக்களின் மீதே ரசாயன தாக்குதலை பஷார் அரசு நடத்தி வருகிறது என்று நீலிக்கண்ணீர் வடிக்கும் அமெரிக்கா தான் 2013-ல் சிரியாவில் உள்ள ஆயுதக் குழுக்களுக்கு தாராளமாக ரசாயன ஆயுதங்களைத் தந்து உதவியது. இதை ஆங்கிலப் பத்திரிகையாளர் ஸ்டீபன் லென்மேன் இப்பக் கூறுகிறார்.

"The fact is that the western states and regional countries. have directly or indirectly supplied banned poisonous substances to militants, terrorists and extremesits active in syria, along with western, israel made weapon and other material supports"

உண்மை என்னவென்றால் மேற்கத்திய நாடுகளும் பிராந்திய நாடுகளும் நேரடியாகவும் மறைமுகமாவும் சிரியாவில் செயல்படுகின்ற போராளிக் குழுக்களுக்கும் தீவிரவாதிகளுக்கும் தடை செய்யப்பட்ட விஷப் பொருட்களை தந்து உதவினார்கள். இந்த ஆயுதங்களே Free Syrian Army, ISIS போன்ற அமைப்புகளின் கைகளில் காணப்படுகின்றது.

இந்தப் பிரச்சனை அதாவது, ரசாயன ஆயுதங்களும், இன்னும் பிற ஆயுதங்களும் சிரியாவில் இருக்கின்ற ஆயுதக் குழுக்களுக்கு அமெரிக்காவால்தான் வழங்கப்படுகின்றது என்பது ஐக்கிய நாடுகள் சபையில் விவாதப் பொருளாக உருவெடுத்து அதை விசாரிப் பதற்கு ஒரு குழு அமைத்திட வேண்டும் என்று குரலெழுந்தபோது அமெரிக்கா அதை ஏற்றுக் கொள்ளாமல் மறுத்துவிட்டது.

ஆக நாம் இங்கே பார்க்க வேண்டிய விஷயம் என்னவென்றால் முஸ்லிம் நாடுகளை ஆக்கிரமிப்பு செய்கின்ற போது அமெரிக்கா வாக இருந்தாலும் ரஷ்யாவாக இருந்தாலும் முஸ்லிம்களை சித்திரவதை செய்து மகிழ் வார்கள். அதில் ஒரு பகுதிதான் ரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தி முஸ்லிம்களை முற்றாக அழித்திட முயல்வது.



ஆதாரம் - https://www.globalresearch.ca/us-and-uk-supplied-chemical-weapons-to-terrorists-in-syria/5604617/amp

Syria: US and UK Illegally Supplied Chemical Weapons to Proxies https://www.telesurtv.net/english/news/Syria-US-and-UK-Illegally-Supplied-Chemical-Weapons-to-Proxies-20170818-0006.html

https://www.realclearpolitics.com/video/2018/04/09/syrian_ambassador_at_un_us_gave_terrorists_chemical_weapons_we_are_witnessing_a_hollywood_scene.html

## ஈராக் யுத்தத்தில் ரசாயன ஆயுதங்கள்

2003-இல் அமெரிக்கா ஈராக்கில் அப்பாவி மக்களுக்கெதிராக White Phosphorus and napalm போன்ற ரசாயன ஆயுதங்களை பயன்படுத்தியதை ஒரு இத்தாலிய தொலைக்காட்சி பதிவு செய்தது. இவற்றை பிரிட்டனின் House of Commons என்று சொல்லப்படுகின்ற மக்களவையில் கேள்வியாகவே முன் வைத்தார் அலய்ஸ் மகான் என்கின்ற தொழிலாளர் எம்.பி.

மற்றொரு பிரிட்டன் எம்.பி. ஹரிகோகன் தனது கடிதத்தின் வழி இப்படியொரு கேள்வியை பிரிட்டன் எம்.பி.க்களிடம் வைத்தார். அது சதாம் உசேனிடம் ரசாயன ஆயுதங்கள் இருக்கின்றது. அதை ஒருநாள் பிற நாடுகளுக்கெதிராக பயன்படுத்தக் கூடும் என்றும் அவருடைய அடக்குமுறை ஆட்சியிலிருந்து ஈராக் மக்களை விடுதலை பெறச் செய்ய வேண்டும் என்றும் இந்த இரண்டு காரணங்களைக் கூறியே நீங்கள் ஈராக் மீது போர்த் தொடுத்தீர்கள்.

ஆனால் இப்போது ரசாயன ஆயுதங்களை ஈராக் மக்களின் மீது நீங்கள் பயன்படுத்து என்ன நியாயம் என்றார்.

ஆதாரம் - The Guardian 14, November 2005

## செசென்யா யுத்தம்

ரஷ்யா செசென்யா முஸ்லிம்கள் மீது தொடுத்துவரும் யுத்தம் இன்னும் நின்றபாடில்லை. 1999-ல் டிசம்பர் 6, அதிகாலையில் செசென்யாவின் தலைநகரில் ரசாயன குண்டுகளை வீசிடத் தொடங்கியது ரஷ்யா. முதல் தாக்குதலில் மட்டும் 37 பேர் பலியாகினர். 200-க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.





முஸ்லிம் கிராமங்களையும் நகரங்களையும் குண்டு மழைகளைப் பொழிந்து நாச மாக்கியது. சர்வதேச விதிமுறைகளையெல்லாம் மீறியதற்கு ரஷ்யாவை அமெரிக்காவோ, மேலை நாடுகளோ அப்போது எந்தக் கேள்வியையும் கேட்பதற்கு தயாராக இல்லை.

மாறாக அப்போதைய அமெரிக்க அதிபர் பில்கிளிண்டன் ரஷ்யா தொடுத்து வந்த யுத்தத்திற்கு நிதி உதவி செய்தார். காரணம் அங்கே கொல்லப்படுவது முஸ்லிம்கள். அந்தக் கொலைகளை யார் செய்தால் என்ன? உதவிக் கரம் நீட்டுவோம் என்பதே வெள்ளைக் கிறிஸ்தவ அமெரிக்காவின் கொள்கை. ஆனால் இப்போது சிரியாவில் பஷார் அரசு செய்துவரும் அநியாயங் களுக்கு எதிராக எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ரஷ்யா ஒத்துழைக்க வேண்டும் என்கிறார்கள்.

அதாவது செசென்யாவில் முஸ்லிம்களை கொலை செய்தபோது நாங்கள் எப்படி உதவி செய்தோமோ அதேபோல் நீங்களும் செய்ய வேண்டும் என்கிறார்கள்.

ஆதாரம் - https://www.globalsecurity.org/military/library/news/1999/12/991206-chechen-news.htm
- War on Islam by Enwar Massud

## உளவு அமைப்புகளின் கையிருப்பு வேலைகள்

சிரியாவில் நடந்து கொண்டிருக்கும் படுகொலைகளைக்கு பின்னணியில் இருப்ப வர்கள் ரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்து பவர்கள் சிரியாவில் இருக்கும் யூத, கிறிஸ்தவ நாடுகளில் உளவுத் துறையினர்தான்.

2012-ல் பாபாஅம்ர் என்ற பகுதியில் சிரியா அரசாங்கம் 700-க்கும் மேற்பட்ட துப்பாக்கி ஏந்திய ஒரு குழுவை சுற்றி வளைத்தது. அவர்கள் அனைவரும் ஆயுதங்களோடு சிரியா அரசிடம் சரணடைய வேண்டிய கட்டாயத்திற்கு ஆட்பட்டார்கள். அந்தக் குழுவில் அரபுகள் மட்டுமல்ல ஐரோப்பாவைச் சார்ந்தவர்கள் அதிகமானோர் அங்கம் வகித்தனர் என்பது உலமறிந்த உண்மை. அப்போது அவர்கள் வைத்திருந்த ஆயுதங்கள் அனைத்தும் இஸ்ரேல் அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் உற்பத்திச் செய்யப்பட்டவை என்பது தெரியவந்தது.

இப்படி பல்வேறுக் குழுக்கள் சிரியாவில் செயல்பட்டு வருகிறது. அவை அனைத்தும் உளவு நிறுவனங்களான CIA, Mossad, MI6 போன்ற அமைப்புகளால் வழி நடத்தப்படுகின்றன. இதில் பிளாக் வாட்டர் எனும் அமெரிக்காவின் கூலிப்படையின் பங்களிப்பு அலாதியானது. (பிளாக் வாட்டரைப் பற்றி விரிவாகப் படிக்க 2018 மார்ச் வைகறை வெளிச்சம்)



ஆதாரம் - https://www.huffingtonpost.co.uk/2012/03/07/syria-uprising-mossad-blackwater-and-cia-led-operations-in-homs_n_1326121.html

## பி.கே.கே. (PKK) பேசிய உண்மைகள்

அமெரிக்காவிலும் ரஷ்யாவிலும் தடை செய்யப்பட்ட அமைப்புதான் பி.கே.கே. என்ற அமைப்பு. இது பொதுவுடமை சித்தாந்தம் கொண்ட குர்து இன தேசியம் பேசிடும் அமைப்பு. ஆனால் இதை சிரியாவில் நிதியும் ஆயுதங்களையும் பயிற்சிகளையும் தந்து வளர்த்து வருகிறது அமெரிக்கா. இதிலே அதிகமாக பெண்களும் அங்கம் வகிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்களை வைத்தே துருக்கியின் எல்லையிலும் சிரியாவிலும் நிலங்களை கையகப்படுத்திட வேண்டுமென்பதே இவர்களின் நோக்கம். அதாவது குர்து தேசியம் பேசும் பெயர் தாங்கி முஸ்லிம்களை வைத்தே சக முஸ்லிம்களை கொலை செய்கின்ற, நிலங்களை ஆக்கிரமிப்புச் செய்கின்ற முயற்சியில் தோல்வியுற்றால் அமெரிக்காவே இந்தப் பெண்களை கொலை செய்துவிட்டு பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை என்ற கூப்பாட்டைப் போட்டு, இதைக் காரணம் காட்டி நேரடியாகக் களத்தில் குதித்து விடுவார்கள். இதுவே இவர்களின் திட்டம்.

இந்த பி.கே.கே. என்ற அமைப்பு இப்போது ஒய்.பி.ஜி. (YPG) என்ற பெயரிலே அங்கே செயல்பட்டு வருகிறது. அதன் தலைவர் குறிப்பிடும்போது "அமெரிக்கா இன்னும் 10 வருடங்கள் இங்கு நிலைக்க வேண்டும் என்றே நாங்கள் விரும்புகிறோம். இப்போது வடக்கு சிரியாவில் மட்டும் அமெரிக்காவின் 7 இராணுவத் தளங்கள் உள்ளன" என்ற உண்மையை உலகறியச் செய்தார். இவர்களின் இலக்கு துருக்கி வரை செல்கின்றது.

ஆதாரம் - US-Backed Kurdish YPG Reveal: U.S. Military to Stay in Syria 'For Decades' https://www.telesurtv.net/english/news/US-Backed-Kurdish-YPG-Reveal-U.S.-Military-to-Stay-in-Syria-For-Decades-20170817-0032.html

## உண்மைதான் என்ன?

சிரியா இப்போது அமெரிக்கா மேலை நாடுகள் மற்றும் ரஷ்யா போன்ற நாடுகள் தங்கள் ஏவுகணைகளையும் ஆயுதங்களையும் சோதனை செய்துப் பார்க்கும் களமாக மாறி விட்டது. தான் தயாரிக்கும் புதிய ஆயுதங்களை எல்லாம் சிரியாவில் சோதனை செய்து, அதாவது சிரியாவில் உள்ள அப்பாவி மக்களின் மீது பயன்படுத்தி அதைக் காண்பித்து பிற நாடுகளிடம் விற்பனை செய்து வருகிறார்கள். அதில் முன்னணி வகிக்கும் நாடுகள் அமெரிக்காவும் ரஷ்யாவும்தான்.

உண்மையில் சிரியாவில் அதிகமான உயிர்ச் சேதங்களை ஏற்படுத்தியது பஷார் அரசோ அல்லது அவனை எதிர்க்கும் ஆயுதக் குழுக்களோ அல்ல அமெரிக்காவும் ரஷ்யாவும்தான் என்கிறது ஐக்கிய நாடுகள் சபை ஏற்படுத்திய குழுவின் ஆய்வறிக்கை.

இந்த இரு நாடுகளுமே முஸ்லிம்களைக் கொலை செய்வதற்கு ரசாயன ஆயுதங்களை அங்கேப் பயன்படுத்தி இருக்கின்றார்கள். இப்போது மாறி. மாறி மாற்று பழிபோட்டு மென்மேலும் முஸ்லிம்களின் உயிரைக் குடித்துக்கொண்டு இருக்கின்றார்கள்.

ஆக ரசாயன ஆயுதங்களின் பயன்பாடு என்று யூதர்களும் அவர்களுக்கு சேவை செய்யும் வெள்ளைக் கிறிஸ்தவ அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகளும் போடும் கூப்பாடு சிரியாவில் தனது முழு பலத்தையும் பயன்படுத்தி தங்களின் பொம்மை ஆட்சியை நிறுவவதைத் தவிர வேறு எந்த நோக்கமும் இல்லை.

ஆதாரம் - https://www.trtworld.com/middle-east/un-blames-us-and-russia-for-war-crimes-in-syria-15731

http://www.middleeasteye.net/news/russia-and-us-coalition-killed-syrian-civilians-large-scale-un-inquiry-finds-4046561

**- இம்தியாஸ் அஹ்மத்**



## சுதந்திர இந்தியாவில்

# நீதித்துறையின் இருண்ட காலம்

நரேந்திர மோடி இந்தியாவின் பிரதமராக பதவியேற்றதில் இருந்து இந்தியாவின் நீதித்துறைக்கு பிடித்தது கஷ்டகாலம். இந்துத் துவாவின் பஜனைகளுக்கு பக்கவாத்தியம் வாசிக்கும் நிலைக்கு இந்திய நீதித்துறையை மோடியும் அவரது சகாக்களும் கொண்டு வந்து விட்டனர். நீதித்துறை தன் இயல்புகளில் இருந்து மாறி இயங்க தொடங்கியது.ஒரு கட்டத்தில் நீதிமன்றங்கள் மோடியின் பேரவைகளாகவே மாறிப்போயிட்டனவா, என மக்கள் மயங்கும் அளவுக்கு நிலைகெட்டுப் போனது.

உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக தீபக் மிஷ்ரா பதவியேற்றது இவர்களுக்கு இன்னும் வசதியாகப் போனது. பல முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகள் நாட்டின் போக்கையே மாற்றக்கூடிய வழக்குகள் உச்சநீதிமன்றத்தில் அப்பட்டமான குற்றவாளிகளுக்க சாதகமான நீதிபதிகளிடம் ஒதுக்கப்பட்டன. அது மட்டு மல்ல அவர்களுக்கு சாதகமான தீர்ப்புகளும் பெறப்பட்டன. குற்றவாளிகள் உத்தமர்களாகக் காட்டப்பட்டார்கள் உச்ச நீதிமன்றத்தில்.

சில இடங்களில் இவர்களுக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கிய நீதிபதிகள் பின்னர் ஆளுனர் களாக பதவியேற்றனர். பாதகமாக தீர்ப்பு வழங்குவார்கள் என கருதப்பட்ட நீதிபதிகள் சிலர் வழக்கிலிருந்து நீக்கப்பட்டனர். மாற்ற முடியாத நிலையில் இருந்த நீதிபதி லோயா தீர்த்து கட்டப்பட்டார். அவருக்கு 100 கோடி ரூபாயை லஞ்சமாக தர பேரம் பேசிய மும்மை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி எந்த கேள்வியும் கேட்கப்படாமல் சுதந்திரமாக விடப்பட்டார்.

இதை சில நீதிவான்களும் கவனித்து கொண்டு தான் இருந்தனர். பல மூத்த நீதிபதிகள் கன்னத்தில் கை வைத்து கவலையோடு வேடிக்கை பார்க்க, உச்ச நீதிமன்றத்தின் நான்கு நீதிபதிகள் குரியன் ஜோசப், ஜே.செலமேஸ்வர், ரஞ்சன் கோகோய், மதன் பி. லோகூர் ஆகியோர் உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதிக்கு எதிராக வெளிப் படையாகவே பத்திரிகை யாளர்களை சந்தித்தனர். அப்போது அவர்கள் வெளி யிட்ட கருத்துகள் மிக முக்கிய மானவை.

தலைமை நீதிபதிக்கு எதிராக அவர்கள் முன்வைத்த வாதங்கள் மிக அழுத்தமானவை. தேசம் எவ்வளவு மோசமான ஆபத்தில் உள்ளது, எவ்வளவு கொடியவர்களிடம் சிக்கி இருக்கிறதுஎன்பதை நிதர்சனமாக எடுத்து காட்டுபவை.

இந்திய தேசத்தின் சுதந்திரத்திற்கு பின் உள்ள வரலாற்றில் இப்படியொரு நிகழ்வு நடந்ததே இல்லை. நடக்கவே முடியாதது. நடக்கவே கூடாதது. ஆனால் மோடியின் ஆட்சியில் இது நடந்தேறியது.

### ஜனநாயகம் உயிர் பிழைக்காது

நான்கு நீதிபதிகளில் ஒருவரான நீதிபதி செல்மேஸ்வர் இப்படியே இதனை கூறினார், "கடந்த சில மாதங்களாக உச்சநீதிமன்றத்தில் நடந்து கொண்டிருப்பவை எதுவும் முறையாக இல்லை. இந்த நிறுவனம் (உச்ச நீதிமன்றம்) காப்பாற்றப்படவில்லை என்றால் நாட்டில் ஜனநாயகம் உயிரோடு இருக்காது"

"இது நீதிமன்ற வரலாற்றில் ஓர் அசாதார ணமான நிகழ்வு.கடந்த சில மாதங்களாக உச்ச நீதிமன்றத்தில் நடந்து கொண்டிருப்பவை எதுவும் விரும்பதக்கதாக இல்லை, சில நேரங் களில் உச்ச நீதிமன்றத்தின் நிர்வாகம் முறையாக வும் இல்லை."

"இப்படி ஒரு பத்திரிகையாளர் சந்திப்பை நடத்துவது எங்களுக்கு பெருத்த மன வேதனையை தருகிறது. ஆனால் இந்த நிறுவனம் (உச்சநீதிமன்றம் ) காப்பாற்றப்பட வில்லையென்றால் ஜனநாயகம் உயிரோடு இருக்காது."

விரும்புகிறோம்.மிகுந்த வேதனையுடனும் அக்கறையுடனும் யோசித்து இந்த கடிதத்தை உங்களுக்கு எழுதுவது சரியென கருதுகிறோம்." என கூறியுள்ளனர்.

## வழக்குகள் ஒதுக்கீடு

"நாட்டிற்கும் உச்சநீதிமன்றத்திற்கும் மிகப் பெரிய விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய வழக்குகள் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியால் எவ்வித நியாயமுமின்றி அவர்களுக்கு வேண்டிய அமர்வுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதற்கு உதாரணங்கள் உள்ளன. எல்லா வகையிலும் இது தடுக்கப்படவேண்டும்"



"உச்சநீதிமன்ற தலைமை நீதிபதிக்கு சில விஷயங்கள் இப்போது முறையாக நடைபெற வில்லை என்பதை புரியவைப்பதில் நாங்கள் தோற்றுவிட்டோம். துருதிருஷ்டவசமாக எங்கள் முயற்சிகள் தோற்றுவிட்டன. சமீப காலத்தில் நடந்துள்ள பல விஷயங்களால் ஜனநாயகம் பேராபத்தில் உள்ளது என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்."

நான்கு நீதிபதிகளும் தலைமை நீதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில்,"இந்த நீதிமன்றத்தால் கொடுப்பப்பட்டுள்ள தீர்ப்புகள் சில நீதி வழங்கும் பரிபாலனங்களின் ஒட்டுமொத்த செயல்பாடுகளையும் உயர் நீதிமன்றங்களின் சுதந்திரத்தையும் எதிர்மறையாக பாதிக்கும் வகையில் உள்ளன என்பதை சுட்டிக்காட்ட

"எங்களின் இந்த செய்கை நாங்கள் இந்த நாட்டிற்கு பட்டுள்ள கடனை தீர்க்கும் வழி"

நீதிபதி கோகாய் தற்போதைய தலைமை நீதிபதிக்கு அடுத்ததாக வருகின்ற அக்டோபர் மாதம் தலைமை நீதிபதியாக பதவி ஏற்க வுள்ளவர்.

நாங்கள் நான்கு நீதிபதிகளும் தலைமை நீதிபதி தீபக் மிஷ்ராவிடம் எடுத்துக்கூறி உச்ச நீதிமன்றத்தின் மாண்புகளை காக்க அவருடைய வழிமுறைகளை சரிசெய்யும் படி கூறினோம். கடந்த சில மாதங்களாக நடந்தவற்றை அவரிடம் எடுத்து காட்டினோம்.சரி செய்ய முயன்றோம், ஆனாலும் பலனில்லை." "இன்றி லிருந்து 20 ஆண்டுகளுக்கு பிறகு, இந்த தேசம்,

நாங்கள் எங்கள் மனசாட்சியை விற்று விட்டோம் என்று கூறக்கூடாது."

"நாங்கள் கூட்டாக உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி தீபக் மிஸ்ராவிடம் உச்ச நீதிமன்றத்தின் நிர்வாகத்தில் சில விஷயங்கள் முறையாக இல்லை என்று சொல்ல முயற்சி செய்தோம். துருதிருஷ்டவசமாக எங்கள் முயற்சிகள் தோற்றுப்போயின. எனவே, நாங்கள் இந்த தேசத்தின் முன்னே சொல்கிறோம்" என்று கூறினார் நீதிபதி செலமேஸ்வர்.

"சில மாதங்களுக்கு முன் நாங்கள் நால்வரும் தலைமை நீதிபதியிடம் எங்களின் கையெழுத்திட்ட கடிதத்தை கொடுத்தோம். ஒரு சில குறிப்பிட்ட விஷயங்கள் குறிப்பிட்ட முறையில் தான் நடந்தேற வேண்டும் என நாங்கள் விரும்பினோம். ஆனால் அவை நடந்தேறிய விதம் உச்சநீதிமன்றத்தின் ஒற்றுமைக் குறித்து மேலும் பல கேள்விகளை எழுப்பி விட்டன." என்றும் அவர் கூறினார்.

https://www.thehindubusinessline.com/news/supreme-court-crisis-all-not-okay-democracy-at-stake-say-four-seniormost-judges/article10028921.ece

உச்சநீதிமன்ற தலைமை நீதிபதிக்கு எதிராக கண்டன தீர்மானம் கொண்டு வந்து அவர் பதவி நீக்கம் செய்யப்பட வேண்டுமா? என்ற கேள்விக்கு இந்த தேசம் அதை தீர்மானிக்கட்டும் என்று கூறினார்.

ஆனால் தேசமோ இப்போது இந்துத்துவா வாதிகளின் கைகளில். என்ன நடக்கும். அதுவே நடந்தது. ஆம். உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதிக்கு எதிராக எதிர்கட்சிகளால் கொண்டு வரப்பட்ட கண்டன தீர்மானம் துணை குடியரசு தலைவர் வெங்கய்யா நாயுடு அவர்களால் தள்ளுபடி செய்யப்பட்டது.

https://www.firstpost.com/india/venkaiah-naidu-rejects-congress-impeachment-motion-against-cji-dipak-misra-5-reasons-that-explain-the-decision-4442137.html

## இந்துத்துவா தீர்ப்புகள்

எவ்வளவு கடுமையான எச்சரிக்கை உச்ச நீதிமன்றத்தில் நான்கு நீதிபதிகளால் விடுக்கப்பட்டது. ஆனால் எருமை மாட்டின் மீது மழை பொழிவதை போல் மத்திய அரசும் உச்ச நீதிமன்றமும் இதனை எடுத்துக்கொண்டன. மக்கள் மன்றமும் வழமைப்போல் இதையும் ஒரு சாதாரண நிகழ்வாகவே எடுத்துக்கொண்டது.

இந்த நிகழ்வுக்கு பின்னரே பல முக்கியமான தீர்ப்புகள் பல்வேறு நீதிமன்றங்களில் குறிப்பாக உச்சநீதிமன்றத்தில் வழங்கப்பட்டன.

நீதிபதி லோயாவின் மரணத்தை ஆய்வு செய்ய கோரிய வழக்கு உச்சநீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது. வழக்குத் தொடர்ந்ததையே பெருங்குற்றம் என்றார்கள்.

குஜராத்தில் நரோடா பாடியா என்ற இடத்தில் பாழுங்கிணற்றுக்குள் தங்கள் உயிருக்கு பயந்து ஒளிந்து கொண்டிருந்த அப்பாவி முஸ்லிம்கள் முதியோர், பெண்கள், குழந்தைகள் என 97க்கும் மேற்பட்டவர்களை பெட்ரோல் ஊற்றி எரித்து கொலை செய்தவர் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்த நிலையில் உயிர்பிழைக்க கிணற்றை விட்டு மேலேறி வந்தவர்களை கல்லால் எறிந்து உள்ளே தள்ளி ஒட்டு மொத்தமாக கொலை செய்த ரத்தவெறி பிடித்த மாயா கோட்னானி என்ற மோடியின் பெண் அமைச்சர் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார்.

இவர் ஏற்கனவே கீழ் சிறப்பு நீதிமன்றத்தால் 28 ஆண்டுகள் சிறை தண்டனை வழங்கப் பட்டவர்.

இதே போல் நாட்டின் பல்வேறு இடங்களில் நடந்த குண்டுவெடிப்புகளை நிகழ்த்தியவன் நான் தான் என்று நீதிமன்றத்தின் முன் வாக்குமூலம் தந்த சுவாமி அசிமானந்த் என்பவன் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டான்.

## சுவாமி அசிமானந்தா நிரபராதி?

சுவாமி அசிமானந்தா என்றொருவர். இவர் குண்டுகளுக்கு குண்டுகளால் தான் பதிலடி தர வேண்டும் என்ற கொள்கையை கொண்டவர். இவரை இந்துத்துவாவாதிகள் கையில் எடுத்துக் கொண்டார்கள். ஆர்.எஸ்.எஸ். உறுப்பினரானார். ஆதிவாசிகளை இந்துத்துவாவாதிகளாக மாற்றும் வனவாசி கல்யாண் என்ற ஆர்.எஸ்.எஸ்.இன் கிளை இயக்கத்தில் சேர்ந்தார். பின்னர் இந்துத்துவாவாதிகளுடன் சேர்ந்து இவர் குண்டு



களை வெடிக்க செய்தார். நாடெங்கும் குண்டுகள் வெடித்தன. அப்பாவி மக்கள் பலர் மாண்டனர்.

குறிப்பாக இந்த குண்டுவெடிப்புகளின் மூலம் கொலை செய்யப்பட்டவர்கள் அனை வரும் முஸ்லிம்கள். ஆனால் ஆச்சரியப்படும் விதமாக இதில் குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டவர்களும் முஸ்லிம்களே.

கேட்டதற்கு முஸ்லிம்களில் சிலருக்கு வெறிபிடித்து விட்டது. அவர்கள் பாகிஸ்தானில் கைக்கூலி பெற்று இந்தியாவில் குண்டு வைத்தார்கள் என்று கதை விட்டார்கள்.

அப்படியானால் அவர்கள் கோயில்களில் தானே குண்டு வைக்க வேண்டும். அவர்கள் ஏன் தர்காக்களிலும் மஸ்ஜித்களிலும் குண்டு வைத்தார்கள் என்று ஒரு ஊடகமும் கேள்வி கேட்க வில்லை.

அப்படியொரு குண்டு வெடிப்பு 18,மே 2007ல் ஹைதராபாத்தில் உள்ள மெக்கா மஸ்ஜிதில் வெடித்தது. இதில் 9 பேர் மாண்டனர். 58 பேர் படுகாயமடைந்து இதற்கு இறந்தே போயிருக்கலாம் என்ற நிலைக்கு தள்ளப்பட்டனர். இதனையும் சத்தமில்லாமல் செய்தவர் சுவாமி அசிமானந்தா.

பின்னர் கர்கரே என்ற நேர்மையான அதிகாரி மாலேகான் குண்டு வெடிப்புகளை விசாரித்து நாடெங்கும் நடந்த குண்டு வெடிப்பு களுக்கு பின்னர் இருந்த இந்துத்துவா வாதிகளை கைது செய்தார். அதன் தொடர்ச்சி யாக என்.ஐ.ஏ. அசிமானந்தாவையும் கைது செய்தது. அவரை ஹைதராபாத்தில் சிறையில டைத்தது.

சிறையில் அவர் நன்னடத்தை கொண்ட ஓர் இளைஞனை, ஒரு முஸ்லிமை சந்தித்தார்., அவன் பெயர் கலீம். வயது முதிர்ந்த அசிமா னந்தாவிற்கு அவன் பல பணிவிடைகளை செய்தான். கலீமின் தன்மை அசிமானந்தாவை வெகுவாக கவர்ந்து விட்டது.

என்ன குற்றத்திற்காக அவன் சிறை தண்டனை பெற்றுள்ளான் என்று கேட்டார் அசிமானந்தா. மெக்கா மஸ்ஜித் குண்டு வெடிப்பிற்காக தான் கைது செய்யப்பட்டுள்ள தாக கூறினான் கலீம். அவன் சொன்ன பதில் அவரை அசைத்து விட்டது.

இவ்வளவு நற்பண்புகள் கொண்ட ஒருவன் தான் செய்த குற்றத்திற்காக சிறையிலிருப்பது அசிமானந்தாவை உறுத்தியது. இறுதியில் அவர் நீதிமன்றத்தில் நீதிபதிக்கு முன் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அனைத்து குண்டு வெடிப்புகளையும் தான் செய்ததாக ஒப்புக் கொண்டார். அதில் பங்கேற்ற மற்ற ஆர்.எஸ்.எஸ் மற்றும் இந்துத்துவாவாதிகளின் பெயர்களையும் போட்டுடைத்தார்.

நீதிபதி அவரிடம் யாரும் உங்களை மிரட் டினார்களா என்று கேட்ட போது அடலும் அத்வானியும் என்னை மிரட்ட முடியாத போது யார் என்னை மிரட்ட முடியும் என்று தெளிவாக வாக்குமூலம் அளித்தார் அசிமானந்தா.

அப்படி வாக்குமூலம் அளித்தவரை தான் இப்போது நிரபராதி என நீதிமன்றம் விடுவித் துள்ளது.

## காணாமல் போன அசிமானந்தாவின் வாக்குமூலம்

அசிமானந்தா விடுதலை செய்யப்பட முக்கியமான காரணம் ஒரேயொரு ஆதாரத் தைக்கூட அசிமானந்தாவிற்கு எதிராக என்.ஐ.ஏ. எனப்படும் தேசிய புலனாய்வு நிறுவனம் அளிக்காததே. ஒருபடி மேலே சென்று அவராக அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தையும் அவர்கள் காணாமலடித்து விட்டனர். அது மர்மமாக மறைந்து போனது.

இந்த வாக்குமூலம் காணாமல் போனது தற்போது தான் தெரியவந்தது. சி.பி.ஐ. காவல் துறை கண்காணிப்பாளர் ராஜா பாலாஜி என்பவர்

அவருடைய சாட்சியத்தை பதிவு செய்யும் போது தான் இந்த உண்மைகள் வெளிச்சத்திற்கு வந்தது. பாலாஜி தான் முதல் குற்றப் பத்திரி கையை தாக்கல் செய்தவர். அதன் பின்னர் தான் என்.ஐ.ஏ.வின் கைகளுக்கு வழக்கு மாற்றப் பட்டது.

https://timesofindia.indiatimes.com/india/mecca-blast-case-aseemanands-disclosure-missing-from-court/articleshow/63292407.cms?from=mdr

https://thewire.in/politics/disclosure-filed-by-aseemanand-in-mecca-masjid-blast-case-goes-missing

68 சாட்சிகளில் 54 சாட்சிகள் பிறழ் சாட்சிகளாக மாறின, இல்லை மாற்றப்பட்டன. அதில் ஒருவர் டி.ஆர்.டி.ஓ.வின் அறிவியலாளர் வட்லமணி வெங்கட் ராவ்.

இவ்வழக்கின் ஒட்டுமொத்த தலைவிதி அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தான் இருந்தது. ஆனால் அது மர்மமான முறையில் மறைந்து போனது. மறைக்கப்பட்டது. அது மட்டுமல்ல பல முக்கியமான சாட்சியங்கள் ஆவணங்கள் மறைக்கப்பட்டதாக டைம்ஸ் ஆஃப் இந்தியா நாளிதழ் கூறுகிறது.

## வழக்கை விசாரித்த நீதிபதி ராஜினாமா



இந்த வழக்கை விசாரித்த சிறப்பு தீவிரவாத எதிர்ப்பு நீதிமன்றத்தின் நீதிபதி சுவாமி அசிமானந் தாவை விடுதலை செய்த வுடன் முதல் வேலையாக தன் பணியை ராஜினாமா செய்தார். கே.ரவிக்குமார் ரெட்டி என்கிற அந்த நீதிபதி எதற்காக பணியை ராஜினாமா செய்தார் என்று தெரியவில்லை என்று கூறினாலும் இதற்காகத் தான் என்று எல்லோரும் யூகிக்கும் வண்ணமே அவர் பணியை ராஜினாமா செய்துள்ளார் என்று கூறுகிறார்கள்.

http://www.business-standard.com/article/current-affairs/mecca-masjid-blast-aseemanand-other-accused-let-off-top-10-developments-118041600364_1.html

நீதிமன்றத்தின் கண்காணிப்பில் உள்ள ஆவணங்கள் மறைவது இதுதான் முதல் முறை என்பதல்ல.

மும்பை தீவிரவாத தாக்குதல் வழக்கை மீண்டும் விசாரிக்க வேண்டும் என கோரி இராதாகாந்த் யாதவ் என்பவர் மும்பை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கு விசாரணையில் இருந்த போது திடீரென ஒரு நாள் நீதிமன்றத்தின் பதிவேட்டில் அன்று நடந்த விசாரணையே மறைந்து போனது.

## திடீரென மாயமாக மறைந்த நீதிமன்றத்தின் பதிவேடு (ரோஸ்நாமா)

திரு. ராதாகாந்த் யாதவ் அவர்களின் வழக்கு மும்பை நீதிமன்றத்தில் செப்டம்பர் 2012 இல் வர ஆரம்பித்தது.

அக்டோபர் மாதத்தில் நடந்த ஒரு விசாரணையில் இந்திய யூனியனும் மஹா ராஷ்டிரா மாநில அரசும் மும்பை நீதிமன்றம் ஆகஸ்ட் 17, 2010-ல் கொடுத்த தெளிவான வழிமுறைகளை மீறியுள்ளதை குறித்து யாதவின் வழக்கறிஞர் சுட்டிக்காட்டினார்.

மும்பை நீதிமன்றம் 1 டிசம்பர் 2010-ல் குறிப்பாக 6 கேள்விகளை எழுப்பி அதற்கு பிரமாண பத்திரத்தில் 2 மாதங்களுக்குள் பதிலளிக்குமாறு மத்திய மாநில அரசுகளை கேட்டிருந்ததையும் சுட்டிக்காட்டினார்.

அவர்கள் இதுவரை அதற்கு பதிலளிக்க வில்லை. பிரமாண பத்திரம் அளிக்கவில்லை என்பதை யாதவ் வழக்கறிஞர் எடுத்துக்கூறி, பலமுறை நீதிமன்றம் ஆணையிட்ட பின்பும் அவர்கள் இதனை செய்ய தவறியதனால், கடந்த இரண்டு வருடங்களாக இதனை தாமதப்படுத்தி இருப்பதனால் மத்திய மாநில அரசுக்கு எதிரான நிலை எழுப்பப் பட்டு மனுதாரருக்கு (யாதவ் அவர்களுக்கு) சாதகமான பொருத்தமான ஆணைகள் பிறப்பிக்கப்பட வேண்டும் என கோரினார்.

அந்த அமர்வின் நீதிபதிகள் 17 ஆகஸ்டி லும், 1 டிசம்பர் 2010லும் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளை காண ஆசைப்பட்டனர். நீதிமன்ற பணியாள் அங்குமிங்குமாக புரட்டி பார்த்து கடைசியில் 1 டிசம்பர்

2010க்கான தினசரி பதிவேட்டில் (ரோஸ்நாமாவில்) இந்த வழக்கை பற்றிய பதிவேடு இல்லையாதலால் அன்றைய தினம் அதாவது டிசம்பர் 1, 2010-ல் வழக்கு விசாரணையே நடைபெறவில்லை என கூறினார்.

ஆனால் டிசம்பர் 1, 2010, அன்றைய தினம் நீதிமன்ற பெஞ்ச்-ன் நீதிபதி திறந்த நீதிமன்றத்தில் எல்லோரும் கேட்கும்படி மத்திய மாநில அரசுகளுக்கு கடுமையான எச்சரிக்கையை தந்து குறிப்பிட்ட கால கெடுவிற்குள் பதிலளிக்கும்படி உத்தர விட்டார்.

அதற்கு அடுத்த தினம் எல்லா தேசிய நாளிதழ்களிலும் இந்த உத்தரவு குறித்த உண்மை அறிக்கை வெளி வந்தது.

இந்த எதிர்பாராத நிகழ்வினால் அதிர்ந்து போன யாதவ் அவர்கள் உயர்நீதி மன்றத்தில் ஒரு மனுவை தாக்கல் செய்தார். அதில் 1.12.2010 அன்று நடந்த நிகழ்ச்சிகளின் ‘நீதிமன்ற குறிப்பினை’ அளித்து மிகப்பணிவுடன் நீதிமன்றத்தின் கவனத்திற்கு தினப் பதிவேடு (ரோஸ்நாமா) மறைந்து போனதை கொண்டு வந்தார்.

கவனக்குறைவின் காரணமாகவோ அல்லது வேறு காரணங்களினாலோ பிரதிவாதிகளுக்கு எதிராக இரண்டு மனுக்களில் (திரு. யாதவ் மற்றும் ஜோதி படேகர்) இந்த மாண்புமிகு நீதிமன்றம் 1.12.2010 அன்று பிறப்பித்த வழிகாட்டுதல்கள் (கட்டளைகள்) தினசரி பதிவேட்டில் (ரோஸ் நாமாவில்) பதிவாகவில்லை.

இதன் காரணமாக 1.12.2010 இந்நீதிமன்றத்தால் விசாரிக்கப் பட்டவை அதை தொடர்ந்து இந்நீதிமன்றத்தால் பிரதிவாதிகள் 1 மற்றும் 3 க்கு எதிராக குறிப்பிட்ட கேள்விகள் எழுப்பப்பட்டு அதற்கு பதிலளிக்க வேண்டும் என்ற இந்த நீதிமன்றத்தின் ஆணை போன்றவை இன்னும் கோப்புகளில் பதியப்பட வேண்டியுள்ளது”

## அம்மனுவின் இறுதியில் அவர்

**a)** 1.12.2010 அன்று நடைபெற்றவைகளை மாண்புமிகு நீதிமன்றம் தயவு கூர்ந்து கோப்புகளில் பதிய வேண்டும், மேலும் அதனை, தினப்பதிவேட்டில் (ரோஸ நாமாவில்) சேர்க்க வேண்டும்.

**b)** 1.12.2010 அன்று நடந்த நடவடிக்கைகள் ரோஸ்நாமாவில் எதன் காரணமாக பதிவு செய்யப்படாமல் விடுபட்டு போயின என்பது குறித்து விசாரணை நடத்த தக்க உத்தரவு அல்லது வழிகாட்டுதலை இந்நீதிமன்றம் தயவு கூர்ந்து பிறப்பிக்க வேண்டும் என கோரியிருந்தார்.

இந்த கூற்றிற்கு துணையாக அவர் உறுதியான மறுக்கவியலாத சில ஆவணங்களை நீதிமன்றத்திற்கு கொடுத்திருந்தார். 1.12.2010-க்கான விசாரணை செய்யப்படவிருக்கிற வழக்குகளின் பட்டியல் (Cause List), திரு. யாதவ் அவர்களின் மனு மற்றும் திரு. ஜோதி படேகர் அவர்களின் பொதுநல மனு விசாரணைக்கு வரப்பெற்ற நாட்களில் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்படவிருந்த வழக்குகளின் பட்டியல் (Cause List), நான் (எஸ்.எம்.முஷ்ரிஃப்) அன்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்றும் பிரதிவாதி 4 ஆகிய எனக்கு நீதிமன்றம் பிறப்பித்திருந்த சம்மன், நான்கு முக்கியமான ஆங்கில தினசரிகளில் 1.12.2010-க்கு அடுத்த நாள் வெளிவந்த நீதிமன்ற நடவடிக்கை பற்றிய விளக்கமான செய்திகளின் நகல்கள் போன்றவற்றை அவர் இணைத்திருந்தார்.

கூடுதலாக பல வழக்கறிஞர்கள், செய்தி நிருபர்கள், சில தனி நபர்கள் போன்றவர்களை இதற்கான சாட்சிகளாகவும் அவர் கூறியிருந்தார்.

திரு. ராதாகாந்த் யாதவ் அவர்கள் நவம்பர் 2012-ல் இம்மனுவை தாக்கல் செய்திருந்தார். எனினும் அதன் மீது இது வரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப் படவில்லை.

இது குறித்து சில ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற, உச்ச நீதிமன்ற நீதிபதிகளிடம் விவாதித்த போது அவர்கள் அதிர்ச்சியுற்றார்கள். இது மிகவும் ஆபத்தான விஷயம்

**என்றும் கோப்புகள் மாயமாகி போன விஷயத்தில் கிரிமினல் வழக்கு பதியப்பட வேண்டும் எனவும் கருத்து தெரிவித்தனர். இந்திய நீதித்துறை வரலாற்றில் இதுபோன்ற தப்பு நடந்ததே கிடையாது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.**

26/11 விசாரணை நீதித்துறையும் மயங்கியது ஏன்? என்ற புத்தகத்தில 240,241 பக்கங்கள்.

*நகைச்சுவை நடிகர் வடிவேலு அவர்கள் ஒரு நகைச்சுவை காட்சியில் கிணறு காணாமல் போய் விட்டது என்று அரற்றுவார். அனைவரும் சிரிப்பார்கள். இப்போது அதற்கு ஒரு படி மேலே போய் நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்ட வாக்குமூலங்கள் காணாமல் போய் இப்போது நீதிமன்றத்தில் ஒரு நாளைய நிகழ்வே காணாமல் போய்விட்டது. இன்னும் என்னவெல்லாம் காணாமல் போகப்போகிறதோ? யாமறியோம் பராபரமே...*

*உச்ச நீதிமன்றத்தில் நான்கு நீதிபதிகள் வெளிப்படையாக தலைமை நீதிபதியை விமர்ச்சித்ததும் அவர்களை தாஜா செய்யும் வேலையில் அனைவரும் இறங்கினர்.*

*இதன்பின்னர் நான்கு நீதிபதிகளும் தங்களுடைய வழமையான பணிக்கு திரும்பினர். அனைத்து ஊடங்கங்களிலும் இதுவே செய்தியானது. இதன்பின்னர் நீதிமன்றம் ஒழுங்குபடுத்தப்பட்டு விடும், தலைமை நீதிபதி மாறி விடுவார் எனவும் இந்தியாவின் மற்ற நீதிமன்றங்கள் தங்களுடைய இந்துத்துவா போக்கினை மாற்றிக்கொள்ளும் என இந்திய மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால் அது பொய்யாகிப்போனது.*

*இந்துத்துவா சக்திகள் கூடுதல் பலத்துடன், நான்கு நீதிபதிகளையும் பார்த்து நீங்கள் எங்களை என்ன செய்து விட முடியும் என்று கேட்கும் வண்ணமாக சில தீர்ப்புகளை வழங்கினர். அதில் ஒன்று 28 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்ட மாயா கேட்னானி என்ற கொலைகாரியின் விடுதலை.*

## நரோடா சாடியா படுகொலைகள்...

*குஜராத் மாநிலத்தில் 2002-ம் ஆண்டு மிகப் பெரிய இனப்படுகொலை ஒன்று அரங்கேறியது. அரசு எந்திரமே முன்னின்று நடத்திய இனப்படுகொலை இது.*

*இதில் அஹமதாபாத் மாவட்டத்தில் உள்ள நரோடா என்னுமிடத்தில் 28, பிப்ரவரி-2002 அன்று மிகப்பெரிய கலவரம் இந்துத்துவா தீவிரவாதிகளால் நடத்தப்பட்டது. இதனை முன்னின்று நடத்தியவர் மாயா கோட்னானி என்ற மோடியின் பெண் அமைச்சர்.*

*இவர் ஒரு கருவியல் மருத்துவர். பெண்கள் மற்றும் குழந்தைகள் வளர்ச்சி துறையின் அமைச்சர். இவர் தலைமையில் சுமார் 5000க்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் ஒன்று திரண்டனர். முஸ்லிம்களை கண்ட உடன் அவர்களை வெட்டி சாய்த்தனர். இன்னும் சிலரை உயிருடன் தீ வைத்துக் கொளுத்தினர்.*

*இவர்களின் வெறியாட்டத்தைக் கண்டு அஞ்சி நடுங்கிய பெண்கள், முதியோர்கள், குழந்தைகள் சிலர் அவர்களிடமிருந்து தப்பியோடினர். அங்கிருந்த தண்ணீர் இல்லாத பாழுங்கிணறு ஒன்றில் ஒளிந்து கொண்டனர்.*

*மாயா கோட்னானி தலைமையில் வந்த வெறியர்கள் கூட்டம் கண்ணில் கண்டவர்களை எல்லாம் வெட்டி சாய்த்துக் கொண்டே அந்த கிணற்றருகே வந்துவிட்டது.*

*ஒளிந்து கொண்டிருந்த குழந்தைகளில் ஒன்று அந்நேரத்தில் அழுதுவிட்டது. வெறியோடு அலைந்து கொண்டிருந்த ஓநாய் கூட்டம் தன் இரையை கண்டுகொண்டதுபோல தீவிரவாதிகள் கிணற்றை நோக்கி ஓடினர். கிணற்றுக்குள் எட்டிப்பார்த்து தங்கள் இரையை கண்டுக் கொண்ட திருப்தியுடன் கிணற்றுக்குள் பெட்ரோலை கொட்டினர். பின்னர் அந்த கிணற்றுக்கு தீ வைத்தனர்.*



*தீக்காயத்துடன் உயிர் பிழைக்க சிலர் தப்பி மேலேறி வந்தனர். ஆனால் அவர்களை இரும்பு தடிகளைக் கொண்டும், கற்களைக் கொண்டும் தாக்கி மீண்டும் உள்ளே தள்ளி விட்டனர். மாயா கோட்னானி*

தலைமையிலான இந்துத்துவா தீவிரவாதிகள்.

இதில் ஒட்டுமொத்தமாக அதில் இருந்த அனைவரும் செத்து மடிந்தனர். இவ்வாறு கொலை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 97-க்கும் அதிகம். இந்த கொலையை செய்து முடித்த பின்னர் தடயங்களை மறைக்க சில இரசாயனப் பொடிகளை தூவ தடயங்களை அழித்தனர் கொலை பாதகர்கள். இந்த இரசா யனத்தை இதற்காக இஸ்ரேலிடமிருந்து மோடி அரசு வாங்கியிருந்தது.

இதன்பின்னர் இவர் மோடி அரசால் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பி வந்தார். டீஸ்டா செடல்வாட் போன்ற சமூகப் போராளிகள் சிலரின் போர் குணம் கொண்ட போராட்டத்தினால் குஜராத் கலவர வழக்குகள் குஜராத்துக்கு வெளியே விசாரிக்கப்பட்டன. மாயா கோட்னானி குற்றவாளி என உறுதி செய்யப்பட்டு அவருக்கு 28 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை வழங்கப்பட்டது.

வருடங்கள் இவர் அமைச்சராக பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. 2009-இல் இவர் கைது செய்யப்பட்டார்.

11 சாட்சிகள் சிறப்பு விசாரணைக் குழுவிடம் மாயா கோட்னானி கலவரம் செய்ய தூண்டியதை பார்த்ததாக சாட்சியம் அளித்தனர். மேலும் மாயா கலவரக்காரர்களின் கைகளில் கத்திகளையும் ஆயுதங்களையும் கொடுத்து முஸ்லிம்களை தாக்கும்படி கூறினார் என்றும் அவர்கள் சாட்சியம் அளித்தனர். ஒரு கட்டத்தில் அவர் துப்பாக்கிகளையும் கொடுத்ததாக சாட்சியும் அளித்தனர்.

ஆனாலும் உயர்நீதிமன்றம் இந்த சாட்சியங் களை ஏற்றுக்கொள்ளவில்லை. மாயா கோட் னானியுடைய பெயர் 5 வருடங்களுக்கு பிறகு குற்றப்பத்திரிகையில் சேர்க்கப்பட்டது. மாயா வுக்கு சாதகமாகிப் போனது. கலவர வழக்குகள் பதியப்பட்டபோது இவர் பெயர் குறிப்பிடப் படவில்லை.



இப்பேர்பட்ட பெண் தீவிரவாதி மாயா கோட்னானி தற்போது குஜராத் நீதிமன்றத்தால் நிரபராதி என விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

ஆகஸ்ட் 2012-ல் மாயா கோட்னானியுடன் சேர்த்து 32 பேருக்கு ஆயுள் தண்டனை வழங்கப் பட்டது.

கலவரம் நடந்து முடிந்த பின்னரும் 5

கடந்த வருடம் கலவர நாயகன் பா.ஜ.க. தலைவர் அமீத்ஷாவும் நீதிமன்றத்தில் ஆஜராகி குஜராத் கலவரம் நடைபெற்றபோது மாயா கோட்னானியை சட்டசபை கட்டிடத்தில் பார்த்ததாகவும், பின்னர் அரசு மருத்துவ மனையில் பார்த்தாகவும் அங்கு மாயா கோட் னானி கோத்ரா இரயில் எரிப்பில் இறந்து போனவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல்

சொல்லிக் கொண்டிருந்ததாகவும் பொய் சாட்சியம் அளித்தார். வேலிக்கு ஓணான் காவல் என்பதுபோல அவரின் சாட்சியம் 11 சாட்சி யங்களுக்கு எதிராக முக்கியத்துவம் கொடுத்து நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டுள்ளார்.

சுவாமி அசிமானந்தாவின் வழக்கிலும், மாயா கோட்னானி வழக்கிலும் மேற்முறையீடு செய்யப் போவதில்லை என அந்தந்த விசாரணை குழுக்கள் (அரசுகள்) அறிவித்துள்ளன. மேல் முறையீடு செய்யப்பட்டாலும் நீதி கிடைக்கப் போவதில்லை என்பது வேறு விஷயம். ஆனால் எல்லாவற்றையும் தாண்டி நாங்கள் எந்த விமர்சனங்களையும் பற்றி கவலைப்படாமல் எங்களுடைய இலக்கை, இலட்சியத்தை அடை வோம் என்ற இந்துத்துவாவின் வெறித்தனமே இந்த செயல்பாடுகளின் மூலம் அறிய முடிகிறது.

நாட்டு மக்கள் நீதித்துறையின் மீது வைத் துள்ள நம்பிக்கையை இழப்பது பற்றி யாருக்கு என்ன கவலை?. குறிப்பாக இந்துத்துவா வினருக்கு எதைப் பற்றியும் கவலை கிடையாது என்பதே உண்மை.

## இப்போது இன்னொரு கேள்வி?

மாயா கோட்னானிக்கு ஏற்கனவே ஆயுள் தண்டனை விதித்த நீதிபதியின் மனோ நிலை என்னவாக இருக்கும். நாம் அனைத்து சட்டக் கூறுகளையும் ஆய்வு செய்து, சாட்சியங்களின் அடிப்படையில் இவ்வளவு அரசியல் அழுத்தம் தரக்கூடிய ஒருவரை, நீதியையும் நீதிபரி பாலனத்தையும் காப்பாற்ற வேண்டி அத்தனை அழுத்தங்களையும் தாண்டி குற்றவாளி என தீர்ப்பளித்தால் உயர் நீதிமன்றம் இவ்வளவு எளிதாக இவரை விடுவித்து விட்டதே. நாமும் ராஜினாமா செய்துவிட்டு இந்த அநியாயங் களுக்கு எதிராக கண்காணாத இடத்திற்கு சென்று விடலாமா? இனி இந்நாட்டில் நீதிக்கு இடமே இல்லை என்பது தானே அவரின் எண்ணமாக இருந்திருக்கும்.

இதில் குறிப்பிடத்தக்க விஷயம் என்ன வென்றால் இந்த மாயா கோட்னானி வழக்கை நாங்கள் விசாரிக்க தயாராக இல்லை, எங்களால் நீதி செலுத்த இயலாது என குஜராத் நீதிபதிகள் அகில் குரேஷி, எம்.ஆர்.ஷா, கே.எஸ்.ஜாவேரி, ஜி.பி.ஷா, சோனியா கோகானி மற்றும் ஆர்.எச். சுக்லா ஆகிய 6 நீதிபதிகள் இவ்வழக்கில் இருந்து தங்களை விடுவித்து கொண்டது, நாட்டில் நீதி எப்படி வாழ்கிறது என்பதை தெளிவாக அறிந்துகாள்ள முடிகிறது.

ஆதாரம் (NDTV : BJP's Maya Kodnani Cleared of Charges in worst Mashacre if 2002 RIOTS)

இப்போது நம் முன் தொக்கிநிற்கும் கேள்வி ஒன்றுதான். கலவரத்தில் தங்கள் பிள்ளைகளை பறிகொடுத்த பெண் ஒருத்தி கேட்கும் கேள்வியும் அதுதான்.

மாயா கோட்னானி நீரபராதி என்றால் நாங்களா எங்கள் பிள்ளைகளை கொலை செய்தோம்? இந்த கேள்விக்கு பதில் சொல்ல வேண்டியது நீதிமன்றங்களே...

சுவாமி அசிமானந்தா நிரபராதி என்றால் நாட்டில் குண்டு வெடிப்புகளே நிகழ வில்லையா?

**காந்தி ஜி கொலை செய்யப்பட்ட தினத்தை முன்னிட்டு வெளிவந்த நூல்**






*அன்பார்ந்த வாசகர்களே!*

**இப்போது முஸ்லிம் நாடுகளின்மேல் தொடுத்து வரும் போரை, போடும் குண்டுகளை, குவிக்கும் பிண மலைகளை அலைக்கழித்து அநாதைகளாக்கும் குடும்பங்களை, சிலுவைப் போர் 2.0 என அழைக்கின்றார்கள்.**

*கி.பி. 1095 ஆம் ஆண்டு தொடங்கி 1247 வரைத் தொடர்ந்த சிலுவைப்போர்களை முதல் சிலுவைப் போர், அல்லது சிலுவைப்போர் 1.0 என அழைக்கின்றார்கள் மேலை நாட்டவர் களும், இஸ்லாத்தின் எதிரிகளும். இப்போது நடக்கும் சிலுவைப்போர் 2.0 -வை எப்படி நடத்திக் கொண்டிருக்கிறோம் என்ற உண்மை களை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றான் ஜான் பெப்பர் என்ற எழுத்தாளர். இந்த சிலுவைப் போர் 2.0 -வை அமெரிக்காவின் தலைமையில் மேலை நாடுகள் எப்படி நடத்திக் கொண்டிருக்கின்றன என்பதை ஒரு விளக்கமான நூலாகவும் தருகின்றார்.*

*அந்த நூலுக்கு அவர் தந்த துணை தலைப்பு* The Wests Resurgent war on Islam. *இஸ்லாத்தின் மேல் மேலை நாடுகள் நடத்தும் புத்துயிற் பெற்ற போர்.*

*இதன் முதல் பகுதியை சென்ற வைகறை வெளிச்சம் இதழில் தந்தோம். அதனை இந்த இதழிலும் தொடருகின்றோம்.*

## தொடர்ந்து ஜான் பெப்பர் என்பவரின் சொற்கள்...

*"அமெரிக்காவின் ஒக்கலகாமா மாநிலத்தில் தேர்தலை மையப்படுத்தி அங்கே வாழ்ந்து கொண்டிருக்கும் முஸ்லிம்களுக்கு நெருக்கடி களைத் தந்தோம். அவர்களுக்கெதிராக வெறுப்புப் பிரச்சாரத்தை முழு அளவில் கட்டவிழ்த்திட்டோம்.*

*இவற்றால் அந்த மக்கள் அமெரிக்காவை விட்டே ஓடிப்போய்விடுவார்கள் என எதிர் பார்த்தோம். குறைந்த பட்சம் ஒக்கலகாமா மாநிலத்தை விட்டாவது வெளியே போவார்கள் என எதிர்பார்த்தோம். அதுவும் நடக்கவில்லை.*

*காரணம், ஒக்கலகாமா முஸ்லிம்கள், ஒக்கல காமா மக்கள் தொகையில் ஒரு சதவிகிதம்தான் என்றாலும் தங்களுக்கெதிராக நடந்த பிரச்சா ரத்தை அடக்கத்தோடு, உறுதியோடு எதிர் கொண்டார்கள். இஸ்லாம் அமெரிக்காவை அழிக்கும் மார்க்கமல்ல, அது அமெரிக்காவின் அனைத்து அவலங்களையும் அழிக்கவந்த மார்க்கம் எனக் கருத்துக்களை மக்கள் மன்றத்தில் வைத்தார்கள்.*

*அத்தோடு, அமெரிக்கா எதிர்நோக்கும் பிரச்சனைகளை இஸ்லாம் எப்படித் தீர்க்கும்*



எதிர்கொண்டார்கள்.

சில 10 ஆண்டுகளுக்கு முன் முஸ்லிம்கள் ஒரு முயற்சியை மேற்கொண்டார்கள். அது அமெரிக்க அதிபர் வருடந்தோறும் ஓர் நோன்பு துறக்கும் நிகழ்ச்சியை நடத்திட வேண்டும் என்பதே அது. இந்த முயற்சியில் அவர்கள் வெற்றியும் பெற்றிருந்தார்கள்.

அமெரிக்க அரசு தரப்பில் நடத்தப்பெற்ற இப்தார் நிகழ்ச்சியில், அமெரிக்க அதிபர் அவசியம் கலந்துகொண்டு உரையாற்றுகின்றார். ஏனெனில் இப்தார் நிகழ்ச்சியில் அமெரிக்க அதிபரின் பெயரால்தான் நடக்கின்றது.

என்பதை எடுத்தச் சொன்னார்கள். வெறுப்புப் பிரச்சாரத்தில் ஈடுபட்ட பலரும் தங்கள் பிரச் சாரத்தைப் பின் வாங்கா விட்டாலும் தங்கள் பிரச்சாரத்தில் உற்சாகமிழந்தார்கள்.

முஸ்லிம்களின் எதிர்ப் பிரச்சாரத்தால், வெறுப்புப் பிரச்சாரம் வலுவிழந்து போகுமோ எனப் பயந்தோம். அதனால் அந்த வெறுப்புப் பிரச்சாரத்தை ஒருசிறு இடைவெளிக்குப் பின் படரவிட்டோம். அதாவது மீண்டும் மூட்டிவிட்டோம்.

இதனால் மீண்டும் பிரபல்யங்கள் முஸ்லிம் களுக்கெதிரான வெறுப்புப் பிரச்சாரத்தை இடறிவிட்டார்கள்.

இப்போது இந்தப் பிரபல்யங்களி டையே ஒரு போட்டி நிலவியது. அந்தப் போட்டி யார் அதிகமாக முஸ்லிம்கள் மேல் வெறுப்புப் பிரச்சாரத்தைச் செய்வது என்பதே!

இப்போது இந்தப் பிரபல்யங்களின் முழக்கம் "அமெரிக்காவுக்கு ஒரு முஸ்லிம் பிரச்சனை இருக்கின்றது" என்பதாக இருந்தது.

இது அமெரிக்காவில் வாழும் மொத்த முஸ்லிம்களுக்கும் ஒரு பெரும் தலைவலியாக ஆனது. இதை முஸ்லிம்கள் வேறொரு விதத்தில்



இந்த இப்தார் நிகழ்ச்சியில் அமெரிக்க அதிபர் பேசும்போது, அமெரிக்காவில் முஸ்லிம் களுக்கு சில பிரபல்யங்கள் செய்யும் வெறுப்புப் பிரச்சாரம், அதனால் அவர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளைப் பற்றி பேசிட வேண்டும் என கேட்டுக் கொண்டார்கள்.

இன்னும் ஒருபடி மேலேசென்று அதிபர் ஒபாமாவுக்கு இப்தார் நிகழ்ச்சிக்கு உரையை எழுதும் முஸ்லிம்கள், இதையும் சேர்த்தே எழுதினார்கள். இப்தார் நிகழ்ச்சியில் பேசிய

ஒபாமா "முஸ்லிம்கள் மற்ற மதத்தலைவர் களைப் போலவே தங்கள் மதத்தையும் பின் பற்றி முழு உரிமையுடையவர்கள்" எனத் தனக்கே உரிய வார்த்தை வீச்சால் அழுத்தமாக முழங்கினார்.



இந்த இப்தார் நிகழ்ச்சிக்குப் பின், இந்த வெறுப்புப் பிரச்சாரம், வெகுவாகக் குறைந்தது. ஆனால் ஒரேயடியாக ஓய்ந்திடவில்லை. நாங்கள் அதிபர் ஒபாமா முஸ்லிம்களின் பக்கம் சாய்கின்றார். அதனால் அமெரிக்கா ஒரு பெரும் ஆபத்தை எதிர்நோக்குகின்றது எனப் பிரச்சாரம் செய்தோம். சற்றும் இடைவெளி விடாமல், முஸ்லிம்களுக்கு எதிரான பிரச்சாரத்தை முடுக்கிவிட வேறு வழிகளைத் தேடினோம்.

ஒரு வாய்ப்பை உருவாக்கிக் கொண்டோம். அது Inner Faith Centre என்றொன்றை எழுப் பினார்கள். அதாவது "மத நம்பிக்கைகளுக் கிடையிலான பேச்சு மையம்" என்றொன்றைத் தொடங்கினார்கள்.

இது அமெரிக்காவின் இரட்டைக் கோபு ரங்கள் தகர்க்கப்பட்ட இடத்தில் எழுப்பட்டது. (இதைத்தான் 9/11 என அடையாளப்படுத்து கின்றார்கள்)

இதனை தொலைக்காட்சியில் "Talkshow" நடத்திய அதாவது விவாத அரங்கை நடத்திக் கொண்டிருந்த பிரபல்யம் ; Rush Limbaligh ரஷ் லிம்பாக் என்பவர் இரட்டைக் கோபுரங்கள் தகர்க்கப்பட்டதன் வெற்றி சின்னம் எனப் பேசினார். "Victory Monument at Ground Zero" என்றார். (உண்மையில் இந்த இரட்டைக் கோபுரத் தகர்ப்பு 9/11 அமெரிக்கர்களின் உள்ளிருப்பு வேலை)

அதாவது முஸ்லிம்கள், அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்களைத் தகர்த்து விட்டார் களாம். அது வெற்றியும், அந்த வெற்றியின் நினைவாக சின்னம் ஒன்று தேவைப்பட்டதாம். அதற்காகத்தான் "மத நம்பிக்கையாளர்களின் பேச்சு மையத்தை" தொடங்கி இருக்கின்றார்கள்.

இப்படி இட்டிக்கட்டினோம், முஸ்லிம்களுக் கெதிரான வெறுப்புப் பிரச்சாரத்தை ஒன்றைக் கட்டவிழ்த்திட்டோம்.

இது நன்றாகவே சூடுபிடித்தது. இதைப் பயன்படுத்தி கிருஸ்தவப் போதகர் பிரங்கிளின் கிரகாம் - இஸ்லாத்தை "தீமையின் மதம்" என் றொரு பிரச்சாரத்தைப் பட்டித் தொட்டி யெல்லாம் கொண்டு சென்றார்.

அத்தோடு அதிபர் ஒபாமாவின் இப்தார் பேச்சை வேறொரு வகையில் திசை திருப்பி னோம். ஒபாமா இஸ்லாமிய ஷரீஅத்தை ஆதரிக் கிறார் என்றோம். இதையும் இடைவிடாமல் செய்தோம்.

நாங்கள் இட்டுக்கட்டி முஸ்லிம்களின்மேல் வெறுப்பை வளர்த்துக் கொண்டிருக்கின்றோம் என முஸ்லிம்கள் முடிந்தவரைப் பிரச்சாரங்களை மேற்கொண்டார்கள்.

ஆனால் மீடியாக்கள், ஊடகங்கள் நாங்கள் மேற்கொண்ட வெறுப்புப் பிரச்சாரத்தையே மக்களிடையே கொண்டது. முஸ்லிம்களின் முயற்சிகளை கண்டுகொள்ளவில்லை.

நாங்கள் இஸ்லாத்திற்கு எதிராக மேற் கொண்ட பிரச்சாரங்கள், அன்றைய நாட்களில் நாங்கள் கம்யூனிசத்திற்கு எதிராக மேற்கொண்ட பிரச்சாரத்திற்கு இணையாக, சில நேரங்களில் அதைவிட அதிகமாக அமைந்தது.

நான் இங்கே கம்யூனிசத்திற்கு எதிரான நாட்கள் எனக் குறிப்பிடுவது பனிப்போர் நாட்களைத்தான்.

இத்தனையையும் நாங்கள் செய்து கொண்டி ருந்தபோது 'PEW' பியூ ஆய்வு நிறுவனம் ஓர் ஆய்வறிக்கையை வெளியிட்டது. அது எங்களுக்கு பெரும் அதிர்ச்சியைத் தந்தது. நாங்கள் அடுத்து என்ன என அங்காலாயிக்க வேண்டியதாயிற்று. அது என்ன ஆய்வும் முடிவும். **இன்ஷா அல்லாஹ் தொடரும்.**

## ஹாஜி முஹம்மது ஜக்கரிய்யா எதிர்கொண்ட சவால்கள்?



# ஒரு இஸ்லாமிய பிரச்சாரகரின் வாழ்க்கை வரலாறு..!

சிதம்பரம் பகுதியைச் சேர்ந்த எனது பாட்டனார் பொன்னுசாமி ஓர் உயர் சாதியில் பிறந்தவர், அவருக்கு மூத்த உடன் பிறந்தவர்கள் 4 பேர்கள், இவர்கள் ஐந்து பேர்களில் எனது பாட்டனாரை மட்டும் அவரது உடன் பிறந்த நான்கு பேர்களும் படிக்க வைக்கிறார்கள், அவர் படித்து முடித்து ஆசிரியர் வேலைக்கு முயற்சிக்கிறார். ஆனால் வேலை கிடைக்கவில்லை. அவருடைய காலத்தில் பள்ளிக் கூடங்கள் குறைவு என்பதே காரணம்.

இந்நிலையில் ஊர் ஊராக சென்று சேரிகளில் திண்ணை பள்ளிக்கூடம் நடத்த அலைகிறார். இறுதியாக சிக்கல் நாயக்கன் பேட்டை சேரியில் உள்ள மக்கள் அவருக்கு ஆதரவு தர ஒரு கொட்டகை அமைத்து பள்ளிக்கூடம் நடத்தி வருகிறார். அப்பள்ளிக் கூடத்திற்கு எதிர் வீட்டில் வசித்து வந்த கணவன் மனைவிக்கு ஒரே பெண் (வேறு பிள்ளைகள் கிடையாது. அப்பெண் எதிர் வீட்டில் இருப்பதால் ஆசிரியருக்கு சமையல் வேலை, கூட்டிப் பெருக்கி, சுத்தம் செய்வது போன்ற வேலை செய்து வந்துள்ளது. அப்பெண் மேஜரான பின் அப்பெண்ணையே திருமணம் செய்து கொண்டார். (பெண்ணின் பெற்றோர் கள் மற்றும் ஊர் மக்கள் (சேரி) அனுமதியுடன். ஆனால் அவருடைய சகோதரர்களுக்கு தெரிவிக்கவில்லை.

சில காலம் கழித்து இச்செய்தியை தெரிந்து சகோதரர்கள் குடும்பங்கள் மாட்டு வண்டியில் தம்பியைப் பார்ப்பதற்கு சிக்கல் நாயக்கன் பேட்டை வந்து அங்குள்ள உயர் ஜாதி தெருவில் விசாரிக்கிறார்கள். அங்குள்ளவர்கள் கிழக்கே செல்லுங்கள், அங்கே பரத்தோப்பு என்னும் தென்னந்தோப்பு இருக்கு. தோப்பு கடைசியில் தண்ணீர்ஓடம் (வாய்க்கால்) அருகில் கன்னிக்கோயில் இருக்கும். அதற்கு அடுத்து முதல் வீடு வடபுறத்தில் என தெரிவிக்கின்றார்கள்.

அவர்களும் தம்பி வீட்டை சென்றடை கிறார்கள். ஆனால் தம்பி வீட்டிற்கு எதிர் வீடு செத்தமாடு தூக்கும், செத்த பிணம் சுடும் வெட்டியான் வீடு. அவர்கள் பண்ணைகளில் இருக்கும் மாடுகளை தூக்கி வந்து அறுத்து தோலை தப்புக்காகவும். வடகயிறுக்காகவும் காயவைப்பார்கள். ஆதலால் அப்பகுதி துர்நாற்றம் அடிக்கும். ஆனால் தம்பி வீட்டிற்கு போனதுமே சேரி என்றும் சேரிப்பெண்ணை திருமணம் செய்து கொண்ட செத்தமாடு தின்னும் வெட்டியான் வீட்டிற்கு வாழ்கிறாய் இதற்கு தானா? நாங்கள் உன்னை படிக்க வைத்தோம் என்று கூறி இனிமேல் அண்ணன் இல்லை என்று கூறி எங்கள் ஊர் அருகில் ஓடி கொண்டிருக்கும் மணியாற்றில் ஒரு தம்பி இறந்துவிட்டான் என்று உயிரோடு தலை முழுகிவிட்டு சென்று விட்டார்களாம்.

இவைகளை எனக்கு சொன்னது என்னை பெற்றெடுத்த அன்புத்தாய் ஆச்சிக்கண்ணு அவர்களே ஆவார்கள்.

அவர் உயர் ஜாதியில் பிறந்தாலும் ஒரு தாழ்த்தப்பட்ட பெண்ணை திருமணம் செய்து கொண்டதால் அவரும் ஒரு தாழ்த்தப்பட்ட வராகி விடப்பட்டார். பொன்னுசாமி, பாட்டி அஞ்சலை தம்பதிகளுக்கு பிறந்த என் தந்தை சிவலிங்கம் ஆச்சிக்கண்ணு தம்பதிகளுக்கு பிறந்தவன்தான் இந்த கண்ணையன். என் தாயின் வயிற்றிலிருந்தே எனக்கு சோதனை உதயமாகிறது. என் தாய் இருக்கும்போதே என் தந்தை இன்னொரு பெண்ணை திருமணம் செய்கிறார்.

அதனால் என் தாய் மனமுடைந்து என்னை கருவில் சுமந்துகொண்டு அவர்கள் பிறந்த ஊராகிய முள்ளங்குடி வீட்டிற்கு செல்கிறார். என் தந்தை மறுமணம் செய்த பெண்ணும் என் தந்தையுடன் வாழாமல் அவரது தாய்வீடு (திருப்பனந்தாள்) சென்று விடுகிறார். அதன்பின்னும் மூன்றாவதாக ஒரு பெண்ணை திருமணம் செய்து வாழ்ந்து வருகிறார்.

எனக்கு 5 வயது ஆகிறது. முள்ளங்குடியில் உள்ள ஒரு அய்யர் நடத்தும் அரசு உதவி பெறும் பள்ளியில் சேர்க்கிறார்கள். அப்பள்ளி யில் உயர் ஜாதிக்கார மாணவ, மாணவிகளுக்கு ஒரு ஐயர் ஆசிரியர். தாழ்த்தப்பட்ட பிள்ளை களுக்கு ஒரு வள்ளுவ ஜாதியை (பண்டாரம் என்றும் சொல்வார்கள்) சேர்ந்தவர் ஆசிரியர். அவர் ஒரு கோணிப்பையில் உட்கார்ந்து எங்களுக்குப் பாடம் நடத்துவார். நாங்கள் சிமெண்ட் தரையில் உட்கார்ந்திருப்போம். இப்படித்தான் என் ஆரம்ப பள்ளி துவங்கியது.

இந்நிலையில் என் தந்தை மூன்றாவது திருமணம் செய்த பெண்ணுக்கு ஒரு பெண் குழந்தை பிறக்கிறது. அக்குழந்தையுடன் கலிய பெருமாள் கோவிலுக்கு சென்று முடி இறக்கி ஊர் வந்து காதணிவிழா நடத்த ஏற்பாடாகிறது. அதுசமயம் ஊரில் உள்ளவர்கள் என் தந்தை யிடம் முதல் மனைவியும் ஆண் பிள்ளையும் விட்டு நீ கோவிலுக்கு போவதில் என்ன நன்மை இருக்கிறது.

அவர்களையும் அழைத்து வந்து கோவிலுக்கு செல்லுங்கள் என கூறவே என் தந்தை அவர் எங்களை அழைக்க வராமல் அவரது தாயாரை (எனது பாட்டியை அனுப்பி வைக்கிறார்) என் தாய் என்னை அழைத்தக் கொண்டு (சிக்கல் நாயக்கன்பேட்டை) தந்தை வீடு வருகிறார்.

அதன்பின் கோவிலுக்கு செல்கிறோம். ஊர் வந்து காதணி விழாவும் நடைபெறுகிறது. என் தாய்வீட்டில் இருந்து காதணி விழாவிற்கு வர வில்லை. காரணம் என் தாயையும், என்னையும் அங்கே அனுப்ப விரும்பவில்லை. 6 மாதம் கழித்து என் தந்தையின் மூன்றாவது மனைவி இறந்து விடுகிறார்கள்.

என்னை எங்கள் ஊரில் உள்ள பள்ளிக் கூடத்தில் மீண்டும் முதல் வகுப்பில் சேர்க்கி றார்கள். நான் மூன்றாம் வகுப்பு படிக்கும்போது எனக்கு ஒரு தங்கை பிறந்தது. ஆறு மாதத்தில் குடும்பத்தில் பிரச்சனை. என் தாயின் மாமியார் மற்றும் கணவர் கொடுமை தாங்காமல் மீண்டும் தாய்வீட்டிற்கு எங்கள் இருவரையும் அழைத்துக்கொண்டு செல்கிறார். என் தாய் வீட்டில் உள்ளவர்கள் அனுமதிக்க மறுக்கிறார் கள். பின் என் தாய் எனது மாமா வீட்டிற்கு பக்கத்தில் உள்ள ஒரு காலியான வீட்டு திண்ணையில் எங்களை வளர்க்கிறார்.

சாணி அள்ளி, பண்ணை வேலை செய்த எனக்கு 10 வயது இருக்கும் என் தாய் முள்ளங் குடியில் ஆறுமுக படையாட்சி என்பவர் வீட்டில் மாடு மேய்க்க விடுகிறார். அவ்வூரில் உள்ள பழக்கம் தாழ்த்தப் பட்டவர்களுக்கு இரும்பு மரக்காலில் தான் உணவு கொடுப் பார்கள். எனக்கும் அதுபோல் கொடுப்பார்கள். எனக்கு மரக்காலில் சாப்பிட விருப்பமில்லை. ஆகையால் அவ்வீட்டிற்கு மாடு மேய்க்க செல்லவில்லை.

ஆகையால் என் தாய்க்கு என் மேல் கோபம். கட்டிய கணவனும் கை விட்டபின் பெற்ற பிள்ளையாவது மாடு மேய்த்து கஞ்சி ஊற்றும் என எண்ணினேன். பிள்ளையும் என் பேச்சைக் கேட்கவில்லை என அடித்து விட் டார்கள். அடிவாங்கிக் கொண்டு என் வயதில் உள்ள நண்பன் வீட்டிற்கு சென்று விட்டேன். அன்று மறுநாள் ஆடி 18 (ஆடிப்பெருக்கு) என் தாய் அழுது புலம்பி என்னை தேடுகிறார். அன்று முழுவதும் என் தாய் கண்ணில் படாமல்

பதுங்கிவிட்டேன். இரவு என் நண்பர் கலிய பெருமாள் த./பெ. அய்யாக்கண்ணு வீட்டிற்கு சென்றேன். இச்சம்பவங்கள் அனைத்தையும் தெரிவித்தேன். அது சமயம் கலியபெருமாளின் சிறிய தந்தை கோபால் அவர்கள் என்னை அழைத்து செருகடம்பூரில் ராமையன் படை யாட்சி என்பவருக்கு 2 பசுமாடும், 4 ஆடுகளும் உள்ளது. அவர்கள் ஒரு ஆள் வேண்டும் என என்னிடம் சொன்னார்கள். அங்கு மரக்காலி லெல்லாம் சோறு கொடுக்க மாட்டார்கள்.

நல்லவர்கள் நமது ஊர் பிள்ளைகள் நாலு ஐந்து பேர் அங்கு மாடு மேய்க்கிறார்கள். காலையில் சாப்பிட்டு விட்டு ஆடு, மாடுகளை கொள்ளிடக்கறைக்கு ஓட்டிச் சென்று மேய்த்து மாலையில் ஓட்டிவர வேண்டும் செல்வதற்கு சம்மதமா எனக் கேட்டார். நான் என் தாயின் நிலையை எண்ணிப் பார்த்தேன், கட்டிய கணவன் கைவிட்டுவிட்டார். பெற்ற பிள்ளை யாவது மாடு மேய்த்து கஞ்சி ஊற்றும் என எண்ணினேன் பிள்ளையும் நாம் சொல்வதைக் கேட்கவில்லை என்று அழுது வடித்தக் கண்ணீர் என் உள்ளத்தை உலுக்கியது. நான் சரி என்று ஒத்துக்கொண்டு என் தாயிடம் இதை சொல்ல வேண்டாம் என்னை அந்த வீட்டில் விட்டு வந்தபிறகே சொல்லுங்கள் என கேட்டுக் கொண்டேன்.

அதுபோலவே என் தாய்க்கு தெரியாமல் காலையில் செருகடம்பூர் சென்று அந்த வீட்டில் என்னை விட்டு மாதம் ஒரு மூட்டை நெல், இரண்டு வேளை சாப்பாடு என பேசி நான் முள்ளங்குடியில் ஏன் மாடு மேய்க்க வில்லை என்ற காரணத்தையும் சொன்னார். அவர்களோ இரும்பு மரக்காலுக்கு பதில் மண்கலையம் வாங்கித் தந்தார்கள். எனக்கு முன் அங்கு மாடு மேய்ப்பவர்கள் அனைவரும் மண் கலயத்தில் தான் சாப்பிடுகிறார்கள். இதுவும் எனக்குப் பிடிக்கவில்லை.

இருப்பினும் என் தாயின் நிலை கருதி மண் கலயத்தில் சாப்பிடுவதற்கு ஒத்துக்கொண்டேன். என்னை வேலைக்கு விட்டுச் சென்ற அண்ணன் கோபால் அவர்கள் உடனே என் தாயிடம் போய் செய்தியை சொல்கிறார். என் தாயுடன் என் தங்கையும் செருக்கடம்பூர் வந்து நான் வேலைக்கு அமர்ந்த வீட்டிற்குச் சென்று நான் கண்ணையனின் தாயார் என்று சொல்லி எங்கள் நிலைபாடுகளை சொல்லி அழுதிருக்கிறார்கள். அவர்களோ என் தாயாருக்கு ஆறுதல் சொல்லி அவன் உன் பிள்ளை. இனி அவன் எங்க வீட்டுப் பிள்ளை எனக்கூறி சாப்பாடு கொடுத்து அனுப்பியுள்ளார்கள்.

மாலை நான் கொள்ளிடக்கரையில் இருந்து ஆடு, மாடுகளை ஓட்டிவந்து கொட்டகையில் கட்டிவிட்டு சாப்பாடு கேட்க வெட்கப்பட்டு நின்று கொண்டிருந்தேன். அதுசமயம் என்னை கொல்லைப்புறம் வீட்டுக்காரம்மா அவரது கணவர், மாமியாரும் என் அருகில் வந்து என் தாய் வந்து சென்றதையும், அவர்களிடத்தில் நான் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பயையும் மிகவும் பாசத்தோடும், அன்போடும் எடுத்துச் சொன்னார்கள். நானும் சரி என்று ஒத்துக்கொண்டு அவர்கள் சொன்னபடியே வாயில் பொய்யும் கையில் திருட்டும் இல்லா மல் நல்ல முறையில் பணி செய்து வந்தேன். அவர்களுக்கு என்னை மிகவும் பிடித்துவிட்டது. அவர்கள் என்னிடம் தீண்டாமை பாராமல் இருந்தாலும் அவர்கள் சார்ந்த சமூகம் அவர்களை விட்டுவிடுவதற்கில்லை.

அதற்கோர் எடுத்துக்காட்டு அப்போது அவ்வூரில் ஒரு பொது கிணற்றில் அங்குள்ள உயர்ஜாதி மக்கள் தண்ணீர் எடுப்பார்கள். ஒரு நாள் அவ்வீட்டில் உள்ள மருமகளானவர்கள் ஊருக்குப் போய்விட்டார். அவரின் மாமியார் வயதானவர்கள். ஆதலால் என்னிடம் கிணற்றில் தண்ணீர் எடுத்து வரும்படி தெரிவித்து குடத்தை கொடுத்தார்கள். நானும் கிணற்றில் தண்ணீர் எடுத்துக்கொண்டு கொடுத்தேன். இதை அத்தெரு அம்மையார் ஒருவர் பார்த்து விட்டார். அவர் அத்தெருவில் உள்ள பெண்க ளெல்லாம் அழைத்து வீட்டிற்கு வந்து எப்படி ஒரு பறையனைவிட்டு தண்ணீர் எடுக்கச் சொன் னீர்கள் என்று சண்டை பிடித்துவிட்டார்கள். மறுதினமே என் பண்ணை முதலாளி வீட்டில் இறக்கிவிட்டார்.

அதுசமயம் நான் அடைந்த வேதனைகள் சொல்லிலடங்காத நிலையில் நாம் ஏன் இந்த கீழ் ஜாதியில் பிறந்தோம். சாதாரணமாக கிணற்றில் தண்ணீர் எடுத்ததற்கே நம்மை பறையன் என்று கேவலமாக பேசுகிறார்கள்

என்ற மன வேதனை என் பிஞ்சு உள்ளத்தை உலுக்கிக்கொண்டே இருக்கும்.

இவ்விஷயங்களை என்னோடு வேலை பார்ப்பவர்களிடம் சொன்னேன். என்னை ஏர் உழுவதற்கும் மற்றும் பல பணிகளுக்கும் ஈடு படுத்தினார்கள். இத்தருணத்தில் அப்பகுதியில் தத்துவமேதை ம.கோ.மணி அவர்களின் மூலமாக தி.மு.க. உதயமாயிற்று. அவருடைய ஊர் மதகு சாலை முள்ளங்குடி ஊராட்சிக் குட்பட்டது. முள்ளங்குடி தாழ்த்தப்பட்டவர் களிடத்தில் தி.மு.க.வில் ஜாதி இல்லை, எல்லோரும் ஒன்றுதான் என்றும் தி.மு.க.வின் கொள்கை, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்றும். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பது தான் கொள்கை என்றும் தமிழகம், ஆந்திரம், கர்நாடகம், கேரளம் ஆகிய நான்கு மாநிலங்களும் மொழி வழி பிரிந்து இனவழி ஒன்று கூடி திராவிட நாடு அமைத்து கூட் டாட்சி அமைப்பதே லட்சியம் என்றும் தெரி வித்ததின்பேரில் கிளை கழகம் உருவாயிற்று.

அதன் பயனாக அண்ணா அவர்களின் திராவிட நாடு, கருணாநிதி அவர்களின் முரசொலி ஏ.வி.பி. ஆசைத்தம்பியின் தனி அரசு இராம அரங்கண்ணல் அவர்களின் அறப்போர், பி.எஸ். இளங்கோ அவர்களின் மாலைமணி ஆகிய பத்திரிகைகள் வரலாயின.

நான் சிறுவனாக இருந்தபோதிலும் இப்பத் திரிகைகளை படிப்பேன். அதன் பயனாக நானும் தி.மு.க.வால் கவரப்பட்டேன். அக்காலக் கட்டத்தில் தி.மு.க.வில் மேடை பாடகர்கள் திண்டுக்கல் ராணி, கரிகாலன் ஆரூர் செந்தமிழின் கோவில்பட்டி மணிசாமி இன்னும் நாகூர் ஹனிபா போன்றவர்கள் எங்கள் பகுதிக்கு வந்து நிகழ்ச்சி நடத்துவார்கள். அதில் ராணி, கரிகாலன் சினிமா பாடல்களில் இருந்தே பாடுவார்கள். அப்பாடல்களை புத்தகமாகவும் விற்பனை செய்வார்கள். நான் அப்புத்தகங்களை வாங்கி படித்து எங்கள் தெருவில் நடைபெறும் திருமணம், காதணி விழா, மஞ்சள் நீராட்டு விழா போன்ற நிகழ்ச்சி களில் பாடுவேன். பின் தி.மு.க. பொதுக் கூட்டங்களில் பாட ஆரம்பித்தேன்.

பின் 1962-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் அண்ணன் கோ.சி. மணி அவர்கள் எங்கள் தொகுதி (ஆடுதுறை)-ல் போட்டியிட்டார்கள். அதுவரை பாடகனாக இருந்த நான் மேடை பேச்சாளனாக உருவாக்கப்பட்டேன். காலை யில் இருந்து நான் பண்ணை வேலை செய்யும் வீட்டிற்கு உழைத்துவிட்டு மாலையில் கட்சிப் பணிக்காக உழைப்பேன். முள்ளங்குடி கிளை கழகத்தில் உள்ளவர்கள் என்னிலும் முதியவர்கள் இருப்பினும், என்னை உற்சாகப்படுத்தி வழி நடத்துவார்கள்.

பாடகனாகவும், பின் மேடைப் பேச்சாள னாகவும் ஆன காரணத்தால் எங்கள் பகுதிகளில் கழகத்தை வளர்க்க அரும்பாடுபட்டவர்களான தத்துவமேதை அண்ணன் கோ.மணி, மாண்புமிகு அண்ணன் கோ.சி.மணி உழவர் தளபதி என அழைக்கப்பட்ட பொன் தருமன், கதிராமங்கலம் கு.கோவிந்தராஜ் கூட்டுமன்ற தலைவராகவும் சட்ட மன்ற உறுப்பினராகவும் பணியாற்றிய அன்பு சகோதரர் மறைந்த க.சோ.கணேசன் போன்றவர்களின் அன்புக் குரியவனாக அதிலும் குறிப்பாக ம.கோ.மணி அவர்களிடம் நெருக்கமாக இருந்து அவர்களின் அறிவுரையின் படியும், ஆலோசனையின்படியும் செயல்படுவேன். பகல் முழுவதும் கழனியில் உழைப்பேன். இரவு முழுவதும் கழகப்பணி செய்வேன்.

கழக பத்திரிகைகளை படிப்பேன், படிப் பதின் பயனாக மேடைகளில் பேசுவதற்கு பல செய்திகள் கிடைக்கும். கழகம் எங்கள் பகுதியில் சேரிகள்தோறும் வளர ஆரம்பித்தது. இந்த தருணத்தில் தான் கழகத்தை துவங்கிய மாமா பி.சண்முகம், மாமா எஸ்.மாணிக்கம், மாமா கே.கோவிந்தசாமி அண்ணன் ஐ. கலியபெருமாள், நண்பர் டி.வைத்தியநாதன் போன்றவர்களுடன் மற்றும் கழக உறுப்பினர்கள் அனைவரும் கூடி ம.கோ.அவர்களிடம் எங்களுக்குள் ஜாதியக் கொடுமைகளை களைய வேண்டும் என சில கோரிக்கைகளை வைத்தோம்.

முதல் கோரிக்கை டீக்கடையில் எங்களுக்கென்று தனி இடம் தனி டவராசெட் இவை ஒழிக்கப்பட வேண்டும். இரண்டாவதாக கொள்ளிடக்கறைக்கு பிணம் எடுத்துச் செல்ல வேண்டும். காரணம் தற்போதுள்ள சுடுகாடு வாய்க்கால்களையும், வயல்களையும் கடந்து

செல்ல வேண்டியிருப்பதே. மூன்றாவதாக கோயில் வழிப்பாட்டில் எங்களுக்கும் உரிமை வேண்டும் என்பதையே. (இவைகள் அனைத்தும் பேரறிஞர் டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் அவர்கள் எழுதிய அரசியல் சாசன சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது) ம.கோ. அவர்களும் காவல்துறை மற்றும் சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளை சந்தித்து கோரிக்கை மனுவாகவும் கொடுத்தனர்.

காவல்துறையும் வரும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் வருவார்கள். ஆனால் தீர்வு எதுவும் கிடைக்காமல் பல சந்தர்ப்பங்களில் அவமானப்படுத்தப்பட்டிருக்கிறோம். இந்த தருணத்தில் முள்ளங்குடி ஊராட்சி மன்றத் தேர்தலில் அண்ணன் ம.கோ.அவர்கள் பலமான எதிர்ப்பில் காங்கிரஸ் சார்பில் சுப்பிரமணிய அய்யரை எதிர்த்து ஊராட்சி மன்ற தலைவராக வெற்றியை பெற்றார்கள். அவர்கள் வெற்றிக்கு நான் கடினமாக வேலை செய்தேன். அவர்கள் வெற்றி பெற்றபின் முள்ளங்குடி ஊராட்சிக்குட்பட்ட மதகு சாலை தலித் மக்களுக்கு குடியிருப்பு மனைகள் தேவைப்பட்டதால் ஒரு புறம்போக்கு இடத்தில் மனைகள் கொடுக்கப்பட்டது.

அந்த இடத்தை அவ்வூரைச் சேர்ந்த காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த முருகேச பண்டாரம் என்பவர் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட நல்லூரிலிருந்து சில அடியாட்களை அழைத்து வந்து தகராறு செய்தபோது அடிதடி ஏற்பட மதகு சாலை தலித்துகள் ஒன்றுகூடி அவர்களை அடித்துத் துரத்தினர். அதில் முருகேச பண்டாரத்திற்கு பலத்த அடியின் காரணமாக தஞ்சை அரசு மருத்துவமனையில் சேர்ந்து 4 தினங்களுக்கு பின் அவர் இறந்து விடுகிறார். இதன் பயனாக ம.கோ. மற்றும் மதகு சாலை தலித் ஆண்கள் அனைவரும் தலைமறைவாகி விடுகிறார்கள். நான் முள்ளங்குடியில் இருக்கிறேன்.

இந்தச் சம்பவத்திற்கும், எனக்கும் எந்த சம்பந்தமுமில்லை. ஆனால் காங்கிரஸ் மற்றும் முள்ளங்குடி ஜாதி இந்துக்கள் காவல்துறையிடம் ம.கோ. இருக்குமிடம் எனக்குதான் தெரியும் என்றும் அதனால் என்னை கைது செய்து விசாரித்தால் உண்மை தெரியும் எனவும் தெரிவித்ததின் பேரில் என்னை கைது செய்ய காவல்துறை முயற்சிக்கிறது. இச்செய்தி எனக்கு கிடைக்கப் பட்டது.

நானும் தலைமறைவாகினேன். குறிஞ்சி என்ற ஊரில் எனது உறவினர் வீட்டில் தங்கியிருந்தேன். அவ்வூரில் தி.மு.க.வைச் சேர்ந்த கே.கே.குஞ்சுதபாதம் என்ற சகோதரர்கள் மற்றும் ஊர்மக்கள் என்னை பாதுகாத்து வந்தார்கள். இந்நியையில் மதகுசாலை தலித் ஆண்கள் தலைமறைவானதால் காவல்துறை அங்குள்ள பெண்களை துன்புறுத்தும் செய்தி எனக்கு கிடைத்தது. அதற்கு தீர்வு காண வேண்டும் என்பதற்காக கே.கே.குஞ்சுதபாதம் அவர்களின் சகோதரர் நாகராஜனை அழைத்துக் கொண்டு இரவோடு இரவாக ஆடுதுறை சென்று அண்ணன் கோ.சி.மணி அவர்கள் இல்லம் சென்று அவர்களிடம் நிலைமைகளை எடுத்துச் சொன்னேன். அவர்கள் எங்களிடம் 21 நபர்கள் மீது வழக்கு தொடர்ந்துள்ளார்கள். அதில் ம.கோ.அவர்கள் தான் கொலை செய்தார் என வழக்கு கொடுத்துள்ளார்கள். ஆதலால் ம.கோ.அவர்களை கோர்ட்டில் ஒப்படைத்துவிட்டால் பிரச்சினை இருக்காது. அதை நான் பார்த்துக் கொள்கிறேன் என தெரிவித்து எங்களை அனுப்பி வைத்தார்கள்.

அதுபோலவே 2 நாள் கழித்து ம.கோ. அவர்களை தஞ்சை கோர்ட்டில் ஆஜர்படுத்திய பின் நிபந்தனை ஜாமீனில் தஞ்சையில் இருந்து கொண்டு குறிப்பிட்ட காவல்நிலையத்தில் கையெழுத்து போட வேண்டும் என கோர்ட் உத்தரவிட்டது. அதன்பிறகு காவல்துறை கெடுபிடி குறைந்தது. அதன்பிறகே நான் முள்ளங்குடி செல்கிறேன். ஆரம்ப காலத்தில் ம.கோ. அவர்களின் துணையுடன் மேலே குறிப்பிட்ட டீக்கடை, கோயில், சுடுகாடு போன்ற பிரச்சனைகளை முன் நின்று நடத்தியதை மனதில் வைத்து ம.கோ. அவர்கள் கொலை வழக்கில் சிக்கியுள்ளதை பயன்படுத்தி என்னை கொலை செய்ய ஜாதி இந்துக்கள் முயற்சிக்கிறார்கள். அதற்கு என் சமூகத்தில் உள்ள சில ஆட்களை தேர்வு செய்துள்ளார்கள்.

அதன்படியே நான் ஊர் வந்த செய்தி தெரிந்தவுடன் அந்த சகாக்கள் இன்று என்னை கொலை செய்ய தேர்வு செய்யப்பட்ட ஆட்கள்

என் வீட்டீற்கு சில தவறான வார்த்தைகளை பேசி வருகிறார்கள்.

அப்போது என் தங்கையின் வயது 12. எப்படியும் அண்ணனை தேடி வருவார்கள். அப்படி வெட்ட வருபவர்கள் நம்மை வெட்டட்டும் என எண்ணி என் வீட்டு வாசலில் உள்ள பந்தலில் கயிறு கட்டிலைப் போட்டு எனது வேட்டியை போர்த்திக்கொண்டு படுத்திருந்தாள். தலை கொடுத்தான் தம்பி என்று தான் கேள்விப்பட்டிருப்பீர்கள்.

ஆனால் என் தங்கை அண்ணனுக்காக தலைக் கொடுத்தாள். தங்கை என பெயரெடுக்க கட்டிலில் படுத்திருந்தாள். கட்டிலில் அருகில் வரும்போது என் தங்கையின் சடைமுடி தொங்குவதை பார்த்துவிட்டார்கள். வந்தவர்கள் சுதாரித்துக்கொண்டு அவன் தங்கை படுத்திருக்கிறது எனக் கூறிக்கொண்டு மற்ற கழக உறுப்பினர்கள் வீடுகளை சோதனை போட்டிருக்கிறார்கள். எங்கேயும் நான் இல்லை என்ற பிறகு சென்றுவிட்டார்கள். செல்லும்போது இன்று எங்கோ பதுங்கிவிட்டான் என்றேனும் ஒருநாள் அவன் தலை உருழத்தான் போகிறது எனக் கூறிக்கொண்டே சென்றுள்ளார்கள்.

கொஞ்ச நேரம் கழித்து எனது அத்தையின் இளைய மகன் என் வீட்டிற்கு வந்து தங்கையிடம் விசாரித்திருக்கிறார். நடந்த சம்பவங்களை என் தங்கை சொல்லி இருக்கிறது. நான் முன்பே வந்திருப்பேன் என் வீடு, என் அண்ணன் வீடுகளிளெல்லாம் நுழைந்து அண்ணனை தேடினார்கள். அதனாலயே தாமதம் என கூறி அன்று இரவு என் தங்கைக்கு துணையாக இருந்துள்ளார்.

என் அத்தையின் மூத்த மகன் கோவிந்தசாமி எனக்கு துணையாக இருக்கிறார் என்ற காரணத்தால் அவரையும் காலி செய்து விட வேண்டும் என திட்டமிட்டுள்ளதின் காரணமாக அவரும் ஒழுகச்சேரியில் உள்ள எனது சின்ன அத்தை அவருக்கு (சின்னம்மா) வீட்டில் தலைமறைவாக இருந்து வருகிறார். மறுநாள் காலையில் என் தாயார் என்னைத் தேடி வெளியூர் சென்றவர் வீட்டிற்கு வருகிறார். இரவு நடந்த சம்பவங்களை என் தங்கையின் மூலமாக அறிந்து என் தாயார் என் மகன் என்ன தவறு செய்தான்? ஏன் இப்படி என் மகனை கொலை செய்ய நினைக்கிறீர்கள்? என பேசி இருக்கிறார். அதுசமயம் என்னை கொலை செய்ய நியமிக்கப்பட்டவர்களின் ஒருவன் என் தாயாரை அடித்துள்ளான்.

இச்செய்தி எனது தாய்மாமன் மகன் குள்ளன் மூலமாக அத்தை மகன் பெருமாள் அவர்களுக்கு தெரிந்து அவர் ஆண்ராமபுரத்தில் உள்ள என்னிடம் தெரிவித்தார். இச்செய்தி கேட்டு என் உள்ளம் நொந்து எந்த மக்கள் தீண்டாமை கொடுமைகளில் இருந்து விடுபட வேண்டும் என போராடினோமோ அம்மக்களே நம்மை அழிக்க நினைக்கிறார்களே என்ற மன வருத்தம் ஒரு புறம் இருந்தாலும்,

என்னைத் தற்காத்துக்கொள்ள வீச்சரிவாள், பீச்சுவாகத்தி போன்ற ஆயுதங்களை நானும், நண்பர் வைத்தியநாதன் அவர்களும் வைத்திருந்தோம். ஒரு சந்தர்ப்பத்தில் காவல்துறை வைத்தியநாதனிடம் இருந்து ஆயுதங்களை கைப்பற்றிவிட்டது. நான் தலைமறைவாக இருந்ததால் என் ஆயுதங்களை கைப்பற்றவில்லை. நான் உயிருக்கு பயந்து தலைமறைவாக வில்லை. அறியாத மக்கள் அண்டை வீட்டிற்கு சென்றால்தான் அடுப்பு புகையும் என்ற நிலையில் உள்ள அப்பாவி மக்கள் அவர்கள் என்னை கொலை செய்தாலும் அல்லது நான் அவர்களின் யாரையேனும் கொலை செய்தாலும் பாதிக்கப்படுவது என்னையும் சேர்த்து அனைவரும் தாழ்த்தப்பட்டவர்களே!

எய்தவன் இருக்க அம்பை கோபிப்பானேன் என்பது மட்டுமல்ல! என்னை பெற்றெடுத்த தாய் மாடுமேய்க்க செல்லவில்லை! என்று ஒரு வார்த்தை சொன்னார்களே அதுதான் கட்டிய கணவனை விட்டபின் பெற்ற பிள்ளையாவது மாடுமேய்த்து கஞ்சி ஊற்றும் என எண்ணினேன். என் பிள்ளையும் என் பேச்சைக் கேட்கவில்லை என கதறி அழுதார்களே. இவைகளெல்லாம் என்னை கட்டிப்போட்டது. அதனாலயே கொடியவன் ஒருவன் என் தாயை அடித்த செய்தியறிந்து நான் சட்டப்படி நடவடிக்கை எடுப்பார்களென்ற நம்பிக்கையில் பந்தநல்லூர் காவல்நிலையம் சென்று சில குறிப்பிட்ட நபர்கள் மீது புகார் கொடுத்தேன். புகாரை பெற்றுக்கொண்ட காவல்துறை ஊருக்கு வந்து நான் புகார் கொடுத்த நபர்களை காவல்

நிலையம் வரும்படி சொல்லி செல்கிறது. என்னையும், என் தாய், தங்கையும் அழைத்து வரும்படி கூறி சென்றனர். எங்களுக்கு துணையாக ஒழுகசேரியில் தலைமறைவாகியுள்ள அத்தை மகன் கோவிந்தசாமி, சின்ன அத்தை மகன் முருகையன் இருவரையும் (பெருமாள் ஒழுகசேரி சென்று) ஜாதி இந்துக்களும், தாழ்த்தப்பட்டவர்களும் படை திரள்கிறார்கள். நீங்கள் அவர்களுக்கு துணையாக செல்லுங்கள் என கூறி வந்துள்ளார்.

நான், என் தாய், தங்கையையும் காவல் நிலையம் மாலை 5.00 மணிக்கு சென்று விட்டோம். அங்கே என் அத்தை மகன்களை பார்க்கிறேன். அவர்களை விசாரித்தபோது பெருமாள்தான் வந்து சொன்னான் என தெரிவித்தார்கள். எதிர் தரப்பினரும் பெருங் கூட்டமாக வந்திருந்தார்கள்.

நாங்கள் சென்றபோது இன்ஸ்பெக்டர் நிலையம் வந்துவிடுவார் இருங்கள் என கூறினார்கள். 8.00 மணியாகியும் வரவில்லை. காவல் நிலையத்தில் விசாரித்தபோது ஐயா இன்று வரமாட்டார்கள் நாளை மாலை வாருங்கள் என்று சொல்லிவிட்டார்கள். அப்போது இரவு 9.00 மணி. நல்ல இருட்டு, பந்தநல்லூரில் இருந்து முள்ளங்குடி மூன்று மைல் இடையில் கோயில் ராமபுரம் என்ற ஊர் மட்டுமே. நான் யோசித்தேன், அவர்கள் அதிகம் பேர் வந்துள்ளனர். நாமோ வயதான தாயையும், சின்னபிள்ளையாகிய தங்கையையும் அழைத்து வந்துள்ளோம். ஆகவே தற்போது வீட்டிற்கு செல்வதை தவிர்த்து நாங்கள் மூவரும் இரண்டாவது காட்சி சினிமா பார்த்துவிட்டு அங்கு நமக்கு வேண்டியவர்கள் யாரேனும் படம் பார்க்க வந்திருந்தால் அவர்களுடன் செல்வோம் என கூறி என் அத்தை மகன்கள் இருவரையும் ஊருக்கு அனுப்பிவிட்டு நாங்கள் சினிமாவிற்கு சென்று விட்டோம்.

(நாங்கள் சினிமா பார்ப்பது நோக்கமல்ல, எங்களை தற்காத்துக் கொள்வதே நோக்கம்) என் அத்தை மகன்கள் இருவரும் செல்வதை நாங்கள்தான் செல்கிறோம் என எண்ணி அவர்களை பின்தொடருகிறார்கள். அங்கே ஒரு குறிப்பிட்ட இடம் இருக்கிறது. அங்கு எது நடந்தாலும் தெரியாது. அந்த இடத்தை நெருங்குகிறபோது அவர்களை நாங்கள் என்று நினைத்து துரத்தியிருக்கிறார்கள். அவர்களும் ஓட ஆரம்பித்துள்ளார்கள். இவர்களும் ஓட முள்ளங்குடி எல்லையை கடந்து எல்லையைக் கடக்கிறார்கள். அப்போதுதான் அவர்களை துரத்திய கும்பல் சிந்திக்க ஆரம்பிக்கிறது. அவனுக்கோ வயதான தாய், சின்னப்பொண்ணு அவன் தங்கை ஓடியது அவர்களில்லை. அவர்கள் எங்கோ தங்கிவிட்டார்கள். அவர்களை ஒன்றும் செய்ய முடியவிலலை. ஆதலால் அவன் வீட்டை சூறையாடிவிடுவோம் என தீர்மானித்து என் வீட்டிற்கு சென்று பூட்டை உடைத்து என் வீட்டில் உள்ள அனைத்துப் பொருள்களையும் நல்லவேளை 2 ஆடுகள், 1 பசுமாடு கிடையில் விட்டிருந்ததால் தப்பித்தது. (12 கோழிகள்) உள்பட என் மண்ணெண்ணை சிமிழ் உள்பட அனைத்தையும் அள்ளிச் சென்று விட்டார்கள்.

நாங்கள் 2-வது காட்சி படம் பார்த்துவிட்டு படம் பார்க்க வந்த ஆண்டிராமபுரத்து சகோதரர்களுடன் வந்து நான் மட்டும் ஆண்டிராமபுரத்தில் இருந்துகொண்டு என் தாயையும், தங்கையையும் வீட்டிற்கு அனுப்பி வைத்தேன். வீட்டிற்கு சென்றவர்கள் திரும்ப நான் இருந்த ஆண்டிராமபுரத்திற்கு அலறி அடித்து அழுதுகொண்டு வருகிறார்கள். என்ன? என்று விசாரித்தால் வீட்டில் உள்ளபொருள்கள் அனைத்தையும் கொள்ளையடித்து சென்று விட்டார்கள் என கூறினார்கள்.

நான் மறுநாள் காலையில் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். அழைத்து வந்து விசாரித்து அவர்கள் நாங்கள் யாரும் அவர்கள் வீட்டை கொள்ளையடிக்கவில்லை. சாட்சி இருந்தால் சொல்ல சொல்லுங்கள், நாங்கள் ஒத்துக் கொள்கிறோம் என தெரிவித்தார்கள். கொள்ளையடித்தபோது பார்த்தவர்கள் தனிப்பட்ட முறையில் என்னிடம் சொல்கிறார்கள். இன்னார்தான் என்று. ஆனால் காவல் நிலையம் வந்து சொல்ல பயப்படுகிறார்கள். காரணம் அவர்களின் அச்சுறுத்தலும் ஜாதி இந்துக்களை அண்டிப்பிழைக்க வேண்டிய அவலமுமே. ஆகவே காவல்துறை சரியான சாட்சி இல்லை என காரணம் சொல்லி வழக்கை முடித்து விட்டது.

இந்நிலையில் என் தந்தையின் தாயார் எனது பாட்டி இறந்துவிட்டதாக செய்தி வருகிறது. இந்த செய்தியை பயன்படுத்தி என் தாயார் என்னையும் என் தங்கையையும் அழைத்துக்கொண்டு சிக்கல்நாயக்கன்பேட்டை (தற்போது நான் வசித்துவரும் பிறந்த ஊர்) வந்து விடுகிறார்கள். என் பாட்டியின் இறுதிச் சடங்கில் பங்கேற்று நிரந்தரமாக தங்கி விடுகிறோம்.

நான் இரவு 8.00 மணியளவில் வீடு செல்கிறேன். வீட்டில் என் தங்கை மட்டும் இருக்கிறது. தங்கையிடம் அம்மா எங்கே? என்று கேட்டேன் உங்களை தேடிக்கொண்டு பெரியம்மா வீட்டிற்கு சென்றுள்ளார்கள் என தெரிவித்தது. நான் குடியிருக்கும் குடிசை வீடு தனி இடம். பக்கத்தில் வீடுகள் கிடையாது. வேலி கருவைகாடு. நான் வந்தது இரவு யாருக்கும் தெரியவில்லை.

இந்நிலையில் முள்ளங்குடி தி.மு.க. கிளை பொருளாளர் எஸ்.மாணிக்கம் அவர்கள் தந்தை இறந்து விடுகிறார். (தி.மு.க.வை சேர்ந்த நாங்கள் ஓர் அணியாகவும் மற்றவர்கள் பிழைப்பு நாடி ஜாதி இந்துக்களுடன் இருந்து வருகிறார்கள்).

காலையில் மரண செய்தியறிந்து நான் மாணிக்கம் வீட்டிற்கு சென்றேன். அப்போது எல்லோரும் என்னைப் பார்க்கிறார்கள். உடனே என்னை தாக்க வேண்டும் என கூடி பேசுகிறார்கள். அதுசமயம் சிலர் அவன் சாவு வீட்டில் இருக்கிறான். இப்போது ஒன்றும் செய்ய வேண்டாம். பிரேதம் அடக்கம் செய்த பின் பார்த்துக்கொள்வோம் என முடிவு செய்திருக்கிறார்கள். இச்செய்தி எனக்கு தெரியாது.

பிரேதம் அடக்கம் செய்தபின் எனது அத்தை மகன் (இளையவன்) பெருமாள் சுடுகாட்டில் என்னை தனியாக அழைத்துச் சென்று இரவு உன்னை காலி செய்வதாக பேசி இருக்கிறார்கள். ஆதலால் நீ இரவு ஆண்டி ராமபுரம் சென்றுவிடு. உன் தங்கையை நான் பார்த்துக் கொள்கிறேன் என என்னை ஆண்டிராமபுரத்தில் விட்டு என் தங்கையிடம் சென்று அண்ணன் இரவு வீடு வந்தால் ஆபத்திருக்கு. ஆதலால் ஆண்டிராமபுரத்தில் இருக்கிறான். நீ பயப்படாமல் இரு. நான் வீட்டிற்கு சென்று வருகிறேன் என சொல்லி சென்றுள்ளார்.

- தொடரும்.



பாகம்-6

# இஸ்லாமிய வங்கி முறை! - சலம்



பத்திரிக்கையில் சில வாரங்களுக்கு முன்பு வந்த செய்தி அது. ஆதாரம் தேடத் தேவையில்லை ஏனென்றால் அது தினந்தோறும் விவசாயிகளுக்கு நடக்கும் அவலம் தான்.

அவர் ஒரு விவசாயி, தான் விளைச்சல் செய்த 400 கிலோ தக்காளியுடன் காய்கறி விற்பனை சந்தைக்கு வந்தார். போக்குவரத்திற்கு மட்டும் 300 ரூபாய் செலவு செய்து தன் கிராமத்தில் இருந்து வந்திருக்கின்றார்.

பயிரிட்ட காலத்தில் மட்டும் உரத்திற்காக 3000 ரூபாய் செலவு செய்த அவர் செய்த மொத்த செலவு 3500 இருக்கும், அதனுடன் அவரது உழைப்பு மற்றும் விவசாயம் செய்த காலம், இடம் அனைத்தும் அடங்கும். 4000 அல்லது 5000 விற்கும் என்று எண்ணிய அவர்க்கு அன்றைய சந்தையில் தக்காளி கொள்முதல் விலை பெரும் அதிர்ச்சியை தந்தது.

ஆம், அன்றைய கொள்முதல் விலை ஒரு கிலோ ஒரு ரூபாய் தான். தன் உழைப்பு வீணானதை அறிந்து அவர் விரக்தியில் தான் கொண்டு வந்த பொருட்களை அங்கு இருக்கும் கால்நடைகளுக்கு உணவாக போட்டுவிட்டு பெரும் ஏமாற்றத்துடன் சென்றார். இது தான் இன்றைய விவசாயிகளின் நிலை.

**இத்தகைய சிறு குறு விவசாயிகளை காப்பதற்கு நபி (ஸல்) அவர்கள் அறிமுகப்படுத்திய வழிமுறையே சலம் திட்டம்.**

சலம் - இது ஒரு விற்பனை ஒப்பந்தம். ஒப்பந்தத்தின் போது அந்த விவசாய பொருள் இருப்பதில்லை. பின்னாளில் கிடைக்க போகும் பொருளை முன்னதாகவே வங்கி முழு தொகை செலுத்தி வாங்கி கொள்ளும்.

இதன் மூலம் பயிர் விளைந்து விற்றால் தான் பணம் என்ற நிலை விவசாயிகளுக்கு இருக்க போவதில்லை. அவர்களின் அன்றாட வாழ்க்கை சுமூகமாக செல்லும்.

வங்கி மொத்தமாக முன்னமே பணம் செலுத்துவதால் பொருளின் விலையும் குறைவாக இருக்கும். விவசாயிகள் பாதுகாக்கப் படுவர் வறுமை தூரம் செல்வதால் வட்டி என்ற அபாயம் இல்லாமல் மக்கள் வாழ்வர்.

**ஒப்பந்த எடுத்துக்காட்டு:**

வங்கி மற்றும் விவசாயி அப்துல்லா செய்து கொள்ளும் ஒப்பந்தம்.

வரும் காலங்களில் சுமார் 3 முதல் 4 மாதங்களில் ஐந்து டன் (ஐந்தாயிரம் கிலோ) தர்பூசணி விளைவித்து வங்கிக்கு கொடுக்க வேண்டும். 1 கிலோ 10 ரூபாய் என்ற அடிப் படையில் 5000 கிலோவிற்கான தொகை 50000 ரூபாய் கொடுக்கப்பட்டுள்ளது. வங்கி அவ்வப் போது பணிகள் எவ்வாறு செல்கிறது என்று கவனிக்கும். குறிப்பிட்ட காலத்தில் பொருட் களை விவசாயி கொடுக்க வேண்டும் என்று ஒப்பந்தம் செய்து கொள்ளும்.

இதன் மூலம் விவசாயிக்கு சந்தை விலை குறைவு பற்றி அச்சம் இருக்காது, அவர் தன் வேலையை முழு வீச்சில் தொடங்குவார்.

வங்கி நேரடியாக பொருட்களை சந்தையில் விற்காததால் மற்றொரு வியாபாரிக்கு கடனாக விளைச்சல் பொருட்களை கொடுக்கும். அவர் அதனை விற்று தானும் ஒரு லாபம் அடைந்து வங்கிக்கு கடனையும் திருப்பி கொடுத்து விடுவார்.

இந்த சிறு திட்டத்தில் பண சுழற்சி அதிகமாக நடப்பதனால் விலைவாசியும் கட்டுப்பாட்டில் இருக்கும்.

இந்தியா போன்ற ஏழை விவசாய தேசத் திற்கு இத்தகைய திட்டங்கள் அவசிய தேவை. இறைவனின் உதவிகொண்டு அதை செயல் படுத்தக் கூடிய மக்களாக நம்மை ஆக்கிவைப் பானாக.

இன்ஷா அல்லாஹ் தொடரும்

**- அபுதாஹிர்**

# இஸ்லாம், அரசியல், அதிகாரம்

தொடர் 2

# அரபுலக எழுச்சி

## நீதியை நிலைநிறுத்துங்கள்

நிச்சயமாக நம் தூதர்களைத் தெளிவான அத்தாட்சிகளுடன் அனுப்பினோம்; அன்றியும் மனிதர்கள் நீதியுடன் நிலைப்பதற்காக அவர்களுடன் வேதத்தையும் துலாக் கோலையும் இறக்கினோம்.

(அல்குர்ஆன் 57:25.)

இப்பூமியில் நீதியை நிலைநிறுத்தவே நபியை அனுப்பினோம் என மிகத் தெளிவாக கூறுகின்றது குர்ஆன்.

இதன்படி, மனிதர்கள் நீதியுடன் நடப்பதற்காக மக்கா நகரில் இறைவனின் வார்த்தைகளை நபியவர்கள் பிரச்சாரம் செய்ய ஆரம்பித்திருந்தாலும் மதீனா சென்று அங்கே ஓர் ஆட்சியை நிறுவிய பின்னர்தான் இதில் வெற்றி கண்டார்கள்.

மேலும் ஒருவருக்கு அதிகாரம் வழங்கபட்டால் அவர் நேர்மையுடனும் நீதியுடனும் நடக்க வேண்டும் என்பதை யூசுப் நபி பாரோவிடம் சொன்ன வார்த்தைகளில் இருந்து புரிந்து கொள்ளலாம்.

“நாட்டின் கருவூலங்களுக்கு என்னை பொறுப்பாளராக்குங்கள். நான் நன்கு பாதுகாப்பவனாகவும் அறிந்தவனாகவும் இருக்கின்றேன்”

(அல்குர்ஆன் 12:55)

### பைஅத்

இஸ்லாத்தின் அரசியல் கொள்கைகளில் மிகவும் முக்கியமானது பைஅத் (உறுதிமொழி). பைஅத்தின் அவசியத்தை பின் வரும் நபிமொழி எடுத்துரைக்கிறது.

யார் ஒருவர் பைஅத் இல்லாமல் மரணிக்கின்றாரோ அவருடைய மரணம் அறியாமை காலத்து மரணத்தை போன்றது - சஹீஹ் முஸ்லிம்

ஹுதைபியா உடன்படிக்கையின் போது தனது தோழர்களிடம் இருந்து நபி (ஸல்) அவர்கள் பைஅத் பெற்று கொண்டார்கள். இணக்கம், கீழ்படிந்து நடப்போம் என்பதே அந்த பைஅத்தின் முக்கிய சாராம்சமாக இருந்தது.

பைஅத் அல்லது இரு தரப்புக்கு இடையே நடக்கும் ஒப்பந்தத்தில் பலவந்தபடுத்தும் காரணிகளோ அல்லது எந்த வித அச்சுறுத்தலோ இருந்திடக் கூடாது.

யஜீத் படைகளுக்கு எதிராக ஹுசைன் (ரலி) அவர்கள் கிளர்ச்சி செய்தது சரி என்கின்றார் 13 ஆம் நூற்றாண்டை சார்ந்த இமாம் இப்னு அல் ஜவ்சி அவர்கள். ஏனெனில் யாசித் மக்களிடம் இருந்து பெற்றுக்கொண்ட பைஅத் ஆனது முழுக்க முழுக்க ஒரு ஏமாற்று வேலை.

### கலந்தாலோசித்தல் (சூரா)

இஸ்லாத்தின் அரசியல் கொள்கைகளில் கலந்தலோசித்லுக்கும் முக்கிய பங்கு உண்டு. ஆட்சி அதிகாரத்தின் போது கலந்தலோசித்தே ஒரு விசயத்தில் முடிவு எடுக்கப்பட வேண்டும். இது ஒரு கடமையாகவே இஸ்லாத்தில் பார்க்கப்படுகிறது.

மேலும், அவர்கள் தங்கள் இறைவனின் கட்டளையை ஏற்றுக் கொள்கின்றார்கள். தொழுகையை நிலைநாட்டுகின்றார்கள். மேலும், அவர்கள் தங்களின் செயல்களை ஒருவருக்கொருவர் ஆலோசனை செய்து நடத்துகின்றார்கள். (அல்குர்ஆன் 42:38)

### சமூக நடைமுறையில் ஏற்பட்ட மாற்றங்கள்

நபி (ஸல்) அவர்களின் வருகைக்கு பின் சமூகத்தின் நடைமுறையில் மாற்றங்கள் ஏற்பட்டன.

ஹசன் அஸ்கரி அவர்களின் கருத்துப்படி, பல தெய்வகொள்கை வழிபாட்டிலிருந்து ஓரிறை கொள்கை வழிபாட்டிற்கும், சடங்கு சம்பிரதாய விதிகளிலிருந்து சட்டங்களின் அடிப்படை

யிலான விதிமுறைகளுக்கும், இரத்த பந்தங்கள், இனங்களின் அடிப்படையில் மனிதர்களிடம் ஏற்பட்ட நெருக்கமானது மாறி ஒழுக்கம், இறைஅச்சம் அடிப்படையிலும், முடியாட்சி யிலிருந்து இறைவனால் அருளப்பட்ட அதிகாரத்திற்கும் மாறின சமூகத்தில் நிலவி வந்த நடைமுறைகள்.

அதாவது ஷிர்க்கிலிருந்து தௌஹீத், ஜாஹி லியாவிலிருந்து ஷரியா, அசபிய்யாவிலிருந்து தக்வா, முல்கியத்திலிருந்து விலாயாஹ்.

நபி (ஸல்) அவர்களின் மறைவுக்கு பின் உமையாக்களின் காலத்தில் இந்த நடைமுறை யில் மாற்றம் ஏற்பட்டது. குர்ஆனின் நேரிய போதனைகளில் இருந்து மாறுபடத் தொடங் கினர் உமையாக்கள். சூராவின் அடைப்படை யில் கலீபாவை தேர்ந்தெடுக்கும் முறை மாறி முடியாட்சி வந்தது. கிரேக்க தத்துவங்கள் இஸ்லாமிய அரசியல் சித்தாந்தங்களில் ஆதிக்கம் செலுத்தின.

அப்பொழுது தான் பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த இமாம் அபு ஹசன் அல் மவார்தி (991-1058) அவர்கள் இஸ்லாமிய வரலாற்றில் முதன் முறையாக தலைமைத்துவத்திற்கான (இமாமத்) கருத்துகளை தொகுத்து முன் வைத்தார்.

இஸ்லாத்தில் அரசியல் அதிகாரம் குறித்தும் விரிவான கருத்துக்களை அவர் முன் வைத்தார். தீனை பாதுகாப்பதற்கும், உலகியல் விவகாரங்களை அழகிய முறையில் கையாள் வதற்கும் இமாமத் அவசியம் என்றார். இமாமத் இல்லாத இடத்தில் குழப்பம் தலைதூக்கும் என்றார். அறிவை தேடுவது, ஜிஹாத் செய்வது போன்றே கிலாபத்தை நிலை நிறுத்துவதும் முஸ்லிம் சமுதாயத்தின் கடமை என்றார். 13 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அறிஞர் இப்னு கல்தூனும் இதை போன்ற கருத்துகளையே முன் வைத்தார்.

**19 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட மாற்றங்கள்**

உமையாக்களுக்கு பின் ஆட்சி பொறுப்பை ஏற்ற அப்பாசியர்களின் காலத்தில் இஸ்லாத்தை மேலோங்க செய்திடும் பல இலக்கியங்கள் எழுதப்பட்டன. உம்மத், ஷரியத், ஜிஹாத் போன்ற குர் ஆனின் போதனைகளை மையப்படுத்தியே பிரச்சாரங்களும் அமைந்தன. இந்த கொள்கைகளில் எந்த வித வெளிப்புற தலையீடும் இல்லாமல் இஸ்லாமிய சமுதாயம் தனது பாதையை அமைத்து கொண்டது.




ஆனால் 18-ஆவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் அரபு உலகத்தை ஆக்கிர மிக்கத் தொடங்கியது ஐரோப்பா. இந்த ஆக்கிரமிப்புகள் கொஞ்சம் கொஞ்சமாக 19 ஆவது நூற்றாண்டின் இறுதி பகுதியில் வலுப்பெற்றது. இதன் விளைவாக, அதுவரை நிலைபெற்றிருந்த உம்மத், ஷரியத் மற்றும் ஜிஹாத் போன்ற கோட் பாடுகளை தேசியம், மதசார்பின்மை மற்றும் ஜனநாயகம் போன்ற மேற்குலகின் கோட்பாடுகள் இடம்பெயற செய்தன. இந்த நூற்றண்டில் தான் கம்யூனிசம், சோசியலிசம் மற்றும் லிபரலிசம் போன்ற இசங்களும் தலையெடுக்க ஆரம்பித்தன.

இன்ஷா அல்லாஹ் தொடரும்

**- அபூஹாசின்**



# தீண்டாமைக்குள்ளே தீண்டாமை..!

மதுரை பேரையூர் அருகே அமைந்திருக்கும் கிராமம் சந்தையூர். இங்கு தாழ்த்தப் பட்ட பிரிவைச் சேர்ந்த பறையர் மற்றும் அருந்ததியர் சமூக மக்கள் வாழ்ந்து வருகிறார் கள். இந்த பகுதியில் பறையர் சமூக மக்கள் ஒரு கோவிலை உருவாக்கியிருக்கிறார்கள். அத்துடன் அக்கோவிலுக்கு ஒரு சுற்றுச் சுவரை யும் ஏற்படுத்தினார்கள். அதுவே பின்னாளில் பெரும் பிரச்சனையை இரு சமூகங்களிடையும் உருவாக்கியது.

மேல் வர்க்கம் ஏற்படுத்திய ஜாதிய பாகுபாடு இடைநிலை சாதிகளிடம் பரவி அது இறுதியில் தாழ்த்தப்பட்ட வகுப்பை சார்ந்தவர்களுக்குள்ளும் வேராய் ஊன்றி நிற்கிறது.

தமிழ்நாட்டில் தலித்கள் மூன்று இனங் களாக உள்ளார்கள். இவர்களில் பறையர் சமூகம் அருந்ததியர் சமூகத்தை விட தங்களை மேலானவர்களாக கருதிக் கொண்டு அவர் களிடையே தங்களது ஆதிக்கத்தை முடிந்த வரை செலுத்துகிறார்கள். அதனால், இந்த இரண்டு சமூகமும் இணைந்து வாழும் பல இடங்களில் சாதிய பாகுபாட்டின் காரணமாக சிறு சிறு பிரச்சனைகள் ஏற்படும். ஆனால் சந்தையூர் கிராமத்தில் அது பெரும் பிரச்சனையாக மாறியது.

2011 ம் ஆண்டு இந்த சந்தையூர் கோவில் பிரச்சனை தொடங்கியிருக்கிறது. சந்தையூரை பொறுத்தவரை அருந்ததியர்கள் 70% பறை யர்கள் 30% வாழும் பகுதி. இங்கே பறையர் சமூகம் சார்பாக கோவில் கட்ட அருந்ததி யர்களிடமும் சம்மதம் வாங்குகிறார்கள்.

ஆனால் கட்டப்பட்ட கோவிலுக்கு அருகில் அருந்ததியர் வாழும் பகுதியையும் பறையர்கள் வாழும் பகுதியையும் இணைக் கும் ஒரு நடைபாதை இருக்கிறது. அந்த பாதையில் அருந்ததியர்கள் செல்லக் கூடாது என்று முள் வேலி வைத்து அடைக்கிறார்கள்.

இதை எதிர்த்து தாசில்தாரிடம் மனு கொடுக் கப்படுகிறது ஆனால் எந்த நடவடிக்கைகளும் இல்லை. அதனால் அப்போதைய மதுரை கலெக்டர் சகாயம் அவர்களிடம் மனு கொடுக் கவே அவர் தாசில்தாரை அழைத்து எச்சரிக்கை கொடுத்து விட்டு இதை விசாரிக்கும் தலைமை காவலதிகாரிக்கு உத்தரவு பிறப்பிக்கிறார். பின்னர் நீதிமன்றத்தின் மூலம் அந்த முள் வேலி அகற்றப்பட்டது.

பின்பு ஏப்ரல் 2013 அன்று இந்த இரு பிரிவினருக்கும் இடையே கலவரம் ஏற்பட்டது. இதிலும் அருந்ததிய சமூக மக்கள் அதிகம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.



தொடர்ந்து, தாங்கள் கட்டிய கோவிலுக்குள் அருந்ததிய மக்கள் எப்படி நுழையலாம் என பறையர் சமூக மக்கள் அருந்ததிய சமூக மக்களை உள்ளே நுழைய விடாமல் தடுத்தும் எல்லோரும் செல்லும் கோவிலுக்கு அருகில் உள்ள பொதுப்பாதையில் கூட அருந்ததிய மக்கள் வரக்கூடாது என்றும் தடுத்தனர்.

அருந்ததிய சமூகத்தை சார்ந்த குழந்தைகளை, பெண்களை என யாவரும் வரும் பாதையில் செல்லும் போதெல்லாம் சாதியின் பெயர் கூறி மிக கேவலமாக பேசி அசிங்கப் படுத்தியுள்ளனர். இதனை பொறுக்க முடியாத மக்கள் ஒரு கட்டத்தில் தங்கள் கிராமத்தில் இருந்து வெளியேறி அப்பகுதிக்கு அருகில் மலையடிவாரத்தில் உள்ள காடு ஒன்றில் தங்கி தங்கள் நீதிக்காக போராட தொடங்கினர்.

இந்த போராட்டம் 77 நாட்கள் வரையும் நீடித்தது. இதில் பழனி முருகன் என்பவர் மாரடைப்பின் காரணமாக போராட்ட களத்திலேயே உயிர் துறந்தார். அதனால் வெகுவாக தமிழகத்தின் கவனத்தை ஈர்த்த பெரும் போராட்டமாகவும் இது மாறியது.

இறுதியில் "ஆட்டோ கண்ணாடிய திருப்பினா வண்டி ஓடும்" என்பது போல இப்பிரச்சனைக்கு தீர்வு கோவிலின் சுற்றுச்சுவர் தான் என அதன் ஒரு சிறு பகுதியை மட்டும் இடித்து விட்டு அம்மக்களுக்கு நீதி கிடைத்து விட்டதாக கூறி போராட்டத்திலிருந்து விலக்கியது அரசு.

போராட்டம் நடைபெற்று கொண்டிருக்கும் காலக்கட்டத்திலேயே பல்வேறு முஸ்லிம் அமைப்புகள், தலித் அமைப்புகள் சார்பாகவும் பல்வேறு உதவிகள் போராட்ட களத்தில் இருந்த மக்களுக்கு செய்து தரப்பட்டது. அதில் தாருல் இஸ்லாம் பவுண்டேசன் டிரஸ்டும் கலந்து கொண்டது.

அப்போது அம்மக்களிடம் செய்த சிறு உரையில் பலர் அம்மக்களை பாராட்டியும் போராட்டத்தை கைவிடவேண்டாம் இதுவே உங்களுக்கு மிகப்பெரும் பலனை தரும் என்றும் கூறினார்கள். அப்போது தாருல் இஸ்லாம் சார்பாக சென்றிருந்த சகோதரர் அவர்கள், அம்மக்களுக்கு தீர்வு எது என்பதை எடுத்துரைத்தார்

அவர் பேசுகையில், "இங்கே போராடிக் கொண்டிருக்கும் சந்தையூர் அருந்ததியர் மக்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளை விடவும் மிக அதிகமான பிரச்சனையை வெளியிலிருக்கும் தலித் சமூகம் தினந்தோறும் சந்தித்து கொண்டு தான் வருகிறது. அவர்களும் போராடுகிறார்கள். ஆனால், அது அவர்களுக்கு தீர்வை கொடுத்ததா என்று பார்த்தால்

அது இல்லை. பழைய படி அவர்களின் வாழ்க்கை அப்படியே நகர்கிறது, உங்கள் போராட்டக் குணம் சிறப்பாக உள்ளது.

நீங்கள் எவ்வளவு வேண்டுமானாலும் போராடலாம் ஆனால் தீர்வு இஸ்லாத்தில் இணைவதில் மட்டுமே இருக்கிறது. இதை நான் சொல்லவில்லை உங்களில் இருந்தே தலித் ஒடுக்குமுறைகளுக்கெதிராக போராட்டமே வாழ்க்கை என்று இருந்த பல தலைவர்கள் கூறியிருக்கிறார்கள்.

இதில் ஒருவர் தான் நீலப்புலிகள் இயக்கத்தை அமைத்து போராடிய டி.எம்.மணி என்ற உமர் ஃபாரூக் அவர்கள். தனது 20 வருட போராட்ட வாழ்க்கைக்கு பிறகு இஸ்லாம் ஒன்றே தீர்வு என்று மேடைகளெங்கும் முழங்கி இஸ்லாத்தை ஏற்றார். இஸ்லாத்தை ஏற்றதும் ஜாதி அழிந்து விடுகிறது இதற்கு எவ்வளவு போராட்டங்களை நம் சந்ததிகள் செய்து ஏமாற வேண்டும் என்றார்.

தீர்வை நோக்கி வாருங்கள். நாளை உங்களுக்கு இதே பகுதியில் மிக கௌரவமான நிலையில் இன்று உங்களை அடிமையாக நினைக்கும் இதே மக்கள் 'பாய் வாருங்கள்' என்று கூறும் நிலைக்கு தள்ளப்படுவார்கள்." என்று முடித்ததும் அம்மக்கள் தங்களுக்கான பாணியில் கைதட்டி அனைவரும் அந்த கருத்தை ஏற்றுக் கொண்டதைபோல ஆரவாரம் செய்தனர்.

தற்போது (ஏப்ரல் இறுதி) போராட்டம் முடிவடைந்து ஒரு மாத காலம் ஆகப் போகிறது. போராடிய மக்கள் கேட்டு கொண்டதை போல சுற்றுச்சுவரின் ஒரு பகுதி இடித்து விடப்பட்டது. இப்போது அங்கு சூழல் எப்படி இருக்கிறது என்று அறியவும் இஸ்லாத்தை சொல்லிடவும் தாருல் இஸ்லாம் குழு சார்பாக சந்தையூர் கிராமத்திற்கு சென்றோம்.

முன்பு எப்படி மக்கள் இருந்தார்களோ அதில் சிறிதும் மாற்றமில்லாமல் தான் அம்மக்கள் இப்போதும் இருக்கிறார்கள் என உணர முடிந்தது. பறையர் மக்களுக்கும் அருந்ததியர் மக்களுக்கும் இன்னும் பேச்சு வார்த்தை இல்லை. தற்போது கூட சில மோதல்கள் இவர்களுக்கு இடையில் நடந்து கொண்டே தான் இருக்கிறது. நாம் செல்வதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு கூட தங்களிடம் பிரச்சனை செய்து தாக்க வந்ததாக பாதிக்கப்பட்ட மக்கள் கூறினார்கள்.

நாம் செல்லும் போது இன்னொரு விடயமும் தெரிய வந்தது. சந்தையூருக்கு அருகேயே கீழப்பட்டி என்னும் கிராமம் இருக்கிறது. இங்கு முஸ்லிம்கள் பரவலாக வாழ்கிறார்கள்.

1990ல் ஏற்பட்ட தலித்கள் மீதான கலவரத்தில் தாங்கள் வழி தெரியாமல் நின்றிருக்கும் போது கூரியூர் முகம்மது அலி ஜின்னா அவர்களின் தாவாவின்( இஸ்லாமிய அழைப்பின்) மூலம் இஸ்லாத்திற்கு வந்தவர்கள் தான் கீழப்பட்டி முஸ்லிம் மக்கள். இந்த கீழப்பட்டி முஸ்லிம் மக்களின் வாழ்க்கையே சந்தையூர் மக்களுக்கு மிகப்பெரிய எடுத்துக்காட்டாய் விளங்குகிறது. இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வது தான் ஒரே தீர்வு இதை கீழப்பட்டி மக்களின் மூலமாக கண் முன்னாலேயே காண்கிறோம் என அந்த மக்களின் பிரதிநிதியாக உள்ள பழனிவேல் கூறுகிறார்.

நாம் சந்தையூருக்கு செல்லும் போது ஆண்கள் பலர் வெளியூர்களுக்கு வேலைக்கு சென்று விட்டதால் பெண்கள் தான் அங்கு குழுமியிருந்தனர். நாம் சென்றதும் நம்மை அன்பாக வரவேற்று நம்மை சூழ்ந்து கொண்டு அமர்ந்தார்கள். அப்போது இஸ்லாத்தை பற்றியும் அதில் உள்ள சந்தேகங்கள் பற்றியும் நம்மிடம் அம்மக்கள் கேட்டு தெரிந்து கொண்டார்கள்.மேலும் அம்மக்கள் தீர்வை நோக்கி நகர ஆரம்பித்து விட்டார்கள்.

இயக்கங்கள், அரசியல் கட்சிகள் எல்லாம் தங்கள் சுய லாபத்திற்காக இதுபோன்ற மக்களை தீர்வை நோக்கி பயணிக்க வைக்காமல் தடுத்து வருகிறார்கள். ஆனால் தற்போது அம்மக்களே எது நமக்கேற்ற வழி என சிந்திக்க ஆரம்பித்து விட்டார்கள் என்பதையே சந்தையூர் நிகழ்ச்சி நமக்கு உணர்த்துகிறது.

# நம் வீழ்ச்சிக்கான காரணங்கள்..?



இமாம் யூசுப் அல்கர்லாவி

ஒப்பாரும் மிக்காருமில்லாத சமுதாயமாகத் திகழ்ந்த முஸ்லிம்கள் ஒரு கட்டத்தில் வீழ்ச்சியடைந்து பின்னர் தொடர்ந்து வீழ்ந்து கொண்டே போவதற்குச் சில காரணங்கள் உண்டு அவை.

1) முஸ்லிம் சமுதாயத்துக்கு நலன் பயக்கும் காரியங்களை முஸ்லிம்கள் கைவிட்டு விட்டனர். கல்வியில் நாம் இதர சமுதாயங்களை விஞ்சியிருக்க வேண்டும். போர்த்துறையிலும் தொழில் துறையிலும் நாம் யாருக்கும் சளைத்தவர்களல்லர் என்று திகழ்ந்திருக்க வேண்டும். இவற்றின் மூலம் மற்றவர்கள் நமக்குத் தலைமையேற்பதற்குப்பதிலாக நாமே நமக்குத் தலைமையேற்று நமது முடிவுகளை நாமே எடுத்திட முடியும்.

முஸ்லிம் சமுதாயம் எப்படிப்பட்ட சமுதாயம் தெரியுமா? என்று வீண் ஜம்ப மடித்துக் கொண்டும் பீற்றிக் கொண்டு மிருக்காமல் நிஜமாகவே நாம் தன்னிறைவு பெற்று விட முடியும்.

இதுபோல இஸ்லாமிய சட்டத்துறையில் புதிய ஆராய்ச்சிகள் வர வேண்டும் நவீனப் பிரச்சனைகளுக்கான முடிவுகள்அகழ்ந்தெடுக்கப்பட வேண்டும். இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் தாவா பணி பரவலாக்கப்பட வேண்டும். பைஅத் எனும் சத்தியப் பிரமாணத்தின் அடிப்படையில் அமையும் (ஷதிறா) ஆலோசனை மையம் வேண்டும்.

ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் மக்களுக்கு வேண்டும். இஸ்லாத்தை ஓரங்கட்டிவிட்டு வாழும் அநியாயக்கார ஆட்சியாளர்களை எதிர்த்து அகற்றிட வேண்டும் இவ்வாறாக எவ்வளவோ உள்ளன.

இவற்றையெல்லாம் முஸ்லிம் சமுதாயத்தில் சிலராவது செய்ய வேண்டும். சிலர் செய்தால் மற்றவர்கள் மீது இந்தக் கடமை நீங்கிவிடும் இது ஒரு ஃபர்ளு கிஃபாயா. ஆனால் இவற்றைச் செய்திட எவருமில்லாமல் போனதால் நாம் வீழ்ந்தோம். வீழ்ந்து கொண்டிருக்கிறோம்.

2) ஒவ்வொரு முஸ்லிமும் கண்டிப்பாக செய்து தீர வேண்டிய கடமை (ஃபர்ளு அய்ன்)களில் சிலவற்றைக் கூட நாம் செய்யாமலிருக்கின்றோம் அல்லது அதற்குரிய முக்கியத்துவத்தைத் தராமலிருக்கின்றோம். இதற்கு உதாரணமாக நன்மையை ஏவி தீமையைத் தடுக்கும் பணியைக் குறிப்பிடலாம்.

இறை நம்பிக்கையுள்ள சமுதாயத்தை வர்ணிக்கும் போது தொழுகை, ஸகாத் ஆகியவற்றை விடவும் இதை அல்லாஹ் முதலில் கூறியுள்ளான்.

இறை நம்பிக்கையுள்ள ஆண்களும், இறை நம்பிக்கையுள்ள பெண்களும் ஒருவர் மற்றவரின் நலன் விரும்பிகள், இவர்கள் நன்மையை ஏவுவார்கள். தீமையைத் தடுப்பார்கள். தொழுகையை நிலை நாட்டுவார்கள் ஸகாத் கொடுப்பார்கள். (9:71)

இந்த சமுதாயம் சிறந்த சமுதாயமாகத் திகழ்வதற்கு முதல் காரணமாக இருப்பதே இந்தப் பணிதான் என்பதை அடுத்த வசனத்தில் அல்லாஹ் தெளிவுபடுத்துகிறான்.

மக்களுக்காகத் தோற்றுவிக்கப்பட்ட சமுதாயத்தில் நீங்களே சிறந்த சமுதாயமாக இருக்கிறீர்கள். நீங்கள் நன்மையை ஏவுகின்றீர்கள். தீமையைத் தடுக்கின்றீர்கள். (3:110)

இந்தக் கடமையைக் கைவிட்டதால் இஸ்ரவேல் சமுதாயம் தம் நபிமார்களுடைய சாபத்துக்கு ஆளாகிவிட்டது என்றும் கூறி எச்சரிக்கிறான்

இன்னொரு வசனத்தில்...

"இஸ்ரவேல் சமுதாயத்திலுள்ள இறை மறுப்பாளர்கள் தாவூத் (நபி) மரியமின் மைந்தர் ஈஸா (நபி) ஆகியோரின் நாவினால் சபிக்கப்பட்டார்கள். அவர்கள் மாறுசெய்ததும் வரம்பு மீறியதும் இதற்குக் காரணம். அவர்கள் செய்து கொண்டிருந்த தீமையிலிருந்து ஒருவர் மற்றவரைத் தடுக்காமலிருந்தனர். அவர்கள் செய்து கொண்டிருந்தது தீய செயல்." (5:78,79)



கடமைகளை விட வேறு சில கடமைகளுக்கு முக்கியத் துவம் தருவதும் முஸ்லிம்களின் வீழ்ச்சிக்குக் காரணம்.

உதாரணமாக. தொழுகையை விட நோன்புக்கு அதீத முக்கியத் துவம் தரப்படுகிறது. பட்டிணங்கள் முதல் பட்டி தொட்டிகள் வரை முஸ்லிம்கள் வாழும் பூமியில் ரமழான் நோன்பை அனைவரும் தவறாமல் நோற்கின்றனர்.

எவரும் நோன்பை விடுவதில்லை. இது நல்லதே சரியானதே. ஆனால் நம்மில் பலர் குறிப்பாக பெண்கள் பலர் தொழுகையை நிறை வேற்றுவதில் மெத்தனமாக இருக்கின்றனர். தம் வாழ்நாளில் அல்லாஹ்வுக்காக ஒரு ஸஜ்தாவோ, ருகூவோ செய்தறியாதவர்களைக் கூட காண முடிகிறது.

திருக்குர்ஆனில் அல்லாஹ் தொழுகையை யும் ஸகாத்தையும் எட்டு வசனங்களில் ஒன்றாக இணைத்துக் கூறியிருக்கிறான். ஆனால், நம்மில் பலர் தொழுகைக்குத் தரும் முக்கியத்துவத்தை ஸகாத்துக்குத் தருவதில்லை.

நபித்தோழர் இப்னு மஸ்ஊத் (ரழி) கூறினார் கள், தொழுகையை நிலை நாட்டும் படியும் ஸகாத் கொடுக்கும்படியும், எங்களுக்குக் கட்டளையிடப்பட்டது. எனவே யார் ஸகாத் கொடுக்கவில்லையோ அவருக்குத் தொழுகையே இல்லை. (நூல்: தப்ரானீ)

ஸகாத்தையும் தொழுகையையும் பிரித்துப் பார்ப்பவனை எதிர்த்து நான் நிச்சயமாகப் போர்தொடுப் பேன் என்று அபூபக்கர் சித்தீக் (ரழி) கூறினார்கள் (நூல்: புஹாரி, முஸ்லிம்)

நான் ஒரு நபி என்று கூறித் திரிபவர்களையும் அவர்களைப் பின்பற்றுவதாகக் கூறும் மத மாறியவர்களையும் எதிர்த்துப் போரிட வேண் டும் என்பதைப் போலவே ஸகாத்தைத் தர மறுப்பவர்களையும் எதிர்த்துப் போரிட வேண்டும் என்பதில் நபித்தோழர்கள் ஒத்த கருத்துடனிருந்தனர். இக்கருத்தில் எவரும் மாறுபடவில்லை. இப்படியிருக்க சில கடமைகளை நாம் முக்கியத்துவப்படுத்தி சில கடமைகளை ஒரேயடியாகக் கைவிடுவதும் நம் வீழ்ச்சிக்குக் காரணம்.

வரலாற்றில் முதன்முதலாக ஏழைகளின் உரிமைகளை மீட்பதற்காக (தம்குடி மக்களுக்கு எதிராகவே) ஒரு போரை நடத்திய அரசு உண்டென்றால் அது இஸ்லாமிய அரசுதான்.

4) கட்டாயக்கடமை (ஃபர்ளு)களையும் கடமை (வாஜிப்) களையும் விட நஃபில் (உபரி வணக்கங்)களுக்கு நாம் முக்கியத்துவம் தருகின்றோம். சிலர் இறைத்துதிகளுக்கு (திக்ர், தஸ்பீஹ்களுக்கு) தரும் முக்கியத்துவத்தை கடமைகளுக்கு குறிப்பாக சமூகக் கடமை களுக்குத் தருவதில்லை.

பெற்றோரைப் பராமரிக்க வேண்டும். உறவு களைப் பேண வேண்டும். அண்டை வீட்டா ரிடம் அழகிய முறையில் பழக வேண்டும். பலஹீனமானவர்கள் மீது அன்பு செலுத்த வேண்டும் அனாதைகளையும், ஏழைகளையும் அரவணைத்திட வேண்டும். சமூக அநீதிகள் அரசியல் அநீதிகளுக்கு எதிராகப் போராட வேண்டும் இவை சமூகக் கடமைகள்.

இவற்றையெல்லாம் பின்னுக்குத் தள்ளி விட்டு திக்ரு, தஸ்பீஹ்களுக்கு மட்டுமே முதலிடம் தருகின்றோம். இதனாலும் நாம்

வீழ்ந்தோம் வீழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

*5)* சமூக நலன் சார்ந்த வணக்கங்களான ஜிஹாத், மார்க்கச் சட்டங்களை அறிதல் சமூகப் பிணக்குகளை அகற்றுதல், நன்மைக்கும் இறை யச்சத்துக்கும் பரஸ்பரம் உதவிக் கொள்ளுதல், பொறுமை இரக்கம் ஆகிய நற்பண்புகளைக் கடை பிடிக்கும்படி பரஸ்பரம் நினைவூட்டிக் கொள்தல், நீதியை நிலைநாட்டும்படியும் ஷுறா எனும் கலந்தாலோசனை பற்றியும் ஒருவர் மற்றவருக்கு அறிவுறுத்திக் கொள்ளுதல், சமூக நீதியையும் குறிப்பாக ஒடுங்கிக் கிடப்போரின் நீதியையும் மீட்டெடுப்பது ஆகிய சமூக நலன் சார்ந்த செயல்களும் (இபாதத்) வணக்கங்களே.





இவற்றைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு தொழுகை திக்ரு என்று தனிநபர் நலன்சார்ந்த வணக்கங்களை மட்டுமே நிறைவேற்று கிறோம். இதுவும் நம் வீழ்ச்சிக்குக் காரணம்.

*6)* ஒரு கட்டிடத்தின் அஸ்திவாரம் போன்றது அகீதா எனும் கொள்கை. ஈமான் எனும் ஓரிறை நம்பிக்கை. தவ்ஹீத் எனும் ஏகத்துவக் கோட்பாடு. இஹ்லாஸ் எனும் உளத்தூய்மை இந்த அடிப்படைகளை ஆட்டம்காண வைத்து விட்டு சில உட்பிரிவுச் செயல்களில் முழு வேகம் காட்டுகிறோம். அடிப்படைகளைப் பாழ் படுத்தியவன் இறைவனை அடையமுடியாது என்ற பழமொழியை மறந்து விட்டோம். இவ்வாறு அஸ்திவாரத்தை ஆட்டம் காண விட்டதாலும். நாம் வீழ்ந்தோம் வீழ்ந்து கொண்டிருக்கிறோம்.

*7)* சமுதாயத்தில் ஹராமான பாவமான செயல்கள் பரவிக் கிடக்கின்றன. செய்ய வேண்டிய அவசியப்பணிகள் நிறை வேற்றப் படாமலிருக்கின்றன. இவற்றுக்கு எதிராக போராடுவதை விட (ஹராமா?. ஹலாலா? என்று முடிவுக்கு வர இயலாத) சந்தேகத்துக்கு இடமான பிரச்சனை களுக்கும் (மக்ரூஹான) நற்பண்பு மிக்கவர்கள் செய்வதற்குக் கூச்சப்படும் சிறு தவறுகளான விஷயங்களுக்கும் எதிராக முழுவீச்சில் போராடுகிறோம்.

**ஹராம் என்று தீர்க்கமாகத் தெரிந்துவிட்ட பாவங்களை எதிர்த்துப் போராடாமலிருப்பதே பெரும் தீங்கு.**

போட்டோ எடுப்பது கூடுமா?

இசை கேட்கலாமா?

பெண்கள் நிகாப் எனும் முகத்திரை அணிவது கடமையா?

என்பனவற்றைப் பற்றிப் பேசி பெரும் விவாதத் தீயை மூட்டி இதில் எனது முடிவே சரியானது என்று பொதுமக்களை தம்பக்கம் இழுப்பதிலேயே குறியாக இருக்கின்றனர் நம்மில் சிலர்.

அதே நேரத்தில் இவர்கள் முஸ்லிம் சமுதா யத்தின் நிகழ்கால இருப்பையும், எதிர்காலப் போக்கையும், பூமிப்பந்தின் மேல் பரப்பில் அது நிலைத்திருப்பதையும் தீர்மானிக்கும் பென்னம் பெரும் பிரச்சனைகளை ஏறெடுத்துக் கூடப் பார்ப்பதில்லை.

**– தமிழில் பேராசிரியர் இல்யாஸ் ரியாஜி** M.A.,

# 38 ஆம் ஆண்டில் தா:வா

## இலட்சிய சமுதாயம் அவர்கள் தாம் முஸ்லிம்கள்

**“அல்லாஹ்விடமிருந்து தன்பால் வந்திருக்கும் சாட்சியங்களை மறைப்பவனை விட அநியாயக்காரன் யார்”**

(அல்குர்ஆன்-2:140)

மனித குலத்திற்காக இறைவனால் அருளப் பட்ட இறுதி இறைவழிகாட்டுதலின் சொந்தக்காரரர்கள் முஸ்லிம்கள். இனி மனித இனத்திற்கு ஒரு வேதத்தை இறைவன் அருளப்போவதில்லை. முஹம்மத் (ஸல்) அவர்களுக்குப் பின் இன்னொரு நபி இல்லை.

ஆகவே! இறைவனின் இந்த இறுதி வழிகாட்டுதலை தங்களோடு வாழும் மனிதர் களுக்கு எடுத்துச் சொல்லி அவர்களுக்கு நேர்வழியைக் கொண்டு சென்றிட வேண் டியது முஸ்லிம்களின் கடமை. இந்தக் கடமையை நிறைவேற்றிடுவது, முஸ்லிம் களின் வாழ்க்கையின் ஒரே லட்சியமாக அமைந்திடல் வேண்டும். இந்த இலட்சியத் தைச் சுமப்பதால் அவர்கள்தாம் ஓர் லட்சிய சமுதாயம்.

இதனால் அவர்கள் (ஹைரே உம்மத்) உலகில் தோற்றுவிக்கப்பட்ட சமுதாயங்களி லெல்லாம் சிறந்த சமுதாயம்.

அல்லாஹ்வின் பக்கம், மக்களை அழைத்திட வேண்டிய கடமையை அல்லாஹ் இப்படிப் பிரகடனப்படுத்தினான்.

**“விசுவாசிகளே! அவ்வாறே நடுவுநிலை சமுதாயத்தினராகவும் நாம் உங்களை ஆக்கினோம். ஆகவே நீங்கள் மற்ற மனிதர் களுக்கு வழிகாட்டக்கூடிய சாட்சியாக இருங்கள் ; நம்முடைய தூதர் உங்களுக்கு வழிகாட்டக்கூடிய சாட்சியாக இருப்பார்”**

*(அல்குர்ஆன்-2:143)*

சத்திய இஸ்லாத்தை அதாவது, மனித சமுதாயத்திற்கு அருளிய இறுதி வாழ்க்கை நெறியை ஏனைய சமுதாயத்திற்கு எடுத்துச் சொல்லி வாழ்ந்துகாட்டி அவர்களையும் இஸ்லாத்தின் பக்கம் அழைக்கின்ற பணியை முஸ்லிம்களாகிய நாம் அவசியம் செய்தாக வேண்டும்.

இந்த இலட்சியப் பணியை நிறைவேற்று வதில் பெருமானார் (ஸல்) அவர்கள் காட்டிய அக்கறை, ஆர்வம், நளினம், வேகம், விவேகம், வீரம் அத்தனையையும் நாம் நமது இலட்சியப் பயணத்தில் மேற்கொண்டாக வேண்டும். *(அல்குர்ஆன்-16:125)*

**பெருமானார் (ஸல்) அவர்களின் ஹஜ்-இல்**

அன்று குர்பானின் நாள்

இறைவனின் இறுதி தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள், அங்கு குழுமியிருந்த முஸ்லிம்

களிடம் கேட்டார்கள்.

நான் இறைவனின் தூதை உங்களிடம் ஒப்படைத்துவிட்டேனா?

இந்தக் கேள்விக்கு குழுமியிருந்த முஸ்லிம்கள்

“ஆமாம்! நீங்கள் ஒப்படைத்துவிட்டீர்கள் இதற்கு நாங்கள் சாட்சி”

- எனப்பதில் சொன்னார்கள்.

உடனேயே பெருமானார் (ஸல்) அவர்கள் வானத்தை நோக்கி தன் கைகளை உயர்த்தி

யா! அல்லாஹ் நீயே இதற்கு சாட்சி! என மூன்று முறை சொன்னார்கள். (ஸஹீஹ் முஸ்லிம்)

- பின்னர் அங்கு குழுமியிருந்த மக்களிடம் “இங்கே வந்திருப்பவர்கள், இங்கே வராதவர்களுக்கு இந்தச் செய்தியை எடுத்துச் சொல்லுங்கள். அவர்கள் உங்களை விட நன்றாகப் புரிந்து கொள்பவர்களாக இருப்பார்கள் என பணித்தார்கள்.

(சஹீஹுல் புகாரி :1/234)

இறைவனின் இறுதி தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் இந்தக் கட்டளையை அங்கே குழுமியிருந்த நபித்தோழர்கள், இப்படிச் செயல்படுத்தினார்கள்.

தங்கள், வாகனங்கள் எந்தத் திசையை நோக்கி நின்றனவோ, அந்தத் திசையை நோக்கிப் பயணப்பட்டார்கள். இந்த இறை தூதை எடுத்துச் சொல்லிடுவதற்காக வேண்டி!

(Islam the Misunderstood Religon by Muhammed Qutub)

அவர்களில் பெரும்பாலோர் மீண்டும் அரேபியாவுக்கு திரும்பி வரவே இல்லை.

இவர்களின் அளப்பறிய தியாகம், ஒவ்வறியா உழைப்பு இவற்றால் 25 ஆண்டு காலத்தில் அன்று அறியப்பட்ட உலகின் அரைபகுதி இஸ்லாத்தின் கீழ்வந்தது. (Glimpses of world by Pandit Jawaharlal Nehru)

இப்படி இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் இலட்சிய வீரர்களை அல்லாஹ் இப்படி அழைத்தான் “எவர் அல்லாஹ்வின் பக்கம், மக்களை அழைத்து நற்செயல்களைச் செய்து, நிச்சயமாக நான் முஸ்லிம்களில் ஒருவன் என்று கூறுகின்றாரோ, அவரைவிட சொல்லால் அழகியவர் யார்?”

(அல்குர்ஆன்-41:33)

**வரலாற்றில் இஸ்லாமியப் பிரச்சாரம்**

இஸ்லாம் அரசியல் அதிகாரத்தில் இருந்த போதும், இல்லாதபோதும் முஸ்லிம்கள் வென்றபோதும் வெற்றி பெறாத போதும். எதைப்பற்றியும் கவலைப்படாமல் இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்து கொண்டிருந்தவர் களின் முயற்சிகளால் இஸ்லாம் பரவிக் கொண்டே இருந்தது.



இந்தப் பூமிப்பந்தின் பெரும் பகுதியில் இஸ்லாம் விரிந்து, படர்ந்து இருக்கின்றது என்றால் அதற்கான காரணங்கள் பலப்பல, அதற்கு சமூக காரணங்கள் அரசியல் காரணங் கள், மதம் என்ற அடிப்படையில் அமைந்த காரணங்கள் எனப் பலவும் உண்டு. இவற்றுள் எல்லாம் தலையாயக்காரணம் நிற்காமல், நிறுத்தாமல், தொய்வில்லாமல் உழைத்த பிரச்சார இயக்கங்களே!

இறைவனின் தூதர் (ஸல்) அவர்களின் தலை சிறந்த முன் மாதிரியை அப்படியே அப்பி எடுத்துக்கொண்டு அனைத்து தடைகளையும் கடந்து இஸ்லாத்தில் மக்களை இணைத்துக்கொண்டே இருந்தார்கள்.

T.W. Arnold : The Preaching of Islam




# பெருநாள் சந்திப்பு - விருந்து நிகழ்ச்சிகள்

மகிழ்ந்திருக்கவும், கழித்திருக்கவும், இரண்டு பெருநாள்களை அல்லாஹ் நமக்குத் தந்தான்.

இந்த இரண்டு மனமகிழ் நாள்களையும் நம்மோடு மட்டுமே நிறுத்திக் கொள்ளாமல் அவற்றில் சகோதர சமுதாயத்தைச் சார்ந்தவர்களையும் இணைத்துக் கொள்வதே ஏற்புடையது.

இந்த அடிப்படையில் கடந்த 37 ஆண்டுகளாக "ஈத்மிலன்" என்ற பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சிகளை நாம் தொடர்ந்து நடத்தி வருகின்றோம்.

இந்நிகழ்ச்சியில், சகோதர சமுதாயத்தைச் சார்ந்தவர்களை பெருவாரியாக அழைத்து



1) இஸ்லாத்தை அறிமுகப்படுத்துகின்றோம்.

2) அவர்கள் எழுப்பும் வினாக்களுக்கு பதில் தருகின்றோம்

3) தரமான மதிய விருந்தை பரிமாறுகின்றோம்.

4) இஸ்லாமிய இலக்கியங்களையும் பரிசாகத் தருகின்றோம்.




**5) அனைவரையும் படைத்த அல்லாஹ் வகுத்து வழங்கிய வாழ்க்கை நெறியாம் இஸ்லாத்தை ஏற்றிட அழைக்கின்றோம்.**

இந்த பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சிகளை தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் நடத்தி வருகின்றோம்.

முஸ்லிம்களின் சார்பில் நாம் நடத்தும் பெருநாள் மகிழ்வுப் பகிர்வு, நிகழ்ச்சிகளில், இடம்பெறும் கேள்வி-பதில் நிகழ்ச்சியின் வழி.

முஸ்லிம்கள் தீவிரவாதிகள், குண்டு வைப் பவர்கள் என்று முஸ்லிம்கள் மீது உருவாக்கப் பட்ட பிம்பத்தை உடைத்திருக்கின்றோம். இப்போது நாம் நடத்தும் நிகழ்ச்சிகளில் இதுபோன்ற வினாக்கள் எழுவதில்லை.

தலித் மக்களுக்கு முஸ்லிம்கள் அன்றைய நாட்களில் எந்த உதவியும் செய்யவில்லை என்று முஸ்லிம்களின் இஸ்லாத்தின் எதிரிகள் விதைத்து வந்த நச்சுக் கருத்துக்களை வீழ்த்தி இருக்கின்றோம்.

அம்பேத்கர் அவர்களுக்கு முஹம்மத் அலீ ஜின்னா அவர்கள் செய்த உதவிகள், முஸ்லிம் கள் செய்த உதவிகள், அதற்கு அம்பேத்கர் சொன்ன நன்றி நிறைந்த சொற்கள் இவற்றைப் பட்டிய லிடுகின்றோம்.

அன்றைய நாட்கள் தொட்டே முஸ்லிம் களுக்கிடையிலும் ஜாதிகள் இருக்கின்றன என்றொரு பொய்ப்பிரச்சாரம் தொடர்ந்து கட்டவிழ்த்து விடப்படுகிறது. நமது பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சிகள் வழி இவற்றிற்கு சம்மட்டி அடி தந்து விடுகின்றோம்.

முஸ்லிம்களிலும் ஜாதிகள் இருக்கின்றது என்ற பொய்ப்பிரச்சாரத்தையும், பொடிப் பொடியாக்கி இருக்கின்றோம்.

இந்நிகழ்ச்சிகளின் வழி பலர் இஸ்லாத்தை ஏற்றுள்ளார்கள். நிச்சயமாக நிகழ்ச்சியில் கலந்துகொள்பவர்கள் இஸ்லாத்தின் பக்கம் நெருங்கி வந்துள்ளார்கள். காலப்போக்கில் அவர்களும் இஸ்லாத்தை ஏற்பார்கள். அல்ஹம்து லில்லாஹ். அல்லாஹ்வுக்கே அனைத்து புகழும்.

இந்த வகையில் பெரும் தொகை ஒன்றை செலவு செய்து வருகின்றோம். நாம் ஒவ்வொரு வருக்கும் நிச்சயமாக சகோதர சமுதாயத்தைச் சார்ந்த நண்பர்கள் பலர் இருக்கவே செய்கின் றார்கள். நமது பெருநாள்களில் அவர்களையும் அழைத்து நாம் தயார் செய்யும் உணவைப் பரிமாறி, இஸ்லாத்தை அறிமுகப்படுத்திடும் இலக்கியங்களையும் வழங்கினால் இல்லந் தோறும் இஸ்லாம், இனிதே சென்றடையும்.

**இன்ஷா அல்லாஹ்.**




# தாஃவா சுற்றுப் பயணங்கள்

**தா**ஃவா சுற்றுப் பயணங்கள் என்பவை கிராமங்களுக்குச் சென்று இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் பயணங்களாகும்.

1980-இல் தொடங்கி வருடந்தோறும் நூற்றுக் கணக்கான மக்களைக் கிராமங்களில் சந்தித்து வருகின்றோம். அவர்களுக்கு இஸ்லாத்தை எடுத்துச் சொல்லி இஸ்லாத்தின் பக்கம் அழைக்கின்றோம். படிக்க முடிந்தவர்களுக்கு இஸ்லாத்தை அறிமுகப்படுத்திடும் இலக்கியங்களையும் இலவசமாக விநியோகித்து வருகின்றோம்.

இதுவரை பேருந்துகளிலும், வாடகை கார்களிலும் பயணம் செய்து, கிராம மக்களைச் சென்றடைந்து இஸ்லாத்தை











எடுத்துச் சொல்லி வந்தோம். சந்திக்க வேண்டிய சிரமங்கள் பலப்பலவாக இருந்தன. சொந்த வாகனம் இல்லாதது மிகப்பெரியதொரு குறையாக இருந்தது. குறித்த நேரத்தில் எதையும் செய்ய முடியாத வர்களாக இருந்தோம்.



அல்லாஹ்வின் மிகப்பெரிய கருணையினால் இந்த வருடம் இந்தத் தாஃவா சுற்றுப் பயணங்களுக்கென ஓர் சொந்த வாகனத்தை அல்லாஹ் அருளச் செய்தான்.



இந்த சொந்த வாகனம் வந்த பின்னர் நமது தாஃவா பயணங் கள் விறுவிறுப்படைந்துள்ளன. அத்தோடு நாம் பல தூரத்துக் கிராமங்களையும் விரைவில் சென்றடைந்து விடுகின்றோம். எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே!

இதனால் அல்லாஹ் நம் மூலம் ஹிதாயத்தை வழங்கு பவர்களின் எண்ணிக்கையும் அதிகப்படுத்தியுள்ளான்.








இந்தத் தாஃவா சுற்றுப் பயணங்கள் ஒரு பெரும் உண்மையை நமக்கு உணர்த்தின அது,

ஜாதிய வன்கொடுமைகள் அவற்றின் குரூரம் குறையாமல் நமதுகிராமப் புறங் களிலும் நகர்ப் புறங்களிலும், கொட்டிக் கிடக்கின்றன. அவற்றை நிறுத்துவதற்காக ஒரு பெரும் போராட்டத்தை தலீத் மக்கள் - தாழ்த்தப்பட்ட மக்கள், அமுக்கப்பட்டு ஒடுக்கப்பட்ட மக்கள் மேற்கொண்டு வருகின்றார்கள்.

அவர்கள் ஜனநாயகப் போராட்டங்கள் முதல் ஆயுதந் தாங்கியப் போராட்டங்கள் வரை எல்லா வகையிலும், போராடிப்



பார்த்துவிட்டார்கள்.

ஜாதியக் கொடுமைகள் நாளுக்கு நாள் அவற்றின் வன்மத்திலும் குரூரத்திலும் அதி கரித்தே வருகின்றன. குறைந்த பாடில்லை.

பல தலீத் தலைவர்கள் தங்கள் வாழ் நாளெல்லாம் இதற்காகவே செலவிட்டுப் பார்த்துவிட்டார்கள். எந்த நிலையிலும் அவர்களுக்குத் தீர்வு கிடைக்கவில்லை.

ஆனால் யாரெல்லாம் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்களோ அவர்கள், ஜாதிய கொடுமை களிலிருந்து முற்றாக விடுதலை யடைந்து விட்டார்கள். அவர்கள் மட்டு மல்ல, அவர்களின் சந்ததிகளும் விடுதலை யடைந்துவிட்டன.

## தாத்தா ஜாதிக் கொடுமைகள் என்றால் என்ன?

அப்படி விடுதலை அடைந்தவர்களின் பேரன் ஒருவன் தன் தாத்தாவிடம் இப்படிக் கேட்டான்.

"தாத்தா தலீத்கள் என்றும், ஜாதிக் கொடுமைகள் என்றும் பேசுகின்றார்களே, அது என்ன?"

இதனைக் கேட்ட தாத்தா கண்ணீர் வடித்தாராம். நாம் இஸ்லாத்தை ஏற்றுப் பூரண விடுதலையைப் பெற்றுத் தந்திருக்கா விட்டால், நமது பேரனும் அதனால் பாதிக் கப்பட்டவர்களாக அல்லவா இருந்திருப்பான். நாம் இஸ்லாத்தை ஏற்றதால் நம் கண் முன்னாலேயே நமது ஜாதி ஒழிந்துவிட்டது என்று பெருமிதம் கொண்டாராம்.

(அவருடைய வேண்டுகோளின்படி அவருடைய பெயரை இங்கே இடம்பெறச் செய்யவில்லை)

இப்படி 32 கோடி மக்கள் இந்தியாவில் இருக்கின்றார்கள் விடுதலையைத் தேடிட அந்த விடுதலை மார்க்கத்தின் சொந்தக்காரர்களா கிய முஸ்லிம்கள், அந்த மார்க்கத்தை இந்த மக்களிடம் கொண்டு சேர்ப்பார்களாக.

இன்ஷா அல்லாஹ்.




# தாஃவா கருத்தரங்கங்கள்

தமிழ் நாடெங்கும் நடத்தப்படும் கருத்தரங்கங்கள், இந்திய பெருங்குடி மக்கள் எதிர் நோக்கும் பல்வேறு பிரச்சனைகளுக்கும் ஆண்டாண்டு காலமாக மக்களைக் கவ்விப் பிடித்துவரும் பிரச்சனைகளுக்கும் இஸ்லாத்தில் தான் தீர்வு உண்டு.

இஸ்லாம் வழங்கிடும் தீர்வை விளக்கிச் சொல்லி, அதே மக்களை இஸ்லாத்தின் பக்கம் அழைக்கும் கருத்தரங்கங்களே இந்தத் தாஃவா கருத்தரங்கங்கள்.

இதில் பொதுவுடமை கருத்தைச் சார்ந்தவர்கள், திராவிட இயக்கத்தைச் சார்ந்தவர்கள் தமிழ்த்தேசியம் பேசுவோர், ஜனநாயகம், மத சார்பின்னை ஆகியவற்றை நம்பி நிற்போர் அனைவரும் அழைக்கப்படுகின்றார்கள்.

இவர்கள் அனைவரும் அவரவர்களின் கருத்துக்களைச் சொல்லிட முழுமையான கால அவகாசம் வழங்கப்படுகின்றது.

இவர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொன்னபின் இஸ்லாம் இந்த பிரச்சனைகளை தீர்த்து வைக்கும் என்று தெளிவுபடுத்தப்படும்.

இறுதியில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்கள் எப்படி இஸ்லாம் தங்கள் பிரச்சனையைத் தீர்த்தது என்பதை விளக்கிச் சொல்வார்கள்.

பல நேரங்களில் கேள்விப் பதில் நிகழ்ச்சிகளும் இடம் பெறும். இதன்மூலம் கலந்து கொள்பவர்கள் அனைவரது ஐயங்களும் தெளிவுப்படுத்தப் படுகின்றன.

ஒருநாள் நடைபெறும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்பவர்கள் அனைவருக்கும் மதிய உணவும் ஏற்பாடு செய்யப்படுகின்றது.

இந்தக் கருத்தரங்கங்கள் பல்வேறு தலைப்புக்களிலும் நடத்தப்படுகின்றன. அவற்றுள் சில

- **தலீத் மக்களும் சமூக விடுதலையும்**
- **எங்கே சமத்துவம், இங்கே கிடைக்கும் வாரீர்**
- **வெற்றிப்பாதை விடுதலையை நோக்கி**










☛ **சாதி ஒழிந்தது**

☛ **செந்தமிழ் நாட்டுச் சேரிகள்**

☛ **சிந்திப்பீர் செயல்படுவீர்**

இந்த விவாதங்கள் பின்னர் நூல்களாகவும் வெளி வந்துள்ளன.

# தாஃவா பயிலரங்கங்கள்

இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் தலையாயப் பணியை, கடமையை நிறைவேற்றிட இளைஞர்கள் முன் வந்திட வேண்டும்.

உண்மையைச் சொன்னால் இந்த மகத்தான இலட்சியத்தை அவர்கள், தங்கள் இலட்சியமாக ஆக்கிட வேண்டும். இந்த இலட்சியத்தின் பக்கம் அவர்களைத் திருப்பி யாக வேண்டும். இதற்காக, அதாவது மக்களை இருளிலிருந்து வெளிச்சத்திற்குக் கொண்டு வந்திடும் இந்த இலட்சியத்திற்கு இளைஞர் களைத் தயார் படுத்திடும் பட்டறைகளே இந்தத் தாஃவா பயிலரங்கங்கள்.

இதில், இஸ்லாத்தை ஏனையோருக்கு எடுத்துச் சொல்வதில், இளைஞர்களிடையே நிலவி வந்த தொடக்ககால தயக்கத்தைப் போக்குகின்றோம்.

இஸ்லாத்தை ஏனையோருக்கு எப்படி நளினமாக எடுத்துச் சொல்வது என்பதைக் கற்றுத் தருகின்றோம். இதில் 3 அல்லது 4 மணிநேர நடைமுறைப் பயிற்சியும் தருகின் றோம். இதர மாற்றுக் கொள்கையைச் சார்ந்த சகோதரர்களை எப்படி எதிர்கொள்வது என்பதற்கான கொள்கை விளக்கங்களையும் தருகின்றோம்.

இதில்

- **இஸ்லாமும் - கம்யூனிசமும்**
- **இஸ்லாமும் - திராவிடக் கொள்கைகளும்**
- **இஸ்லாமும் - மக்களாட்சியும்**
- **இஸ்லாமும் - மதச் சார்பின்மையும்**
- **இஸ்லாமும் - முதலாளித்துவமும்**
- **இஸ்லாமும் - உலகிலுள்ள இதரக் கொள்கைகளும்**
- **இஸ்லாமும் - விஞ்ஞானமும்**

என்ற தலைப்புகளில் மாணவர்களுக்கு முழுமையான பயிற்சி தரப்படுகின்றது.

இந்தப் பயிலரங்கங்கள் நம்மால் கடந்த 25 ஆண்டுகளாக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் நடத்தப்பட்டு வருகின்றன. பயிற்சி பெற்ற பல இளைஞர்கள் இன்று தாஃவா களத்தில் பீடு நடைபோட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

*அல்ஹம்துலில்லாஹ்!*

---



## அன்பகத்தில் தாஃவா

நாம் தாஃவா களத்தில் இஸ்லாத்தை ஏற்றவர்களை பயிற்றுவிக்க மூன்று நிறுவனங்களை நிறுவியுள்ளோம் என்பது அனைவரும் அறிந்ததே. இந்த வரிசையில் மூன்றாவது நிறுவனமே அன்பகம்!.

இது இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களுக்கு, இஸ்லாத் தின் அனைத்துப் பகுதிகளையும் விளக்கிச் சொல்லும் பாடசாலை என்றாலும், இங்கே தாஃவா என்ற இஸ்லாத் தின் பக்கம் மக்களை அழைக்கும் பணியும் நடந்து கொண்டிருக் கின்றது.

இஸ்லாத்தை அறிந்திட நம்மைத் தேடி வருவோருக்கு விளைவோருக்கு இஸ்லாத்தைப் பற்றிய விளக்கங்கள் தரப்படுகின்றன.

இஸ்லாத்தை அறிந்திட விளைவோர் இங்கே எப்போது வேண்டுமானாலும் வரலாம். விளக்கங்களைப் பெறலாம். இஸ்லாத்தை ஏற்கலாம். அங்கேயே தங்கிப் படிக்கலாம்.




# நூல் வெளியீடு என்ற வகையில் விவாத அரங்குகள்

நமது 38 ஆண்டுகால தாஃவாவில் நாம் இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் நூல்களையே அதிகமாக வெளியிட்டு வருகின்றோம். பொதுவாக இஸ்லாமிய இலக்கியங்களையும் வெளியிடுகின்றோம். இதற்காக நிறுவப்பட்டதே வேர்கள் வெளியீட்டகம்.




இதில் ஒவ்வொரு சமுதாயமும், எதிர்கொண்ட பிரச்சனைகள், அநீதிகள், அவற்றிற்கெதிராக அவர்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள், சந்தித்த சிறைகள், சித்திர வதைகள், இறுதியில் அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட வரலாறு, இவையெல்லாம் நாம் வெளியிடும் தாஃவா இலக்கியங்களாக அமைகின்றன.

இதில் இன்றளவும் 50-க்கும் மேற்பட்ட இலக்கியங்களை பல்வேறு மொழிகளிலும் வெளியிட்டிருக்கின்றோம்.

இந்த இலக்கியங்களை வெறுமனே வெளியிடாமல் அவற்றை நாம் வெளியீட்டு நிகழ்ச்சிகளின் வழியே மக்களுக்கு அறிமுகப்படுத்துகின்றோம். ஒவ்வொரு வெளியீட்டு நிகழ்ச்சியும் ஓர் தாஃவா நிகழ்ச்சியே.

இவற்றில் மக்களுக்கு விடுதலையும் நாட்டில் மாற்றத்தையும் கொண்டுவரத்தக்கது இஸ்லாமா? இதர கொள்கைகளா என்பதை நாம் வெளியிடும் நூல்களின் மையப் பொருளாக விவாதிக்கப்படுகின்றது.

எல்லா விவாதங்களிலும் இஸ்லாமே தீர்வு என்பது அனைவரும் ஏற்றுக்கொள்ளும் ஒரு மையப்பொருளாக அமைந்து விடுகின்றது.

அல்ஹம்துலில்லாஹ்!



# “மால்கம்-X” ஷஹீத் (எ) அல்ஹாஜ் மாலிக் அல்ஷாபாஸ் ஷஹீத் நிகழ்ச்சிகள்



சுற்றும் எதிர்பாராத திசையிலிருந்து ஓர் அறிவிப்பு அது. மால்கம்-X (எ) மாலிக் அல் ஷாபாஸ் அவர்கள் கொலை செய்யப்பட்ட பிப்ரவரி திங்களை - அமுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலை மாதமாக பிரகடனப் படுத்தி, அதனை உலகெங்கும் விவாதமாக்கிட வேண்டும் என்பதே!

இதன்வழி உலக இஸ்லாமிய அமைப்புகள் குறிப்பாக Council of Islamic Organizations Chicago, இதனை ஓர் இயக்கமாகவே நடத்தியது. இந்த அமைப்பு 2015-ஆம் ஆண்டு பெரிய அளவில் வெற்றி பெற்றது.

அமெரிக்க அரசு மால்கம்-X (எ) அல்ஹாஜ் மாலிக் அல்ஷாபாஸ்-இன் நாளாக அறிவித்தது. ஆனால் மால்கம்-X (எ) மாலிக் அல் ஷாபாஸ் ஷஹீதாக்கப்பட்ட அதாவது மால்கம்-X (எ) மாலிக் அல்ஷாபாஸ் கொலை செய்யப்பட்டது பிப்ரவரி-21 ஆம் நாளைத்தான் மால்கம்-X (எ) மாலிக் அல் ஷாபாஸ் நாளாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கை அமெரிக்க அரசால் நிராகரிக்கப்பட்டதாகவே இருந்து வருகின்றது.

ஆனால் அமெரிக்காவில் இயங்கும் இன்னொரு இஸ்லாமிய இயக்கமான Centre for Peace அமெரிக்கா மையம் இஸ்லாமிய அமைப்புகளின் குழுமம், Council of Islamic Organization of Chicago ஆகியவை மால்கம்-X





(எ) மாலிக் அல் ஷாபாஸ் நாளை பிப்ரவரி-21 ஆம் நாள்தான் என மையப்படுத்துகின்றன. இதனால் நாம் தாருல் இஸ்லாம் சார்பிலும் இதையே மையப் படுத்தி இஸ்லாமிய பிரச்சாரங் களைச் செய்து வருகின்றோம்.

மால்கம்-X (எ) மாலிக் அல் ஷாபாஸ்-ஐ கொலை செய்தவர் கள் வெள்ளைநிற வெறியர்கள். White Supremacist என்பது இப்போது வெட்ட வெளிச்ச மாகிவிட்டது.



அதனால் அமெரிக்க அரசு மால்கம்-X (எ) மாலிக் அல் ஷாபாஸ் கொலை செய்யப் பட்ட பிப்ரவரி 21-ம் நாளை மக்கள் மன்றத்தில் நினைவு படுத்திட விரும்பவில்லை. அதனால் மே-19 ஐ மால்கம்-X (எ) மாலிக் அல் ஷாபாஸ் நாளாக அறிவித்துள்ளது.

இந்த நாளை அமெரிக்கா விலுள்ள பல மாநிலங்கள் விடுமுறையாக அறிவித்துள்ளன. இந்த ஆண்டு அமெரிக்காவின் இல்லிநாயிஸ் மாநிலமும், கெலிபோர்னியா மாநிலமும் முழு விடுமுறை நாளாக அறிவித்துள்ளன.

மால்கம்-X (எ) மாலிக் அல் ஷாபாஸ் நாளை அவர் கொலை செய்யப்பட்ட நாளை Federal Holiday என்ற தேசிய விடுமுறை நாளாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கை முன் வைக்கப்பட்டே வருகின்றன.

ஆனால் அமெரிக்காவின் பெர்க்கிஸின் முனிசிப்பாலிட்டியும், கெலிபோர்னியா முனிசிப் பாலிட்டியும் 1979 முதலே மால்கம்-X (எ) மாலிக் அல் ஷாபாஸ் பிறந்த நாளை விடுமுறை நாளாக அறிவித்துள்ளன.

அமெரிக்காவிலுள்ள இஸ்லாமிய அமைப்புகளின் குழுமத்துடன் இணைந்து உலகெங்கும் இயங்கும் தாஃவா அமைப்பு கள், இஸ்லாத்தின் பக்கம் அழைக்கும் அமைப்புகள், மனித உரிமை அமைப்புகள் இவையெல்லாம் மால்கம்-**X** (எ) மாலிக் அல் ஷாபாஸ் கொலை செய்யப்பட்ட மாதத்தை, மனித உரிமைகள் போராட்டத்தை விரிவு படுத்திடவும், அமுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்காக நடக்கும் விடுதலைப் போர் களை வலுப்படுத்தவும் குறிவைத்து வேலை செய்கின்றன.

இந்த அமுக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலை இஸ்லாத்தின் மூலம்தான் என்பதே மால்கம்-**X** (எ) மாலிக் அல் ஷாபாஸ் என்ற அல்ஹாஜ் மாலிக் அல்ஷாபாஸ்-ன் முடிவாகும்.

அதையே நம் நாட்டில் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக் கான தீர்வு என்பதை முன் வைத்து நாமும் இந்தியாவின் சில மாநிலங்களில் இந்தப் பிரச்சாரத்தை செய்து வருகின்றோம். இந்த நாளில் மால்கம்-**X** (எ) மாலிக் அல் ஷாபாஸ் என்ற அல்ஹாஜ் மாலிக் அல் ஷாபாஸ் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை மக்கள் மன்றத்தில் விரிவாக எடுத்துச் சொல்லி வருகின்றோம்.

மக்கள் மால்கம்-**X** (எ) மாலிக் அல் ஷாபாஸ் -இன் வாழ்க்கை வரலாற்றை அறிந்திடும் முகத்து மு.குலாம் முஹம்மத் அவர்கள் எழுதிய மால்கம்-**X** (எ) மாலிக் அல் ஷாபாஸ் நூலை, அதாவது ரூபாய் 80 விலையுள்ள நூலை ரூபாய் 50-க்கு விநியோகிக்கின் றோம்.

மால்கம்-**X** (எ) மாலிக் அல் ஷாபாஸ்-இன் வாழ்க்கையை மையப்படுத்தி தமிழக மெங்கும் சிறப்பு தாஃவா நிகழ்ச்சிக்கு ஏற்பாடுகள் செய்கின்றோம்.

இந்த நூல் இப்போது ஐந்தாம் பதிப்பை எட்டியுள்ளது. இந்த நூலைப் படித்துப் பலர் இஸ்லாத்தை ஏற்றுள்ளனர் (அல்ஹம்து லில்லாஹ்)

இந்த நாளில் மால்கம்-**X** (எ) மாலிக் அல் ஷாபாஸ்-இன் வாழ்க்கையில் இஸ்லாம் ஏற்படுத் திய தாக்கத்தை மையப்படுத்தி, துண்டு பிரசுரங் களைப் பல்லாயிரக் கணக்கில் விநியோகித்து வருகின்றோம்.

நாம் தமிழகத்தில் மால்கம்- (எ) மாலிக் அல் ஷாபாஸ்-இன் வாழ்க்கையை முதன் முதலாக தமிழகத்தில் கொண்டு வந்தபோது அப்படியென்றால் என்ன? என்றவர்கள், இப்போது மால்கம்-**X** (எ) மாலிக் அல் ஷாபாஸ்-யின் வாழ்க்கையை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

பலர் அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதை இருட்டடிப்புச் செய்தும், இலக்கியங்களை வெளியிட்டுக் கொண்டி ருக்கின்றார்கள். அதை எதிர்த்தும் பலர் எழுதியுள் ளார்கள்.



இப்படி மால்கம்-**X** (எ) மாலிக் அல் ஷாபாஸ் தமிழக மெங்கும் உலா வந்து கொண்டிருக் கின்றார்கள் வரலாறாக..!

# இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் இலக்கியங்களின் இலவச விநியோகம்

நமது தாஃவா சுற்றுப் பயணங்கள், பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சிகள், இவற்றின்போதும் நமது சார்பில் இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைப்பவர்களும் - மக்களைச் சந்திக்கும் போதெல்லாம், இஸ்லாமியத்தை விளக்கிச் சொல்லும், இலக்கியங்களை இலவசமாக விநியோகித்து வருகின்றார்கள்.

இஃதல்லாமல், சிறைவாசிகள் தம் தபால்கள் எழுதி இந்த நூல்களைப் பெற்று படித்து வருகின்றார்கள்.

சிறைவாசிகளால், பெரிதும் படிக்கும் நூலாக மால்கம்-X (எ) மாலிக் அல் ஷாபாஸ் இருந்து வருகின்றது.

சிறையில் வாடும் கைதிகளில் பலர் சமூக கொடுமைகளுக்கு எதிரான போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள், பின்னர் குற்றச் செயல்களைச் செய்திட தள்ளப்பட்டவர்கள் அல்லது பொய் வழக்குகளில் சிக்க வைக்கப் பபட்ட வர்கள். இவர்கள் மால்கம்-X (எ) மாலிக் அல் ஷாபாஸ் -இன் வாழ்க்கையைப் படித்துவிட்டு, ஒரு பத்தாண்டுகளுக்கு முன்னால் இந்த நூல் என் கையில் கிடைத் திருந்தால், என் வாழ்க்கைப் போக்கே மாறி இருக்கும் என அங்கலாயித்தனர்.

ஏனெனில் மால்கம்-X (எ) மாலிக் அல் ஷாபாஸ் அமெரிக்க நிறவெறியின் சதியால், சிறை, சித்திரவதை என்பனவற்றைச் சந்தித் தவர். பின்னர் புரட்சியாளராய் - நிறவெறி யிலிருந்து லட்சக்கணக்கான மக்களை விடு வித்தவர். சிறைவாசிகள் புரட்சியாளர்களாக மாறிட முடியும் என்பதை எடுத்துச் சொல்லும் நூல் அது.

ஆக சிறைவாசிகள் கேட்கும் போதெல் லாம், இந்த நூல் அவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றது.

மால்கம்-X (எ) மாலிக் அல் ஷாபாஸ்-ஐ



தொடர்ந்து சகோதர சமுதாயத்தைச் சார்ந்த மக்களால் அதிகமாகப் படிக்கப்படும் நூல்கள்.

- இஸ்லாம் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்ட மார்க்கம்.
- இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கையும்
- இஸ்லாம் வழங்கும் தண்டனைகள் - குற்றங்களை அழிக்குமா? வளர்க்குமா?
- பெண்ணின் பெருமைகாத்த இஸ்லாம்
- இஸ்லாம் இதர கொள்கைகளை வெல்லுமா?
- ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம்.
- செந்தமிழ் நாட்டுச் சேரிகள்
- ஜாதி ஒழிந்தது
- சிந்திப்பீர் செயல்படுவீர்
- நாடார் பெருங்குடியினர் ஏன் மதம் மாறினார்கள்?
- அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி என்ன?
- தீண்டாமையைக் கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம்

இந்த இலவச நூல்கள் என்பனவாகும். விநியோகம் குறையாமல் 4 லட்சம் ரூபாய் வரை செலவிடுகின்றோம்.

# திருக்குர்ஆன் இலவச விநியோகம்

**"அல்லாஹ்வின் அழகிய வழிகாட்டுதல்கள் அனைவருக்கும்.**




மனிதன் இந்த உலகில் எப்படி வாழ்ந்திட வேண்டும்? என்பதை விளக்கிச் சொல்லும் அல்லாஹ்வின் அறுதி வேதமே அல்குர்ஆன். இது மனிதர்கள் அனைவருக்காகவும் அருளப்பட்ட வேதம். இதனை அறிந்திட அவாவுதுவோர், தங்கள் முகவரியுடன் நமது அலுவலகத்திற்கு எழுதவும். அல்குர்ஆன் மற்றும் தபால் செலவு இலவசம்"

**இந்த இலவச விநியோகம் முஸ்லிம்களுக்கில்லை.**

இப்படி ஓர் அறிவிப்பை நமது பத்திரிகை வழியாகவும், இதர ஊடகங்கள் வழியாகவும் அடிக்கடி செய்து வருகின்றோம். நாம் விநியோகிக்கும் இலவச மடக்கோலைகளிலும் இந்த அறிவிப்பு இடம் பெறுகின்றது.

இந்த இலவச விநியோகத்தை சகேதர சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் நன்றாகவே பயன்படுத்தி வருகின்றார்கள். வருடந்தோறும் 100 முதல் 120 திருக்குர்ஆன் பிரதிகள், இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன. இதனை படிக்கின்ற சிலர் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டுள்ளனர். அல்லாஹ்வே நேர்வழியின்பால் மக்களை ஈர்ப்பவன். புகழுக்குரியவன்.

# இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்கள் வழி தாஃவா

இஸ்லாத்தை மக்கள் மனதில் பதிய வைப்பதற்கான சிறந்த வழி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களின் வாழ்வும் அவர்கள் தரும் விளக்கங்களும்.

இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்கள், சமூக நீதிப்போராளிகளாக இருந்திடும் போது அவர்கள் தாங்கள் ஏன் போராளிகளாக மாறினோம்.

தாங்கள் ஏன் போராளிகளாக மாறினோம், சொன்னா - என்னென்ன தீர்வுகளைத் தேடினோம். அதில் கிடைத்தவை என்னென்ன? இறுதியில் ஏன் இஸ்லாத்தைத் தேர்ந்தெடுத்தோம். இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டபின் அவர்கள் எப்படி சமூகக் கொடுமைகளிலிருந்து விடுதலை அடைந்தோம்.

எத்தகையதொரு வாழ்க்கையைப் பெற்றோம் என்பனவற்றை விளக்கிச் சொல்லிடும் போது மக்கள் மனமாற ஏற்றுக் கொள்கின்றார்கள். இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டு விடுதலையடைந்த சமூகப் போராளிகளின் வாழ்க்கையை அவர்களைக் கொண்டே விளக்கிச் சொல்வதோடு, அவர்களின் வாழ்க்கை வரலாற்றை நூலாகவும் கொண்டு வருகின்றோம்.

நூல் வெளியீட்டு நிகழ்ச்சிகளையும் நடத்துகின்றோம். யதார்த்தங்களை உணருபவர்கள் இஸ்லாத்தில் இணைகின்றார்கள். பின்னர் இஸ்லாத்தை பிரச்சாரமும் செய்கின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ்.

அந்த வகையில் வெளிவந்த சில நூல்கள்

- **ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம்**
- **கூரியூர் ஜின்னா ஷஹீத் (வாழ்க்கை வரலாறு)**
- **சாதி ஒழிந்தது (தலீத் எதிர்போரின்)**
- **செந்தமிழ்நாட்டுச் சேரிகள் (இஸ்லாத்தை ஏற்ற தனி மனிதரின் வாழ்க்கை)**

என விரிவடைகின்றன. இதில் ஜாதி ஒழிந்தது என்ற நூல் ஆங்கிலம், ஹந்தி, கன்னடம் ஆகிய மொழிகளில் வெளிவந்துள்ளது.

# இஸ்லாத்தை ஏற்றக்கொண்டவர்களின் பிரச்சனைகளில் உதவி

38 ஆண்டுகாலமாக தாஃவா களத்தில் நாம் சந்தித்த வழக்குகள் பலப்பல; அவற்றை நாம் எதிர் கொண்டோம், வெற்றி கொண்டோம்.

சில நேரங்களில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்கள் மீது வழக்குகளைத் தொடர்ந் துள்ளார்கள். அந்த வழக்குகளையும் எதிர் கொண்டு வருகின்றோம்.

தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்கள் சமூக தளத்தில் போராடிக் கொண்டிருக்கும் போது அவர்கள் மீது பல்வேறு வழக்குகள் புனையப் படுகின்றன. இந்த வழக்குகள் அவர்கள் சமூகத் தளத்தில் போராடியதற்காகப் புனையப்பட்ட வழக்குகளாகும். ஆனால் வழக்குகளில் காட்டப் படும் காரணங்கள் வேறு வேறாக இருக்கும். ஆகவே இவை பொய் வழக்குகள் என்பது உறுதி.

இந்நிலையில் இந்தச் சமூகப் போராளிகள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டால் அவர்களை அப்படியே ஏற்றுக்கொள்கின்றோம். வழக்கு களில் சட்ட ரீதியான உதவிகளை வழங்கி வருகின்றோம்.

இந்த வகையில் எதிர்படும் செலவுகளுக்கு முழுமையாகப் பொறுப்பேற்று வருகின்றோம். பல வழக்குகளிலிருந்து அவர்களை விடுவித் திருக்கின்றோம்.

பல நேரங்களில் இந்துத்துவவாதிகள் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ள வருபவர்களை வழி மறிக்க, காவல் நிலையங்களை நாடுகின் றார்கள். இதனால் ஏற்படும் சிரமங்களையும் எதிர்கொண்டு அந்த மக்களுக்கு சுதந்திரமான சூழலை ஏற்படுத்தி இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ள வேண்டிய சட்ட உதவிகளை நல்கி இருக் கின்றோம்.

# மடக்கோலைகள் 'வாழ்வின் நோக்கம்'

அதீத வேகத்தோடு மனிதன் இயங்கு கின்றான். சரியாக உணவுண்ணக் கூட நேரமில்லை. சம்பாதிக்கின்றான். சில பல நேரங் களில், சாதிக்கின்றான். ஆனால், இந்த உலகில் நாம் ஏன் வாழுகின்றோம். மரணம் என்றொன்று நம்மையும் பிடிக்குமே! மரணம் வரைதான் வாழ்க்கையா? இல்லை, அதற்கு மேலும் உண்டா? என்பனவற்றை சிந்திக்க தவறி விடுகின்றான்.

உண்மையைச் சொன்னால் இந்த உண்மை களின் பக்கம் அவன் தன் கவனத்தையே திருப்பிட இயலுவதில்லை. நேரமில்லை.

யதார்த்தங்கள் எதிர்படும்போது மலைக்கின் றான். அதனால் அவனது கவனத்தை வாழ்வின் நோக்கத்தை நோக்கத்திருப்பிவிட வேண்டிய திருக்கின்றது.

இந்த அரிய பணியை நாம் வெளியிட்டுள்ள வாழ்வின் நோக்கம் என்ற மடக்கோலை தாரள மாக செய்தது, சாதித்தது. அல்ஹம்துலில்லாஹ்.

தங்களுடைய வேகமான வாழ்க்கையினூ டேயும் நாம் தந்திடும் "வாழ்வின் நோக்கம்" என்ற சிற்றேட்டை படித்தார்கள். ஏனெனில் அது அவர்களை நின்று சிந்திக்க வைத்தது.

அல்லாஹ்வின் அழகியத் திருப்பெயரால்

**வாழ்வின் நோக்கம்**

இன்றைய உலகம் வேகமாக ஓடிக் கொண்டிருக்கின்றது. மனிதனும் அதன் ஓட்டத் திற்கு ஈடு கொடுத்து ஓடிக் கொண்டிருக்கின் றான். நிறைய சாதித்திருக்கின்றான்.

இன்னும் சாதிக்க சளைக்காமல் உழைக் கின்றான். ஆனால் சில அடிப்படை விஷயங் களைப் பற்றி சிந்திக்க மறந்து விட்டான்.

அவை,

**நாம் எதற்காக படைக்கப்பட்டோம்?**

**எங்கிருந்து வந்தோம்?**

**மரணம் ஒரு நாள் நம்மை பீடித்துக் கொள்ளுமே!**

**அதன்பின் நாம் எங்கே செல்வோம்?**

என்பவை.

இந்த சிற்றேட்டில் " இறைவன் உங்களுக்காக அருளிய வாழ்க்கை வழிகாட்டு தலை அறிந்திட வாசியுங்கள் அல்குர்ஆன்-ஐ தமிழாக்கம் இலவசமாகவே அனுப்பித் தருகின் றோம் எனக்கூறி அவர்களின் கவனத்தை அல்குர்ஆனின் பக்கம் திருப்புகின்றோம்.

என்ன ஆச்சர்யம்! அல்குர்ஆனை வாங்கு கின்றார்கள், படிக்கின்றார்கள், பலர் இஸ்லாத் தையும் ஏற்றிருக்கின்றார்கள். அவர்களுக்கு நேர்வழியை நல்கிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.

வாழ்வின் நோக்கம் என்ற இந்த மடக் கோலைகளை லட்சக்கணக்கில் விநியோகித்துள் ளோம். இன்னும் விநியோகித்து வருகின்றோம். (மாஷாஅல்லாஹ்)

# இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்கள் எப்படி வாழுகின்றார்கள்..?

தாஃவா களம் - இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் - களம், தூர நோக்கோடும், தொலை நோக்கோடும் பார்த்திட வேண்டிய ஒன்று.

இந்த வகையில் நாம் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட தனி மனிதர்களும், குடும்பங்களும் எப்படி வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்..? என்பதை ஓர் கள ஆய்வு மூலம் வருடத்தில் குறையாமல் ஒரு முறையாவது கண்டு வருகின்றோம்.

அல்லாஹ்வின் மிகப்பெரிய கருணையினால் அவர்கள் தொடக்க காலத்தில் எதிர்கொண்ட பிரச்னைகளிலிருந்து நிச்சயமாக வெளியே வந்திருக்கின்றார்கள்.

முஸ்லிம் சமுதாயம் அவர்களை அன்போடு அழைத்து ஆதரவு செலுத்தி வருகின்றார்கள். சமத்துவத்தை எதிர்பார்த்து வந்த மக்கள் அதனை நன்றாக அனுபவிக்கின்றார்கள். அவர்களில் பலர் முஸ்லிம் முஹல்லாக்களின் தலைவர்களாகவும், செயலாளர்களாகவும் பொறுப்பேற்று முஸ்லிம் முஹல்லாக்களை நடத்தி வருகின்றார்கள்.

இவர்களின் இளவல்கள் பலர், ஆலிம் பட்டம் பெற்று தமிழகமெங்கும் உள்ள முஹல்லாக்களில் இமாம்களாக பொறுப்பேற்று, ஐங்கால தொழுகைகளை தலைமையேற்று நடத்தி வருகின்றார்கள். இன்னும் பலர் தங்கள் மக்களை இருட்டிலிருந்து வெளிச்சத்திற்கு கொண்டு வந்திட அதாவது இஸ்லாத்திற்குக் கொண்டு வந்திட உழைத்துக் கொண்டிருக்கின்றார்கள். இதனுடன் அமுக்கப்பட்ட மக்களின் பிரச்சனைகளைத் தீர்த்திடவும் உழைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

பெரும்பாலோர் வாழ்வில் தொழுகையை நிலைநாட்டி வருகின்றார்கள், ஸக்காத்தும் கொடுத்தும் வருகின்றார்கள். குர்பானும் தவறாமல் கொடுக்கின்றார்கள். மிகச் சிலர் திசை மாறியும் பறந்திருக்கின்றார்கள். நல்ல முஸ்லிம்களாக வாழுகின்றார்கள்.

இதற்காக நாம் கடந்த 38 ஆண்டுகளாக முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். (நிலையான, நிறைவான வாழ்க்கை வழிகாட்டலை தந்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.

இந்த வெற்றி சில நல்லுள்ளங்கொண்ட முஸ்லிம் தனவந்தர்களுக்கும் சொந்தம். அவர்கள் இன்னும் உதவிகளைச் செய்து கொண்டிருக்கின்றார்கள். அல்லாஹ் அவர்களுக்கு இம்மையிலும் மறுமையிலும் நற்கூலிகளை நல்கிடுவானாக!

இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்களை அவர்களுடைய பழைய இருப்பிடங்களிலேயே விட்டு விடாமல் முஹல்லாக்களில் குடியமர்த்தும் பணிகளையும் செய்து வருகின்றோம்.

# இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களுக்கான திருமணங்கள்

இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்களை அந்தந்த பகுதிகளிலிருந்து மாற்றி முஹல்லாக்களுக்கு கொண்டு வருகின்றோம். அத்தோடு அவர்களின் திருமணங்களுக்கும் ஏற்பாடு செய்கின்றோம்.

அறவே வசதியில்லாத தம்பதிகளுக்கு அடிப்படையாக குடும்பம் நடத்திட வேண்டிய பொருள்களையும் வாங்கிக் கொடுக்கின்றோம். இதில் எப்போதும் போல் சில நல்ல உள்ளங் கொண்டவர்கள் உதவி செய்து வருகின்றார்கள்.

அல்லாஹ் அந்த அன்பு உள்ளங்களுக்கு நிரம்ப நற்கூலிகளை நல்கிடுவானாக!

**கர்ப்பணி பெண்கள் :** கர்ப்பிணி பெண்கள் இஸ்லாத்தை ஏற்றால் அவர்களுக்கான மகப்பேறு உதவிகளைச் செய்கின்றோம். மருத்துவ செலவுகளையும் கவனித்து வருகின்றோம். இந்த வகையில் ஒரு பெரும் தொகையை ஆண்டு தோறும் செலவிட்டு வருகின்றோம். அல்ஹம்துலில்லாஹ்.

**கல்வி உதவிகள் :** இஸ்லாத்தை ஏற்றவர்களின் குழந்தைகள் கல்வியைப் பெறுவதில் தடைகள், சிரமங்கள் இவை இருந்தால் அவற்றையும் அகற்றிட எங்களால் முடிந்த உதவிகளைச் செய்து வருகின்றோம்.

# பிற மாநிலங்களில் தாஃவா : 1990 முதல் தொடரும் பணி

## கன்னடம், டெல்லி, உத்திரபிரதேசம், பீகார், கேரளம்

38 ஆண்டு காலமாக தொடர்ந்து வரும் இந்தத் தாஃவா நெடும் பயணத்தில், நாம் 1990 ஆம் ஆண்டு முதலே அண்டை மாநிலங்களில் மெல்ல, மெல்ல, ஆனால் உறுதியாக்கினோம்.

1990 ஆம் ஆண்டு கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாவின் புறப்படு நீயும் இஸ்லாத்தை நோக்கி என்ற நூலை ஆங்கிலத்தில் வெளியிட்டோம். இந்த வெளியீடு அப்போது நாம் மயிலாடுதுறையில் நிறுவி நடத்தி வந்த "இலக்கியப் பணிமனை" என்ற வெளியீட்டகத்தில் வெளிவந்தது. அதன் ஆங்கில ஆக்கத்திற்கு Let us March towards Islam என்று பெயர்.

அதனைத் தொடர்ந்து நாம் மேற்கொண்ட முயற்சிகளின் வழி 1995-ஆம் ஆண்டு அலிஹர் பல்கலைக் கழகத்தின் ஹிந்தி துறையில் ஹிந்தியில் வெளியிடப்பட்டது. அன்றே நமது தாஃவா நமது தலைநகர் டெல்லியில் தொடங்கி, ஹிந்தி கூறும் உலகெங்கும் பரவியது.

2002 ஆம் ஆண்டில் இந்த நூலைக் கன்னட மொழியில் மொழிப் பெயர்த்திருந்தோம். நமது வேர்கள் வெளியிட்டோம். எடுத்த எடுப்பிலேயே சுமார் 10,000 பிரதிகளை இலவசமாக விநியோகித்தோம்.

அதன்பின் அங்கு தாஃவா களத்தில் வேலை செய்யும் பல்வேறு அமைப்புகளோடும் நமது (தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட்) இணைந்து பல நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தோம். அவர்கள் ஏற்பாடு செய்த தாஃவா நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டு உரையாற்றினோம்.

இந்த முயற்சிகள் வழி பலர் இஸ்லாத்தை ஏற்றார்கள். பல்வேறு நிறுவனங்களிலும் இணைத்து கல்வியும் கற்றார்கள்.

தொடர்ந்து டி.எம்.உமர்ஃபாருக் அவர்களின் ஜாதி ஒழிந்தது என்ற நூலை நவம்பர் 2013-ஆம் ஆண்டு கன்னட மொழியில் வேர்கள் வெளியீட்டகத்தின் சார்பில் மொழிப் பெயர்த்து வெளியிட்டோம். அதிலும் சுமார் 5000 பிரதிகள் வரை இலவசமாக விநியோகித்தோம்.

ஹந்தி மொழிப் பெயர்ப்பின் நூலின் வெளியீட்டு நிகழ்ச்சி உத்திரப்பிரதேசத்தின் தலை நகர் லக்னோவில் தொடங்கி இந்த இலவச விநியோகம் இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. அல்ஹம்துலில்லாஹ்.

கன்னட மாநிலத்தைப் பொறுத்தவரை தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் நிரம்பவே வாழுகின்றார்கள். ஆகவே நமது தாஃவா இலக்கியங்கள் தமிழில் வருபவையெல்லாம், பெங்களூரிலும் வெளியிடப்படுகின்றன. அவற்றைத் தொடர்ந்து தமிழ் கூறும் நமது சகோதர சமுதாயத்தவர்களுக்கு இலவசமாகவும் விநியோகிக்கப்படுகின்றன.

2010-ஆம் ஆண்டில் "ஜாதி ஒழிந்தது" என்ற (டி.எம்.மணி) டி.எம்.உமர் ஃபாருக் அவர்களின் நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வேர்கள் வெளியீட்டகத்தின் வழி வெளியிட்டோம். இந்த வெளியீடு டெல்லியில் நடந்தது. ஆங்கிலத்தில் நூலின் பெயர் (End Of Casteism)

ஆங்கில நூல் வட மாநிலத்து வாசகர்களிடையே ஏற்படுத்திய தாக்கம் அலாதியானது. இவர்கள் தந்த அழுத்தத்தால்தான் இதன் ஹிந்தி வெளியீடு தயாரானது. டெல்லியில் நடந்த நமது நூல் வெளியீட்டு விழா நிகழ்ச்சி E-TV உலகமெல்லாம் பரப்பியது குறிப்பிடத்தக்கது.

இதனடிப்படையில் பல வெளிநாட்டு அழைப்புகள் நமது உமர் ஃபாருக் அவர்களுக்கு வந்தது குறிப்பிடத்தக்கது.

இப்போது ஆங்கில நூலும், ஹிந்தி நூலும் ஒன்றுபோல் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன.

பீகார் - பீகார் மாநிலத்தின் தலைநகர் பாட்னாவில் வருடந்தோறும் ஒரு புத்தகக் கண்காட்சி மாநில அளவில் நடைபெறுகின்றது. இந்தப் புத்தகம் கண்காட்சியில் "ஜாதி ஒழிந்தது" நூல் ஹிந்தி மொழியிலும் ஆங்கில மொழியிலும் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன. அங்குள்ள நல்லுள்ளம் கொண்டவர்கள் இதனை செய்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ்.

இப்படி நமது தாஃவா பணிகள் அகில இந்திய அளவில் நிலைகொண்டு பரவி வருகின்றது.

# அன்பகத்தின்

## அன்பான வேண்டுகோள்!

**அன்பார்ந்த வாசகர்களே! அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)**

**எமது இஸ்லாமியப் பிரச்சாரப் பணிகள் 37 ஆண்டுகளைக் கடந்து, 38 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கின்றன. அல்ஹம்துலில்லாஹ்.**

ஒரு நீண்ட நெடும்காலம் கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும், எங்கள் பிரச்சாரங்கள் தொடர்ந்து நடந்து வருகின்றன. அல்லாஹ், எங்கள் வழி பல பிரபல்யங்களுக்கு, நேர்வழியைக் காட்டினான் அல்ஹம்துலில்லாஹ்.

அப்படி இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்களுக்கு இஸ்லாத்தின் செயல்முறை களையும் இஸ்லாத்தின் அனைத்துப் பகுதிகளையும் கற்றுத் தருவதற்கென மூன்று கல்வி நிறுவனங்களை நிறுவியுள்ளோம். அல்ஹம்துலில்லாஹ்.

இந்த மூன்று நிறுவனங்களிலும் பல்லாயிரக்கணக்கானோர் மார்க்க கல்வியை கற்று சென்றுள்ளார்கள். அவ்வாறு நிறுவப்பட்ட மூன்றாவது கல்விக்கூடமே அன்பகம். அதுவும் தன் 10 ஆம் ஆண்டை நிறைவு செய்கின்றது. எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே!

இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கல்வி கற்றுச் சென்றிருக்கின்றார்கள். அன்பகம் கடந்த 10 ஆண்டுகளாக ஒரு வாடகைக் கட்டடத்தில் தான் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இதையும் அடிக்கடி மாற்றிட வேண்டிய நிலை.

**இன்ஷா அல்லாஹ்** அதனை ஒரு சொந்தக் கட்டடத்திற்கு மாற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். அதற்கு உங்கள் நிதி உதவிகளை தாராளமாக வழங்கும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

**அல்லாஹ் உங்களுக்கு அளப்பரிய கூலிகளை வழங்கிடப் போதுமானவன்.**

இவண்,

**மு. குலாம் முஹம்மது,** பேராசிரியர் **இல்யாஸ் ரியாஜி**

ஹாஜி. **அப்துல் ரவூஃப்**

**செக், டி.டி. அனுப்புவோர்**

**DARUL ISLAM FOUNDATION TRUST**

என்ற பெயருக்கு எடுத்து பின்வரும் முகவரிக்க அனுப்பவும்
51/1, மண்ணடி தெரு, 4-வது மாடி, அறை எண்.7, மண்ணடி, சென்னை - 600 001.

website : www.darulislam.in, Email : darultrust@yahoo.com,
Please draw your cheques / **DD in Favour of DARUL ISLAM FOUNDATION TRUST**
**Canara Bank A/c. 1287101017301** Branch St.Mary's Road, R.A.Puram, Chennai.
and send to : 52/1, Mannadi Street, 4th Floor, Room No.7, Mannadi, Chennai - 600 001.
**Mobile : 81481 29887,** Email : darultrust@yahoo.com, website : www.darulislam.in

# வேர்கள் பதிப்பகத்தின் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | சிறையில் எனது நாட்கள் -<br>ஜெய்னப் அல் கஸ்ஸாலி, தமிழில் - மு. குலாம் முஹம்மத் - பக்கம் : 212 | ரூ. 90.00 |
| 2. | ஆஃப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு - மு. குலாம் முஹம்மது | ரூ. 100.00 |
| 3. | சாதி ஒழிந்தது - டி.எம். மணி, ஐந்தாம் பதிப்பு - பக்கம் 132 | ரூ. 50.00 |
| 4. | End of Casteism T.M. Mani பக்கம் -134 | ரூ. 50.00 |
| 5. | அஹமதாபாத் குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் -48 | ரூ. 10.00 |
| 6. | டெல்லி குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் - 48 | ரூ. 10.00 |
| 7. | நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள் - விரிவாக்கப்பட்ட பதிப்பு<br>- மு. குலாம் முஹம்மத் | ரூ. 60.00 |
| 8. | மால்கம் X - மு. குலாம் முஹம்மது, பக்கம் -231 | ரூ. 80.00 |
| 9. | தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம், டி.எம். மணி, பக்கம் -31 | ரூ. 20.00 |
| 10. | செந்தமிழ்நாட்டுச் சேரிகள்- டி.எம். மணி, பக்கம்:94 | ரூ. 40.00 |
| 11. | கர்கரேயை கொலை செய்தது யார்? பக்கம் 453 | ரூ. 250.00 |
| 12. | சிந்திப்பீர் செயல்படுவீர், நா. கோதண்டபாணி, பக்கம் 47 | ரூ. 15.00 |
| 13. | ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம், ப. கோபால கிருஷ்ணன், பக்கம்-84 | ரூ. 40.00 |
| 14. | சாதி ஒழிந்தது- ஹிந்தி - டி.எம். மணி, பக்கம் - 148 | ரூ. 50.00 |
| 15. | நாம் பிரிந்து விடவேண்டாம், பேராசிரியர் கா.மு. இல்யாஸ் ரியாஜி, பக்கம்-292 | ரூ. 175.00 |
| 16. | தாலிபானின் பிடியில், மு. குலாம் முஹம்மத், பக்கம் - 202 | ரூ. 110.00 |
| 17. | தீண்டாமைக்குத் தீர்வு | ரூ. 30.00 |
| 18. | பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு, மு. குலாம் முஹம்மத் பக்கம்-163 | ரூ. 110.00 |
| 19. | பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள், மு. குலாம் மஹம்மத், பக்கம் -143 | ரூ. 90.00 |
| 20. | இஸ்லாமிய நாகரிகம் -<br>முஸ்தஃபா அல் சிபாய், தமிழில் : மு. குலாம் முஹம்மத், பக்கம் - 206 | ரூ. 130.00 |
| 21. | கஷ்மீரின் பாதி விதவைகள், மு. குலாம் முஹம்மத், பக்கம் - 140 | ரூ. 70.00 |
| 22. | எது முதலில்? டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவீ, தமிழில் கா.மு. இல்யாஸ் ரியாஜி | ரூ. 50.00 |
| 23. | சாதி ஒழிந்தது - கன்னடம், | ரூ. 50.00 |
| 24. | அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி என்ன? டி.எம். உமர் ஃபாரூக் | ரூ. 20.00 |
| 25. | கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்? மு. குலாம் முஹம்மத் பக்கம்:48 | ரூ. 30.00 |
| 26. | முஹம்மத் (ஸல்) அவர்கள் ஒரு சகாப்தம் -<br>செய்யித் குதுப், தமிழில் : மு. குலாம் முஹம்மத், பக்கம் 30 | ரூ. 15.00 |
| 27. | இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும், பக்கம் - 120 | ரூ. 50.00 |
| 28. | இஸ்லாம் வழங்கும் தண்டனைகள் | ரூ. 40.00 |
| 29. | இஸ்லாமும் விஞ்ஞானமும்- பக்கம் :48 | ரூ. 30.00 |
| 30. | இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரித்ததா? | ரூ. 50.00 |
| 31. | இஸ்லாமும் பெண்களும் - பக்கம் : 112 | ரூ. 60.00 |
| 32. | இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா? பக்கம் : 84 | ரூ. 70.00 |
| 33. | தேசப்பிரிவினைக்கு யார் காரணம்? - விரிவாக்கப்பட்ட பதிப்பு - மு. குலாம் முஹம்மத் | ரூ. 30.00 |
| 34. | திருக்குர் ஆன் கூறும் பொறுமை -<br>டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவி, தமிழில் : கா.மு. இல்யாஸ் ரியாஜி | ரூ. 80.00 |
| 35. | 26/11 - விசாரணை - நீதித்துறையும் மயங்கியது ஏன்? | ரூ. 220.00 |
| 36. | ஒரு தலித் போராளியின் வாழ்வும், அவர் காட்டிய வழியும் - அ. மார்க்ஸ் | ரூ. 20.00 |

37. முஸ்லிம்களை பூண்டோடு ஒழிக்கத் திட்டம்-
வி.டி. இராஜசேகர், தமிழில் : மு. குலாம் முஹம்மத் - பக்கம் : 16 ரூ. 10.00

38. நாடார் பெருங்குடியினர் ஏன் மதம் மாறினார்கள்? -
திரு. லஜபதிராய், மூத்த வழக்கறிஞர் - பக்கம் :8 ரூ. 10.00

39. குண்டு வெடிப்புகள், யாரால், யாரால்? -
சுவாமி அசிமானந்தாவின் ஒப்புதல் வாக்குமூலம் - அபூ. அஃப்ரஹ் - பக்கம் : 36 ரூ. 25.00

40. இந்து ராஷ்டிராவின் சிற்பி புரோகித்-இன் லேப்டாப்பில் இருந்ததென்ன? பக்கம்: 27 ரூ. 20.00

41. கறுப்பாயி என்கின்ற நூர்ஜஹான். கதை ஆசிரியர் அன்வர் பாலசிங்கத்துடன் நேர்முகம் ரூ.25.00

42. கூரியூர் ஜின்னா ஷஹீத் - மு. குலாம் முஹம்மத், பக்கம் : 84 ரூ. 60.00

43. முஸ்லிம்களும் ஒடுக்கப்பட்டோரும், பக்கம் 16 ரூ. 20.00

44. இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு, எஸ்.எம். முஷ்ரிப், IPS, பக்கம் : 64 ரூ. 30.00

45. சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாதம், காந்திஜி கொலை ஏன்? எப்படி? பக்கம் : 40 ரூ. 30.00

## எமது விற்பனையில். . .

01. கோவை கலவரத்தில் எனது சாட்சியம்-
A.V. அப்துல் நாசர், Ex. M.L.A., எழுத்தாக்கம் : பழனி ஷஹான் ரூ. 100.00

02. மரிஜாப்பி - சி.பி.எம். அரசின் தலீத் படுகொலைகள்-
ராஸ் மாலிக், தமிழில் : இனியன் இளங்கோ, தலித் முரசு ரூ. 100.00

03. குஜராத் கோப்புகள் - மறைக்கப்பட்ட கோர வடிவங்கள் -
ரானா அயூப், தமிழில் : ச. வீரமணி, பாரதி புத்தகாலயம் ரூ. 170.00

### BOOKS IN ENGLISH

01. END OF CASTEISM - T.M. Umar Farooq,
English Rendering : M. Gulam Mohammed, Vergal Pathippagam Rs. 50.00

02. THE GREAT BETRAYAL - Elyass Davidson, By Pharos Media Rs. 695.00

03. MUHAMMED THE PROPHET FOR OUR TIME - Karen Armstrong Rs. 325.00

04. KAFKA LAND - PREJUDICE, LAW AND COUNTER TERRORISM - Manisha Sethi Rs. 350.00

05. WHO KILLED KARKARE -
The Real face of Terrorism in India - S.M. Mushrif, IPS, 5th Edition Rs. 300.00

06. 26/11 - PROBE WAY JUDICIARY ALSO FAILED - S.M. Mushrif Rs. 275.00

07. ASSAM'S DOUBTFUL CITIZENS, FACT OR FICTION - Kamaluddin Ahamed Rs. 60.00

08. MUSLIMS AGAINST PARTITION OF INDIA - Shamsul Islam , Pharos Media Rs. 280.00

09. PANDID RAMPRASAD BISMI, ASHFAQULLAH KHAN (EPITOMS OF HINDU MUSLIM UNITY)
- Syed Naseer Ahamed Rs. 25.00

10. IMAGE AND SUBSTANCE - MODI'S FIRST YEAR OF OFFICE - Nilofar Suhrawardy Rs. 150.00

### BOOKS IN HINDI - VERGAL PATHIPPAGAM

01. ஜாதி ஒழிந்தது

### BOOKS IN KANNADA - VERGAL PATHIPPAGAM

01. ஜாதி ஒழிந்தது - டி.எம். உமர் பாரூக் ரூ. 50.00

02. நீயும் புறப்படு இஸ்லாத்தை நோக்கி - கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் ரூ. 30.00

## வேர்கள் பதிப்பகம்,

52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001. தொடர்ப்புக்கு : 8148129887

வங்கி மூலம் பணம் செலுத்த விரும்புவோர்:
**DARUL ISLAM FOUNDATION TRUST,**
**CANARA BANK** Account 1287101017301
St. Mary's Road, R.A. Puram, Chennai - 600 028

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001.
Editor M. Gulam Mohamed, Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFSET PRINTERS,**
19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.